காலம்

6 மார்ச் 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

584 Parliament St.
(at Wellesley)
Phone : 975 1611

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

R. Pathmanaba Iyer
27-B High Street
Plaistow
London E13 0AD
Tel: 020 8472 8323

உயிர் வாழ்தல்

கிருஷ்ணகுமார்

நாளைக்கு என்ன நடக்கும் என்று யாருக்குத் தெரியும். எதையும் நிச்சயமாகக் கூறுவதற்கில்லை. எதுவும் எப்படியும் நிகழலாம் அல்லது நிகழாமல் போய் விடலாம். இதோ நேற்றிரவு எப்படி இருந்தோம். இன்று காலை என்ன நடந்தது?

நேற்றிரவு, எட்டுமணி இருக்கும். வழமை போல் நண்பர்கள் வந்தார்கள். கதைத்தார்கள். ''மௌனி என்ன எழுதிக் கிழித்தார். மாப்பாசானை ஏன் நாங்கள் படிக்க வேண்டும்'' என்று ஒருவர் கேட்க ''மாக்ஸிய அழகியலுக்கும் 'வலை' சிறுகதைத் தொகுதிக்கும் என்ன தொடர்பு இருக்கிறது'' என்று மற்றவர் கூற கருத்துக்கள் சூடாகி, தணிந்து ஒருவாறு கெழு. சாத்தர், சிவத்தம்பி, மௌனி, மாப்பாசன் இவர்களுடன் நண்பர்களும் புறப்பட ஆரம்பிக்க நேரம் ஒன்பது மணியாகிவிட்டது.

இன்று ரீவியில் வீக்கென்ட்மூவி, Earthling என்றொரு படம். ''பெயர் நன்றாக இருகிறது நின்று பார்த்து விட்டுப் போகலாமே'' நான் மறித்தேன்.

''இல்லை. நேரம் போனால் நாய்களோடு போராட வேண்டும். நீங்கள் பாருங்கள். நாளைக்கு படத்தைப் பற்றிக் கதைப்போம்'' என்று கூறிவிட்டு பதிலை எதிர் பார்க்காமல் போய் விட்டனர். நான் Earthling பார்க்க உட்கார்ந்தேன். நேரம் இரவு 9.30.

பிக்னிக் வந்த இடத்தில் நடுக்காட்டில் தற்செயலாக நடந்த விபத்தில் திடீரென தந்தையும் தாயும் இறந்துவிட கொடிய மிருகங்கள் வாழும் அந்தக் காட்டில் ஒரு சிறுவன் எப்படி உயிர் தப்பி வாழ்ந்து தன் வாழ்வின் மிகுதிப் பகுதியையும் ஏதோ ஒரு நம்பிக்கையுடன் தொடர்கிறான் என்பதுதான் Earthlingஇன் கதை. படம் நன்றாக இருந்தது.

பட்டாளத்திலிருந்து ஓய்வு பெற்ற ஒரு கிழவன் அக்காட்டிற்குள் எங்கோ தொலைவில் உள்ள இறந்து போன தனது காதலியின் இடத்தை நோக்கி போய்க் கொண்டிருக்கிறான். தன்னையே பின் தொடரும் அந்தச் சிறுவனுக்கு கிழவன் சொல்லுகிறான்: ''நீ என்னைப் பின் தொடராதே. உனக்கு எனக்கும் என்ன உறவு. நான் யார் என்பதே எனக்குத் தெரியவில்லை. இதோ பார் இப்படித்தான் ஆற்றில் மீன் பிடிக்கவேண்டும். இப்படித்தான் பொறிகட்டி முயலைப் பிடிக்கவேண்டும். இவற்றை மட்டும் கற்றுக்கொள். என்னை விட்டு விடு.''

காட்டு நாய்கள் சிறுவனைத் துரத்திக்கொண்டு வரும் போது கூட எப்படித் தப்புகிறான் என்றுதான் கிழவன் பார்த்துக் கொண்டு நிற்கிறான். சூழலின் யதார்த்தம். கிழவன் இறந்து சிறுவன் பயணந்தொடர ரூபவாகினி நமோ நமோ தாயே பாடியது. நேரம் நள்ளிரவு 12.00க்கு மேலே.

''உயிர் வாழ்தல்'' பற்றிய அக்கறை எடுக்காது முன்னமே தூங்கச் சென்று இப்போது குறட்டை எழுப்பிக் கொண்டிருக்கிறார்கள் என் மனைவியும் மகனும்.

படம் மேலும் பல எண்ணத் தொடர்களைக் கிளற நானும் தூங்கச் செல்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று அதிகாலை 6 மணியிருக்கலாம். யாருக்குத் தெரியும் சரியாக அப்போது 6 மணிதான் என்று. மிகப் பயங்கரமான சத்தம். குண்டு வெடித்ததா? கட்டடங்கள் தகர்ந்ததா? என்ன நடந்தது. ஒன்றும் புரியவில்லை. பக்கத்தில் கிடந்த மனைவியையும் குழந்தையையும் பார்க்கிறேன். காணவில்லை. வெளியில் ஓடுகிறேன். ''இங்கே வர வேண்டாம். நீங்களும் அங்கிளும் அங்கே நிலத்தில் படுங்கோ. பொம்மரால போய்ஸ் காம்புக்கு அடிக்கிறாங்கள்'' பொம்மரின் பயங்கரமான ஓசைகளுக்கிடையே மனைவியின் பதறும் குரல்.

''அங்கிள் நிலத்தில் படுங்கோ'' என்றேன். வயது போன அந்த மனிதர் எந்த எதிர்ப்பும் இல்லாமல் ''கடவுளே நாங்கள் இண்டைக்கு முடிந்தோம்'' என்று படுத்துக் கொண்டார்.

பொம்மரின் குண்டு வீச்சு தொடர்ந்தது. அதி உயரத்திலிருந்து திடீரென செங்குத்தாக கீழிறங்கி காம்பை நோக்கி குண்டுகளை ஏவி மீண்டும் செங்குத்தாக மெலெழும்பி பொம்மர் புள்ளியாகியது. பொம்மர்களின் இரைச்சல் மனதை நிலைகுலையச் செய்து விட்டது. ஐந்து வருடங்கள் அந்நிய மண்ணில் இருந்து விட்டு சமீபத்தில் நாடு திரும்பிய எனக்கோ உயிர் கையில் இல்லை.

எங்கள் வீட்டிலிருந்து இரண்டாவது வீடே போய்ஸ் காம்ப். காம்போடு ஒட்டியபடி சின்னம்மாக்காவின் வீடு. சின்னம்மாக்காவுக்கு என்ன நடந்ததோ, யாருக்குத் தெரியும். மீண்டும் தாயாகப் போகிற என் மனைவியை நேற்று மாலை சின்னம்மாக்கா வந்து பார்த்து தந்து விட்டுப் போன விழாம் பழங்களும், நெல்லிக்காய்களும் பொம்மரின் அதிர்ச்சியில் கீழே சிதறி விழுந்ததை படுத்தபடியே பார்த்துக் கொண்டிருந்தேன்.

பொம்மர் மேலே எழும்பிய சிறிது நேர இடைவெளியில் தவழ்ந்து கொண்டு மனைவியும் மகனும் இருக்குமிடத்தை அடைந்தேன்.

ஐந்து வயதே நிரம்பிய அச்சிறுவனை சமையல் பாத்திரங்கள் வைக்கும் சீமெந்து தட்டுக்கு அடியில் திணித்துவிட்டு மனைவியும் படுத்திருந்தாள். ''அப்பா அத்தையையும் அம்மாவையும் வரச் சொல்லுங்கோ'' என்று அழுது கொண்டிருந்தான். கடைசி நேரத்தில் பிரியமானவர்கள் அருகில் இருக்க வேண்டுமென்று மட்டும்தான் அவன் ஆசை.

''வெளியில் போக வேண்டாம். திரும்பவும் படுங்கோ'' என்றாள் மனைவி.

எத்தனை குண்டுகள் போடுகிறார்கள் என்று எண்ணினோம். கிட்டத்தட்ட பத்து அல்லது பன்னிரண்டு போட்டிருப்பார்கள். அந்த பிராந்தியமே அதிர்ந்து கொண்டிருந்தது. மூன்று பொம்மர்கள் மாறி மாறி ஏறி இறங்கி தமது தொழிலை கச்சிதமாகச் செய்தன. இன்று வேலைக்குப் போக முடியாது. எல்லா இடமும் தரைமட்டமாகத்தான் இருக்கும் என எனக்குள் எண்ணிக் கொண்டேன்.

பொம்மர்கள் மீண்டும் கீழிறங்கும் போது காம்பிலிருந்து எதிர்ப்பு வெடிகள் கேட்கத் தொடங்கின. ''50 கலிபரால் போய்ஸ் அடிக்கிறார்கள்'' மனைவி சொன்னாள்.

பதினைந்து நிமிடமாக கேட்ட இரைச்சலும் வெடிச்சத்தமும் இப்போதுதான் அடங்கியது. எல்லோரும் வெளியில் வந்தோம். நான் உடனே குண்டுகள் விழுந்த இடத்தைப் பார்க்க போனேன். காம்போடு ஒட்டியபடி இருந்த நான்கு வீடுகள் தாறுமாறாக உடைந்து கிடந்தன. வயிறு பிளந்து குடல் வெளியே வந்து கொண்டிருந்த ஒருவரை உரப்பையில் கிடத்தி வானில் ஏற்றிக் கொண்டிருந்தார்கள். சின்னம்மாக்காவின் வீட்டிற்குள் நுழைந்தேன். உடைந்த வீட்டின் அறையில் திட்டு திட்டாக இரத்தம். அருகில் நின்றவரிடம் கேட்டேன். ''இப்போதுதான் ஒரு பெண்ணை ஆஸ்பத்திரிக்கு கொண்டு போயிருக்கிறார்கள். தலையில் பலமான காயம்'' என ஐயத்துடன் இழுத்தார்.

சின்னம்மாக்கா எனக்கு உறவு அல்ல. ஆனால் நல்ல அன்பான அயல்ப் பெண். நாற்பத்தைந்து வயதிருக்கலாம். குழந்தைகள் இல்லை. இதனால் அயல்க் குழந்தைகளிடம் பிரியம் அதிகம். சின்னம்மாக்காவின் கணவன் கோபால் அண்ணன் ஒரு சாது. நல்ல அன்பான தம்பதிகள். சோடியாகவே எங்கும் போவார்கள். சண்டை சச்சரவு இல்லை. கோபால் அண்ணனிடம் எது கேட்டாலும் ''எதுக்கும் அவவிட்டை ஒருக்கா கேட்டிட்டு செய்வம்''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பதிலே இருக்கும். மனிதன் எல்லா வற்றிற்கும் மனைவியையே நம்பியிருப்பவர்.

சின்னம்மாக்காவைச் சுற்றி எண்ண அலைகள் விரிய வெளியில் வந்தேன். வரும் பொழுதே சின்னம்மாக்காவுக்கு வழியிலேயே உயிர் போய் விட்டதாகவும் உடலை அவளின் சகோதரி வீட்டிற்கு இணுவிலுக்கு கொண்டு செல்வ தாகவும் அறிந்தேன்.

உடனடியாக சைக்கிளை எடுத்துக் கொண்டு இணுவிலுக்கு ஓடினேன்.

சின்னம்மாக்காவை வாங்கில் கிடத்தியிருந் தார்கள். தலைக்கட்டிலிருந்து இரத்தம் கசிந்து உறைந்திருந்தது. தலைமாட்டில் சின்னம்மாக்காவின் முகத்தையே வெறித்துப் பார்த்தபடி கோபால் அண்ணன் நின்று கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் ''தம்பி பார்தீங்களா அவ என்னை விட்டுட்டுப் போய் விட்டா'' என்று என் கைகளைப் பிடித்தபடியே அழுதார். அந்த வரிகளில் ஆயிரம் அர்த்தங்கள் இருந்தன. எனக்கு கண்கள் கலங்கின. வார்த்தைகள் எதுவும் வரவில்லை. என்ன வார்த்தை வேண்டி யிருக்கிறது. சின்னம்மாக்கா இல்லாத கோபால் அண்ணனைப் பார்க்க சகிக்க முடியவில்லை.

சின்னம்மாக்காவின் முகத்தைப் பார்த்தேன். ''என்னைப் பின் தொடராதே. நான் யார் என்பதே எனக்குத் தெரியவில்லை. இப்படித் தான் குண்டு வீசுவார்கள், எப்படியோ பிழைத்துக் கொள்'' என்று சின்னம்மாக்கா கோபால் அண்ணனுக்கு சொல்லிக் கொண்டு இருப்பது போல இருந்தது.

இறுதிக் கருமங்கள் முடித்தாயிற்று. மயானத் திற்கு சென்று தீயும் வைத்தாயிற்று. யாருக்கு? சின்னம்மாக்காவுக்கா?

நான் மயானத்திலிருந்து வீடு திரும்பினேன். பொறுங்கள். நான் மயானத்திலிருந்து திரும்புகிறேனா? அல்லது செல்கிறேனா? யாருக்குத் தெரியும்.

○ ○ ○

வெளிவந்து விட்டது

'காலம்'இன் முதல் வெளியீடு

○ ○ ○

ஆனந்த் பிரசாத்தின்

'ஒரு சுயதரிசனம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டின் உருவம்

எஸ். ராமகிருஷ்ணன்

எந்தப் பக்கமும் ஊர் தெரியவில்லை. வெட்ட வெளி. அத்துவான பரப்பு பழுப்பு நிறங் கொண்டு மங்கியிருந்தது. மாடு தலையைக்கூட அசைக்காமல் நடந்து கொண்டிருந்தது. அவன் தலையைச் சுற்றி காற்று போகாவண்ணம் துண்டை கட்டிக் கொண்டிருந்தான். ரயில்வே தண்டவாளம் வளைந்து, உடம்பை திமிறிக் கிடந்தது. காற்று பனியோடு அடித்தது. தண்டவாளப் பாதை வழியாக நடந்தான். செடிகள் தலையை கவிழ்த்துக் கொண்டு கிடந்தன. கருவ மரங்கள் வெறிச்சி கொண்டு நின்றன. மாடு பெருமூச்சுவிட்டு போனதில் தண்டவாளத்தின் அடியில் பதுங்கிய பூச்சிகள் மேலே ஏறின. திக்கில்லாமல் நிலா அலைந்தது. கால் மயிர்கள் பனியில் குத்திக்கொண்டு நின்றன. அவன் சிவப்பு மினுக்கட்டாம் பூச்சிகளை பார்த்தவாறே நடந்து வந்தான். மினுக் மினுக் என அவை வெளிச்சம் வெட்டின.

மதியமே அந்த ஊருக்கு போய் சேர்ந்திருந்தான். அந்த மாட்டை பற்றிய நாள் துப்பு போட்டு ஆள் இருப்பிடம் அறிந்து வைத்திருந்தான். மாடுகளே அற்றுப் போய்கொண்டிருந்தன. பல தொழுவங்கள் அழிந்து கல் தரைகள் விரிவு கொண்டன. நாள்பட்ட மூத்திர கவுச்சியும் மஞ்சளும் கொண்ட இடிந்த தொழுவங்களில் காற்று அலைந்து திரிந்தது.

வீடுகள் புகை படிந்துபோன பனையோலையிடப்பட்டிருந்தது. காரை வீடுகள் பல காலம் கண்டு பொதுமி நின்றன. நீண்ட பத்திகளாக விரியும் கம்பி அழி பாய்ச்சிய வீட்டில் புறாக்கள் தெரிந்தன. காவி அடித்த சுவர் கொண்ட வீடுகளில் வயதான ஆட்கள் தெரிந்தார்கள். அந்தப் பக்க தரை செம்மண் தரை. ஊரே புழுதி பறந்து கொண்டிருந்தது.

அவன் மாடு இருக்கும் இடம்போய் பார்த்து வந்தான். காளை மாடுதான். கொம்பு சிறுத்த மாடு. நீண்ட நாட்களாகவே ரெட்டியாரிடம் இருக்கிறது. ரெட்டியார் வீட்டு பின்வாசல் மூடிக் கிடந்தது. தொழுவம் நிறைய வைக்கோல் அடைந்திருந்தது. உள்ளே எட்டிப் பார்த்தான். யாரோ ஒரு பெண் படப்பின் மறைவிலிருந்து வெளிப்பட்டு அவனை முறைத்து போனாள்.

ஊர் வெகு சீக்கிரமாகவே அடங்கி விடுகிறது. ஆட்கள் அதிகமற்று போனதாலும், பலபக்கம் வேலைக்கு போய் வந்ததாலும் ஆட்கள் சீக்கிரமே உறங்கி விடுவார்கள். கிணற்றில் வாளி விழும் சப்தம் துல்லியமாகக் கேட்டது. யாரோ ஆம்பளை இறைக்கக்கூடும். வளையம் சுத்தும் சப்தம் கடுரமாயிருந்தது. அவன் இரவில்கூட தெருவில் அலைந்தான். மேலக் குடி பெண்கள் இரவில் குளித்துக் கொண்டு இருந்தார்கள். பெட்டிக் கடையில்போய் பீடி, தீப்பெட்டி வாங்கிக் கொண்டான். அவனுக்கு பிடித்தமான குதிரை படம்போட்ட தீப்பெட்டி கிடைத்தது. ஊர் விளக்குகள் எரிவதும், அமர்வதுமாய் இருந்தது.

ஊர் தாண்டிப்போய் மாடன் கோவில் திண்டில் படுத்துக்கொண்டான். நட்சத்திரங்கள் வானம் தெரியாமல் அப்பிக் கிடந்தன. அவன் சிறு பிராயமாக இருந்தபோது தாத்தாவோடு திருட்டுக்கு போவான். அடங்கிய கிராமங்கள் நிதானமாக அலையும் பின்னிரவு. வீட்டின் சிவப்பு ஓடுகள் பொதபொதவென இருக்கும். நாள்பட்ட மௌனம் கால் வைத்ததும் கலைந்து சப்தமிடும். நிதானமாக அவன் உள்ளே இறங்குவான். அவன் உடம்பு பூனை போலாகி விடும். ஆட்கள் உறங்கும்போது அறைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேறு தினுசு கொண்டுவிடுவதை அவன் பார்த் தான். சப்தமின்றி கதவைத் திறந்து நகை, ஜாமான்களை எடுத்து வருவான்.

ஊர் தாண்டும்போது காடைகள் காட்டில் கத்தும். போலீஸ்காரர்கள் காடெங்கும் தேடி அலைவார்கள். யாரும் அறியாத பாதை யொன்று எப்போதும் அவனுக்கும் தாத்தாவிற் கும் திறந்து கிடக்கும். கரி மூட்டம் போடும் இடப்பக்கம் போய் படுத்துக் கொள்வார்கள்.

தாத்தாவிற்கு எந்த வீட்டிலும் கதவைவிட சாவித்துவாரம்தான் கண்ணில் முதலில் படும், அவருக்கும் துவாரத்திற்கும் உள்ள இடை வெளிதான் அவருக்கு முக்கியமாகும். பகலும் இரவும் அறியாத ஊரின் முகம் அவர்களுக்கு தெரியும். நட்சத்திரங்கள் விழித்துக்கொண்டு எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கும். நிலா வெளிச்சத்தில் அலையும் இரண்டு நிழல் களை காடு அடையாளம் கண்டு கொள்ளும்.

திருட்டுக்குப் பலகாலம் ஒளிந்து வாழ வீடுகள் இருந்தன. ரெட்டிமார் பெண்ணான சுப்பக்கா வீட்டில் தாத்தா உறங்கிக் கிடப்பார். அவனை சுப்பக்கா உட்கார வைத்து எண்ணெய் தேய்த்து விடுவாள். வெற்று உடம்பில் அவள் விரல்கள் ஊரும். சுப்பு...சுப்பு...என்பான். அவள் முகம் மஞ்சள் படர்ந்தேயிருக்கும்.

சுப்பக்காவை கட்டிக்கொள்ள எவரும் வர வில்லை. தனி ஆளாகவேயிருந்தாள். அவள் வீட்டில் பிராயமெல்லாம் கிடந்தான். சுப்பக்கா வின் மேல் காலைபோட்டு உறங்கினான். சுப்பக்காதான் அவனைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்து விட்டாள். தாத்தாவை வைதாள். தாத்தா மட்டும் தனியே திருடப் போனார்.

சிவப்பு தொப்பி போட்ட போலீஸ்காரர்கள் வீடுகளை அறிந்தேயிருந்தார்கள். சேப்பக் குளத்தில் திருடி வரும்போது அவரைப் பிடித்து கட்டிப் போட்டுவிட்டார்கள். அது வேம்பு பூத்திருந்த காலம். பகலெல்லாம் தாத்தா வேம்பில் கட்டுண்டு நின்றார். வேப்பம் பூக்கள் சுற்றிலும் உதிர்ந்து கிடந்தன. கள்ளனைப் பார்த்தறியாத பிள்ளைகள் மறைவாக நின்று சப்தமிட்டன.

''கள்ளப்பய......கள்ளப்பய .....''

புறங்கையை கட்டித் தெருவில் கூட்டிப்போன போது பெண்கள் கதவுமேல் சாய்ந்து பார்த்துக் கொண்டிருந்தார்கள். சுப்பக்கா வழியெல்லாம் ஓடினாள். தாத்தா...தாத்தா...தாத்தா...

தெருப்புழுதி உயர்ந்தது. ஸ்டேஷனில் கிடந் தார் தாத்தா. எட்டு பொய் கேஸ்கள் முடிந்து அவர் வரும்போது க்ஷயரோகம் கண்டு இருமினார்.

சுப்பக்கா கட்டிகொடுத்து போனாள், முப்பது வயசான பிறகு. தாத்தாவின் சாவிற்குப்பின் அவன் வீட்டிலே கிடந்தான். காட்டு வேலை களுக்குப் போனான். தாத்தாவின் சமாதியில் வெருகுப் பூனை அலைவதை ஒருநாள் பார்த்தான்.

அதன் பின்பு சில தடவை மாடு திருடினான். துப்பு தெரிந்து ஆள் வந்ததும் மாட்டுக்கார னுக்கே மாட்டை திருப்பிவிட்டு காசு வாங்கிக் கொண்டான்.

யோசிக்க யோசிக்க பலதூரம் வந்து கொண்டே யிருந்தது. ஊர் சுத்தமாக முழுகிவிட்டதுபோல ஆனது. தெரு அழகு கூடி நிற்பது தெரிந்தது. ஊருக்குள் வந்தான். ஆடுகள் கொட்டகைக் குள் முணங்கின. திண்ணைகளில் பனி இறங்கி ஈரமாக்கிக் கொண்டிருந்தது.

காற்று சிறு சுழலாய் சுழன்றது. மரங்கள் தூக்கத்திலே அசைந்தன. மாடு நின்ற இடத் தின் பக்கம் போனான். அவன் நிழல் நீண்டு விழுந்தது. சுற்றிலும் பார்த்தான். ஆள் தெரியவில்லை. படலை விலக்கிக் கொண்டு உள்ளே போனான். மாடு நின்று கொண்டிருந் தது. குனிந்து கவுத்தை அவிழ்த்தான். தலையை திருப்பி அவனைப் பார்த்தது மாடு. சங்கு போன்ற மாட்டின் கண்கள் வெறித்தன. சப்தமில்லாமல் மாட்டை இறக்கி நடத்தினான்.

ஊர் தாண்டும்வரை நடை சப்தமேயில்லை. ஊரில் பனி பெய்து கொண்டிருந்தது. நட்சத் திரங்கள் கலைந்து போய்விட்டன. பாலம் தாண்டியதும் மெதுவாக நடந்தான். காற்று பைத்தியம் போல உளறிக் கொண்டிருந்தது.

மழையற்றுப்போனதால் எங்கும் வெடிப்பு கண்டது நிலம். காட்டு கொடிகள்கூட கருகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டன. காடெங்கும் வேலி முளைத்தது. காற்றில் மணல் பறந்துபோனது நாள் எல்லாம். தண்ணீருக்காக அலைந்து ஆட்கள் நாலா பக்கமும் பாதை உண்டாக்கினார்கள். பல நாளாக அவன் வீட்டிலே கிடந்தான்.

வெயில் ஓட்டு வழியாக வீடு முழுவதும் நிரம்பியது. வெயிலின் உக்கிரம் தாங்க முடியாமல் பிள்ளைகள் அம்மை கண்டன. அம்மை கண்ட பிள்ளைகள் குளிர்ச்சி வேண்டி பிதற்றின. மழை வேண்டி மழைக் கஞ்சி எடுத்தார்கள். வேப்பங் கொழையும் கஞ்சியுமாய் சாமியாடிய பெண்கள் மாரில் இரண்டு கைகளாலும் அறைந்து கொண்டார்கள். கஞ்சி வாடை கண்டு நாய்கள் அலைந்தன.

அவன் பெண்டாட்டி எடுத்ததெற்கெல்லாம் எரிந்து விழுந்தாள். பிள்ளைகள் கண்கள் அமுங்க கிடந்தார்கள். அவள் இரவில் உறங் காமலே கிடந்தாள். பலநாள் அதை பார்த்து வந்தாள். அவள் உடம்பில் இருந்து நெடிவர தொடங்கியிருந்தது. அவள் உடம்பில் தோல் நிறம் மாறி பத்து வர தொடங்கியிருந்தது.

அவளைப் பார்த்தபடியே கிடந்தான் இரவில் பல நாளும்.

மாடு தண்டவாளப் பாதைவிட்டு இறங்கியது. அவனும் இறங்கி குறுக்கே நடந்தான். கம்மாய் வந்துவிட்டது. கம்மாய் கரையின் கிழக்கே அவன் ஊர் இருந்தது. காம்மாயின் ஊடே இறங்கி நடந்தான். கருவேல மரங்கள் நின் றன. தண்ணீர் நிரம்பியிருந்த காலத்தில் கொக்குகள் நிற்கும். கொக்கின் முகம் தண்ணீர் பட்டு கலைபடும். மரத்தின் நிழல் கவை கவையாய் தெரியும். விடியும்போது கருவ மரத்தின் ஊடே சூரியன் சிக்கி, முள்ளால் கிழிபட்டு வெளிவரும்.

வறண்ட கம்மாயில் புதையுண்டு செத்த மீன் களின் செதில்கள் இன்னமும் இருந்தன. கம்மாயின் பாதிதூரம் வரை நடந்து போனான். ஏற்கனவே கொஞ்சம் தீவனம் கொண்டு வந்து கட்டியிருந்த மரத்தடியில் மாட்டைக் கொண்டு வந்து கட்டினான். அந்த இடத்தில் மரங்கள் கும்மென்றிருந்தன.

இன்னொரு மரத்தடியில் தூத்துவிட்டு படுத்துக் கொண்டான். மேகம் தெரியவில்லை. குளிர் அடித்தது. விடியும் வரை உறக்கம் கொள்ள வில்லை அவனுக்கு. விடிய கிளம்பி ஊருக்குள் போனான். வீரசின்னு வீட்டின் கதவை தட்டி அவனிடம் எதையோ சொல்லிவிட்டு அவன் வீட்டிற்கு போனான்.

அவன் போனபோது வீடு முழுவதும் புகை நிரம்பியிருந்தது. அவள் அடுப்பருகே உட் கார்ந்திருந்தாள். சுவரருகே போய் கொடியில் கிடந்த சேலையை மடித்துப் போட்டு படுத் தான். அவள் திரும்பிப் பார்த்து கேட்டாள்.

''இன்னேரம் என்ன உறக்கம்?''

''ராத்திரி உறங்கலை!"

''எங்க போயிருந்தே...நீ?''

''தெக்கே..."

''யார் மாடு ..''

அவன் பதில் சொல்லாமல் கிடந்தான். புகை வெளியேறியது. அவள் எழுந்து நின்று அவன் முன்னால் சேலையை அவிழ்த்து மாற்றி கட்டி னாள். இடுப்பை பார்த்தான். அவள் கண்கள் அவன்மேல் பட்டது. அவள் வெளியே கிளம்பி போனாள். வெளிச்சம் வரத்தொடங்கியது.

மதியம்வரை உறங்கினான் அவன். மதிய வெயில் அவன் முகத்தில் அடித்தபோது அவள் எழுப்பினாள். புரண்டபடி கேட்டான்.

''என்ன...''

''மேலத் தெருவுல ஒரு ஆள்வந்து விசாரிச்சு கிட்டு இருக்கான்!''

''யாராம்...?''

''தெக்க உள்ளவனாம்...''

''எப்படியிருக்கான்?"

"குட்டையான ஆளு..."

அவன் எழுந்து முகம் கழுவினான். கறுவாட்டு துண்டுகள் பொறித்து மூடியில் இருப்பதை பார்த்தான். அவள் சொன்னாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''சாப்பிட்டு போறயா...''

வீட்டின் பின் வழியாகப்போய் வீரசின்னு வீட்டுக்கு போனான். வீரசின்னு அவனை தனியே கூட்டிப்போய் சொன்னான்.

''ஆள் அந்த ஊர்க்காரன்தான். ஏட்டு சுப்பையாவோட வந்திருக்கான்.''

''போலீஸ் வந்தா நமக்கென்ன?''

''சுப்பையா பெரிய அகராதி புடிச்சவன். மாடு எங்க நிக்குது?''

''கெடக்கான்...மாட்ட சந்தைக்கு கொண்டு போய் வித்திட்டு போறேன்.''

''இரு...பேசி பாப்போம்...''

வீரசின்னு வெளியே கிளம்பிப் போனான். அவன் திரும்பும்போது அந்த ஆளையும் உடன் கூட்டிக்கொண்டு வந்து சந்தில் வைத்து பேசி விட்டு அவனிடம் வந்து சொன்னான்.

''ஆள் பெரிய இவனால இருக்கான்......நூறு ரூவாக்கு மேல தேறாது.''

''என்ன சொல்றான்''

''ரெட்டியாருக்கு போலீஸ்ல பலரையும் தெரியு மாம். சொல்லி ஆள்பிடிக்க போறாராம்.''

''கிழிச்சாரு...அவன மட்டும் நாளைக்கு வரச் சொல்லு மாடு வேணுமின்னா!''

வீரசின்னு திரும்பவும் அந்த ஆளோடு பேசிக் கிட்டு இருந்தபோது சுப்பையா திரும்பி வந்து கேட்டார்.

''என்னடா...குசுகுசுப்பு ..''

வீரசின்னு எதுவும் பேசவில்லை. அவர்கள் போனபின்னாடி வீரசின்னுவும் அவனும் கம்மாய்க்கு போனார்கள். நிலா இல்லை. மங்கின இருட்டு. அரிக்கேன் விளக்கு கொண்டு போனார்கள். கம்மாய் விளக்கொளியில் அமானுஷ்ய ரூபம் காட்டியது; சீட்டு விளை யாண்டார்கள். வெளிச்சம் கண்டு மாடு தலையை நீட்டிக்கொண்டு இருந்தது. வீர சின்னு பாதியில் ஆட்டத்தை முடித்துக் கொண் டான். அவனே பேசினான்.

''எங்க வாரேன்னான்...''

''ரெட்டை பனை பக்கம்...''

''நீ போயிட்டு வந்திடு......காலைல......நான் மேற்கு கரை மடையிலே நிக்கேன். துட்ட வாங்கிட்டு...மாடு இருக்க இடத்த சொல்லு.''

''சரி...''

பகல் வந்தது. அவன் கிளம்பிப் போனான். மேற்கு மடையில் போய் உட்கார்ந்து கொண் டான். வீரசின்னு வர மதியமானது. எல்லாம் பழைய ரூபாய் தாள்கள். பத்து ரூபாய் தாள் கள். இருவரும் நடந்து போனார்கள். செவல் பட்டிக்கு போய் டீக்கடையில் காரசேவு, டீ சாப்பிட்டார்கள் வீரசின்னு முப்பது ரூவாய் வாங்கிக் கொண்டான். வண்டிப்பாதை வழி யாக நடந்து வந்தார்கள். வீரசின்னு புளியந் தோப்பில் சீட்டு விளையாடுவதை பார்த்து அவனையும் கூப்பிட்டான்.

ஏற்கனவே ஆட்கள் ஆடிக்கொண்டிருந்தார்கள். புளிய நிழல் விழுந்து தரை வெளுத்து போய் இருந்தது. புளிய ஓடுகள் கிடந்தன. அவனும் சின்னுவும் உட்கார்ந்து விளையாண்டார்கள். நாலு ஆட்டை அவன் ஜெயித்தான். பின் தொடர்ந்து தோற்றான். வீரசின்னுதான் ஜெயித்தவன். வீரசின்னுவிடம் ஐம்பது ரூபாய் கடன் கேட்டான். வீரசின்னு சிரித்தான்.

''சீட்டு விளையாட்டுல கடன் இல்லேல...''

''குடு...வந்து தர்றேன்...''

''தர்றது என்ன இருக்கு...இன்னி எவன் மாட்டையாவது...தள்ளிட்டு வரணும் அதுக்கு''

''ஒழுங்கா பேசு...''

''உள்ளதத்தான பேசுறேன்''

அவனுக்கு வெறியாய் வந்தது. புளிய மரத் தின் காய்ந்த கொம்பை ஒடித்து வீரசின்னுவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடித்தான். அடி சுரீர் என்றது. வீரசின்னு நிமிரும் முன்பு ஒரு மிதி மிதித்தான். அவனிடம் இருந்த காசு சிதறியது. அவன் வேகமாக காசை பொறுக்கினான். வீரசின்னு எழுந்த வேகத்தில் மேலே விழுந்தான். அவன் கீழே புரண்டபோது கல்லில் பட்டு உதடு வெட்டுப் பட்டது. வீரசின்னுவை தள்ளிவிட்டு எழுந்தான். வீரசின்னு எழுவதற்குள் அவன் எழுந்து ஓடினான். வீரசின்னுவின் குரல் கேட்டது.

அவன் வீடுவந்து சேர்ந்தபோது உதட்டில் இருந்து ரத்தம் வழிந்தது. அவன் வீட்டிற்குள் போனான். யாருமற்று இருந்தது வீடு. காசை தரையில் போட்டு எண்ணிக்கொண்டிருந்தான். முப்பத்துநாலு ரூவாய்தான் கிடைத்தது. அவள் கதவைத் தள்ளிக் கொண்டு நின்றாள். காசை அப்படியே பார்த்துக் கொண்டிருந்தாள். அவனை கேட்காமலே அவள் குனிந்து காசை எடுத்து அடுப்படிக்குள் போனாள்.

அவன் உதடு எரிந்தது. வீரசின்னு இன்னமும் ஊர் வந்திருக்க மாட்டான். எப்படியும் சண்டை வரும்போல தெரிந்தது.

அவன் வாகான விறகுக் கட்டை எடுத்து வீட்டிற்குள் கொண்டு வந்தான். அவள் திரும்பி பார்த்து கேட்டாள்.

''உதட்டல என்ன...''

''ரத்தம்...''

அவள் விறகுக் கட்டைகளையும் அவனையும் பார்த்தாள். அவன் முகம் சிவந்துபோய் இருந்தான். உப்பரித்தது உதடு.

அவன் தெருவையே பார்த்துக்கொண்டிருந்தான். தெருவில் காற்று ஒடுங்கி சப்தமற்று இருந்தது.

அவள் வெளியேபோய் நின்றாள். தெருவில் வீரசின்னு வந்துகொண்டிருந்தான். அவன் சட்டை கிழிந்து போயிருந்தது. அவன் கத்துவது போல தெரிந்தது. கிட்டத்தில் வந்த போது பார்த்தாள். அவன் கையில் கத்தி மின்னியது. அவள் கேட்கும் முன்பே அவர்கள் சண்டை துவங்கி விட்டது.

ο ο ο

கொங்கு தமிழ் இளம் படைப்பாளி

பெருமாள் முருகனின்

நாவல்

ஏறுவெயில்

திருஞி வெளியீடு

3, மாரீசன் 5வது தெரு,

பரங்கிமலை (அஞ்சல்)

ஆலந்தூர், சென்னை-600 016.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரசிகமணி கனகசெந்திநாதன்

ஏ. ஜே. கனகரத்தினா

இரசிகமணி கனகசெந்திநாதன் (1916-1977) அவர்களின் 14வது ஆண்டு நினைவாஞ்சலிக் கூட்டம், 17-11-1991இல் நல்லூரில் அமைந்துள்ள கம்பன் கோட்டத்தில் நடைபெற்றபோது, திரு. ஏ. ஜே. கனகரத்தினா ஆற்றிய உரை.

இரசிகமணி கனக செந்திநாதனை நான் முதன் முதல் சந்தித்தது 1958 இல்தான். பேராதனை பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணத்தில் ஆசிரியராக கடமையாற்றத் தொடங்கிய காலகட்டத்தில்தான், திரு டொமினிக் ஜீவா வுடனும், கஸ்தூரியார் வீதியில் அமைந்திருந்த அவரது 'சர்வகலாசாலைக்கு அடிக்கடி வந்து போகும் இரசிகமணியுடனும் எனக்குத் தொடர் பேற்பட்டது.

இன்றும் அவரது ஒல்லியான உருவம் என் மனக்கண் முன் நிற்கின்றது.

முதலில் நான் அவரைப் பிழையாக எடை போட்டு விட்டேன். அவரது தோற்றமும், நடை உடை பாவனையும் அவர் ஓர் 'கட்டுப் பெட்டி' என முதலில் எண்ணத் தூண்டின. பழகப்பழகத்தான் அந்தத் தோற்றம் வெறும்' 'மாயை', கனகசெந்திநாதன் தமிழ் மரபில் காலூன்றியிருந்தாலும், 20ம் நூற்றாண்டில் வாழ்பவர் என்ற உண்மையை உணரத் தொடங்கினேன்.

சாதாரண தமிழ் ஆசிரியர்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டவராகவே அவர் காட்சி அளிக்கத் தொடங்கினார். தென்னிந்தியாவிலிருந்து அப்பொழுது இறக்குமதி செய்யப்பட்ட அத்தனை நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் தவறவிடாது வாங்கினார். ரீகல் தியேட்டரில் காண்பிக்கப்பட்ட ஆங்கிலப் படங்களை பார்த்து இரசிக்கவும் அவர் தவறவில்லை. சில படங்கள் அவருக்கு பிடி படாவிட்டால், அவற்றைப் பற்றி என்னுடன் உரையாடுவார்.

மனம் திறந்து பேசும் சுபாவம் அவரிடமிருந் ததால், எனக்குப் பரிச்சயமில்லாத ஓர் யாழ்ப்பாணத்தை அவர் கண்களினூடாக தரிசிக்க முடிந்தது. மறைந்து கொண்டிருந்த யாழ்ப்பாணம்தான்; ஆயினும் அந்த யாழ்ப் பாணத்தை அறிந்திராவிட்டால், இன்றைய யாழ்பாணத்தை புரிவது கடினம்.

கனகசெந்திநாதனின் தனித்துவத்திற்கு பண் டிதமணி கணபதிபிள்ளையின் செல்வாக்கு வழிவகுத்து உரமிட்டது என நினைக்கின் றேன். அவரே பண்டிதமணியின் சிறப்புகளை யும் திறமைகளையும் பற்றி என்னிடம் நேரில் எத்தனையோ தடவைகள் எடுத்து விளக்கி னார்.

ஈழத்து அறிஞர்களின் சாதனைகளை எவ்வாறு தமிழகம் இருட்டடிப்புச் செய்தது என்பதை பண்டிதமணியின் கூற்றுகளின் வாயிலாக செந்திநாதன் எனக்கு எடுத்துரைத்தார்.

ஈழத்தமிழர்களாகிய நாம் ஒரே வேளையில் இரு முனைகளில் எமது கலாச்சாரத் தனித்துவத்தை காப்பாற்றுவதற்குப் போராட வேண்டியிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கின்றது என்ற எண்ணம் எனது மனதில் வேரூன்றியது; ஒரு புறம், தமிழகத்தின் இருட்டிப்பும், புறக்கணிப்பும்; மறுபுறம், சிங்கள மொழித் திணிப்பு.

இப் போராட்டத்தில் நாம் தோல்வியுற்றால், ஒன்றில் தமிழகத்தின் வெறும் நகலாக இருக்க வேண்டி நேரும். அல்லது முழுக்க முழுக்க சிங்கள மொழியால் விழுங்கப்பட்டு, எமது வரலாற்றில் முன்பு நடந்தது போல, சிங்கள மொழி பேசும் கூட்டத்தினராக மாற நேரும்.

இக்கூட்டத்திலே பேசுமாறு திரு. ஏ. ரி. பொன்னுத்துரை என்னைக் கேட்டபோது அதற்கு உடன்பட்டேன். தலைப்பு என்ன வென்று கேட்டார். கனகசெந்திநாதனைப் பற்றிய எனது மனப்பதிவு உந்தவே, 'பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவர்' என்றேன்.

இந்த அழைப்பிற்குப் பின்னர், கனகசெந்தி நாதனின் சிறுகதைத் தொகுதியான **வெண் சங்கை** மீண்டும் ஒரு முறை படித்தேன்; எனது முன்னைய மனப்பதிவு மேலும் வலுப்பெற்றது. அவரே தனது முகவுரையில் கூறியிருப்பது போல, ''புராணப் படிப்பு, தாளக் காவடி, அன்னதானம், நாட்டுக் கூத்து, சரமகவிபாடல், காணிப்பற்று'' என்பவையே இக்கதைகள் கையாளும் பொருள்கள்.

ஆனால் இக்கதைகளை ஊன்றிப்படித்தால், அவை யாழ்ப்பாணத்துக் கலாசாரத்தை வெறுமனே துதிபாடுவையாக அமையவில்லை என்பது தெளிவாகும்; மறைந்து கொண்டிருந்த ஓர் கலாசாரத்திற்கு ஒப்பாரியாகவும் அவை அமையவில்லை. 'முற்போக்கு எழுத்தாளர்' என்று தமக்குத் தாமே நாமம் சூட்டிக் கொண்டவர்கள் ஆக்கிய படைப்புக்களை விட, செந்திநாதனின் கதைகள் அக்கலாசாரத்தின் போலித்தனங்களை பொய்மைகளை, ஓட்டை ஒடிசல்களை, சாதி அமைப்பின் பல்வேறுபட்ட பரிமாணங்களை கலைநயத்தோடும், மிக நுட்பமாகவும் அம்பலப்படுத்தி, முகமூடிகளை அகற்றுகின்றன.

இத் தொகுதியிலே எனக்கு மிகப் பிடித்தமான கதை — அதுவே தொகுதியில் முதல் கதையும் கூட — **'பிட்டு'**. டப்ளின் நகரிலே 24 மணித் தியாலங்களில் நடைபெறும் நிகழ்ச்சிகளை 'யுலிசீஸ்' என்று தனது நாவலிலே கட்டுக் கோப்புடன் கையாள்வதற்கு ஜேம்ஸ் ஜாய்ஸ் கிரேக்க இதிகாசமான **'ஒடிசியை'**க் கையாண்டு இன்றைய டப்ளின் வாழ்க்கைக்கு கலைவடிவம் கொடுத்தார். அதே போன்று, சிவபெருமான் செம்மனச் செல்வியிடம் பிட்டை வாங்கி உண்ட புராணக் கதையைக் கையாண்டு பொன்னம்மா கிழவியென்ற கமக்காறிச்சியையும் வெள்ளை யன், வெள்ளையனின் குழந்தை, கறுப்பி என்ற பாத்திரங்களையும், மாஞ்சோலைக் கிராமத்து வாழ்க்கையையும் சிக்கனமாகவும் அதே வேளை நுட்பமாகவும் சித்தரித்து அவற்றிற்கு கலை வடிவம் கொடுக்கின்றார் செந்திநாதன்.

இதனால் செந்திநாதன், 20ம் நூற்றாண்டின் உலக இலக்கிய மேதையான ஜேம்ஸ் ஜாய்சிற்கு சமமானவர் என்று நான் கூற முனைவதாக யாரும் கொள்ள வேண்டிய தில்லை. செந்திநாதனே தனது முகவுரையில் ஆணித்தரமாக பின்வருமாறு கூறுகின்றார். 'யாழ்ப்பாணப் பழைமை, சமூகச்சூழல், பழைமையான கதை சொல்லும் உத்தி என்ற என் தனித்துவத்தை நான் இழந்துவிடத் தயாராக இல்லை. என் கதைகளை நோக்குவோர் என் தனித்துவம் என்னும் அச்சாளரத்தினூடு பார்த்தல் நல்லது. தாம் தாம் வைத்திருக்கும் கொள்கை, அரசியற் பிடிப்பு, மேனாட்டு உத்திமுறை என்னும் இவற்றை அளவு கோலாகக் கொண்டு அளந்து சிரமப்பட வேண்டாம் என்று கேட்டுக் கொள்ளுகின்றோம்.''

செந்திநாதன் இவ்வாறு கூறியிருப்பினும், நல்ல கலைஞராக அவர் இருந்ததால், அவரை அறியாமலேயே, பிட்டு என்னும் தனது சிறுகதைக்கு கலைவடிவம் கொடுப்பதற்கு ஜேம்ஸ் ஜாய்ஸ் கையாண்ட உத்தியை ஒத்த ஒன்றையே கையாளுகின்றார். தவிர, செந்திநாதன் கையாளும் புராணக் கதை, 'பிட்டு' என்ற அவரது சிறுகதைக்குப் பலமட்ட அர்த்தங்களைப் பாய்ச்சுகின்றது: பொன்ம்மாக் கிழவியின் தனிப்பட்ட வாழ்க்கையையும், மாஞ்சோலைக் கிராமத்தின் சமயச் சூழலையும், சமூக உறவுகளையும் மிக இயல்பாகப் பின்னிப் பிணைக்க உதவுகிறது இந்த உத்தி.

வெண்சங்கு என்ற தொகுதியை வாசிப்பவர்கள் செந்திநாதன் பழமைக்கும் புதுமைக்குமிடையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமாக அமைந்தார் என்ற எனது கூற்றில் பொதிந்திருக்கும் உண்மையை நன்கு உணர்வார்கள்.

அத்தொகுதியிலுள்ள எல்லாக் கதைகளும் தேறுகின்றன எனக் கூறமுடியாவிடினும், மொத்தத்தில் நோக்கும் போது இதுகாறும் ஈழத்திலே வெளிவந்துள்ள சிறுகதை தொகுதிகளுள், வெண்சங்கு குறிப்பிடத்தக்க, தனித்துவமிக்க, உருப்படியான தொகுதி என்பதே என் கணிப்பீடு.

பழைமையில் காலூன்றி இருந்த ஒருவரின் படைப்புக்கள் என்று நோக்கும் போதும் இக்கதைகள் சிலவற்றின் தாற்பரியங்களைப் பற்றி சிந்திக்கும் போதும், தன்னை அறியாமல் கனகசெந்திநாதன் அவர்களே உண்மையான முற்போக்கு எழுத்தாளராய் விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

தர்சன் வீடியோ விஷன்

- உங்கள் திருமண வைபவங்கள் மற்றும் கலை நிகழ்ச்சிகளிற்கு தேவையான பூமாலை, சடை நாகம், சரம் போன்றவற்றை மிகக் குறைவான விலையிலும் அழகான முறையிலும் பெற்றுக் கொள்ளலாம்.
- திருமணம், பிறந்த நாள் மற்றும் எந்தவொரு வைபவத்திற்கும் தரமான சிறந்த வீடியோ படப்பிடிப்பிற்கும் இன்றே நாடுங்கள்.
- **Video Transfer Available. PAL / SECAM / NTSC (Any system to any system)**

மேலதிக தொடர்புகட்கு:- தர்சன் வீடியோ விஷன்

SRI:- 321-8298

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரைப்பட அனுபவங்களிலிருந்தான என் திரைப்படங்கள்

சத்யஜித் ராய்

தமிழில் : **ஜெ. எஸ். ஜெகந்நாதன்**

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் 'பதேர் பாஞ்சாலி'யை உருவாக்கியதிலிருந்து இன்று வரைக்கும் என் கலையை எப்படி வளர்த்துக் கொண்டேன்; பதேர் பாஞ்சாலியைத் தொடர்ந்து வந்த படங்களில் அது எப்படி வெளிப்பட்டது என்ற கேள்வியை எல்லோரும் என்னிடத்தில் கேட்கிறார்கள். அவர்கள் கேள்விக்குப் பின்னால் புதைந்திருக்கும் அர்த்தம் என்னவென்றால், 'பதேர் பாஞ்சாலி' அளவிற்கு அதைத் தொடர்ந்து வந்த என் படங்கள் பெரிய கவனத்தை ஏன் ஈர்க்கவில்லை என்பதும், சர்வதேச விருதுகளைப் பெறவில்லை என்பதும்தான். உண்மையில் நான் என் கலையை வளர்த்துக் கொண்ட கலைஞனா? இந்தக் கேள்விக்கு நான் 'ஆம்' என்றுதான் பதில் சொல்ல வேண்டும். அதன் தடயங்கள் பதேர் பாஞ்சாலியைத் தொடர்ந்து வந்த என் படங்களில் இருப்பதைக் காண்கிறேன். ஆனால் இதை ஏற்க மறுப்பவர்களும் இருக்கிறார்கள்.

'பதேர் பாஞ்சாலி' பற்றி ஒரே வரியில் சொல்ல வேண்டுமானால் அதன் எளிமையைத்தான் சொல்வேன். இயல்பான மொழி அழகும், கவித்துவத் தன்மைகளும், அதற்குள் கனன்று கொண்டிருந்த மனிதத்துவமும் பதேர் பாஞ்சாலியைப் பலப்படுத்தின. பார்வையாளர்களை ஈர்த்த இத்தனை குணங்களும் பிபூதிபூஷன் நாவலிலேயே இருந்தன. இதில் புதிதாக எதையும் சேர்த்திருக்கவோ, குறைத்திருக்கவோ என்னால் முடியாது. உண்மையில், ஒரு திரைப்படத்தின் தனித்தன்மை அது எந்த அளவுக்கு இதயத்தை வருடுகிறது என்பதை வைத்துக் கணிக்கப்படுவது துரதிருஷ்டம். இத்தகைய குணத்தோடு எந்தத் திரைப்படத்தையும் அணுகுவது நல்லதல்ல. பதேர் பாஞ்சாலியில் எத்தனை குறைபாடுகள் இருந்தன என்பது எனக்குத் தெரியும். அதிர்ஷ்டவசமாக இந்தக் குறைகள் படத்தின் முற்பகுதியில் இருந்தன. நான் நாவலை ஒட்டியே என் படப்பிடிப்பை நடத்தினேன். நாவலின் முதல் காட்சியை முதலிலும், கடைசிக் காட்சியை கடைசியிலும் படமாக்கினேன். பணத் தட்டுபாடு காரணமாகப் படம் பாதியிலேயே நின்றது. அந்த தருணத்தில்தான் என் சினிமா அனுபவம் என்னிடத்திலுள்ள குறைகளைத் தெரிந்து கொள்ள உதவிற்று. படத்தின் முற்பகுதியில் நான் செய்திருந்த தவறுகள் எனக்குப் புலப்பட்டன. அவற்றை வெட்டியெறிந்தேன். எஞ்சிய பகுதிகளை குறைகளின்றிப் படமாக்க அந்த அனுபவம் துணை செய்தது.

என்னுடைய படங்களில் கதை என்னும் அம்சத்தை எளிமையாகச் சொல்லவே நான் விரும்புகிறேன். அதிலும் குறிப்பாக எனது படங்களில் வரும் உணர்ச்சி பூர்வமான காட்சிகளைப் பெரும்பாலும் வசனத்தைக் குறைத்து, திரைப்படத்தின் தனித்தன்மைகளால் மெருகேற்றியிருக்கிறேன். என் முதல் ஐந்து படங்கள் எளிமையானவை. புகழ்பெற்ற இலக்கியங்களின் நகல்களாக அவை இருந்தன. அவை திரைப்படம் என்ற கலையின் முழுமையைக் கொண்டிருக்கவில்லை. 'கஞ்சன் ஜங்கா'விலிருந்துதான் எனது திரைப்படத்தை முழுமைப்படுத்தும் பணியில் தீவிரமாக இயங்கினேன். இது திரைப்படத்திற்காக நான் எழுதிய முதல் கதை. வசனத்தையும் நானே எழுதினேன். வசனம் என்பது திரைப்படத்திலிருந்து பிரித்தெடுக்க முடியாதபடி இருக்கவேண்டும் என்பதை என் பட அனுபவங்களிலிருந்து அறிந்திருந்தேன். 'பதேர் பாஞ்சாலி'யில் பிபூதி பூஷனின் வார்த்தைகளுக்கு மாற்று வார்த்தைகள் தேட நான் பட்ட கஷ்டங்கள் எனக்குத் துணை புரிந்தன. சில பார்வையாளர்களுடன் 'கஞ்சன் ஜங்கா'வை நான் பார்த்தபோது அவர்களை அது பெரிய அளவில் பாதிக்காததை உணர்ந்தேன். ஒரு குடும்பம் முழுவதையும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தக் குடும்பத்திலுள்ள நடுநிலையான ஒரு பாத்திரத்தின் மூலம் பார்ப்பதில் என் பார்வையாளர்கள் குழம்பினார்கள். ஒரு நல்ல இயக்குனராக என் முந்தைய படங்களில் நான் பெற்றிருந்த பெயர் இந்தப் படத்தில் எனக்குத் துணை நிற்கவில்லை.

'கஞ்சன் ஜங்கா'விற்குப் பிறகு மூன்று வருடங்கள் கழித்து 'சாருலதா'வை இயக்கினேன். பத்துப் பதினைந்து வருட என் சினிமா அனுபவங்களின் வெளிப்பாடு அதில் முழுமையாகத் தெரிவதை உணர்ந்தேன். என்னளவில் அது குறைகளேயில்லாத படம். சாருலதாவிற்கு இணையான என் இன்னொரு படம் 'ஆரண்ய தீன் ராத்ரி.' இதுவும் இந்தியாவில் பெரிய வரவேற்பைப் பெறவில்லை.

இருபத்தைந்து வருட வாழ்க்கையைச் சினிமாவோடு செலவிட்டபின் என் கலை குறித்து நான் உறுதியோடிருக்கிறேன். நல்ல கதைகளைத் தேர்வு செய்வதில், அதைச் சொல்கிற விதத்தில், தொழில்நுட்பத்தில் என்னால் முழுமையோடு இயங்க முடியும் என்று நம்புகிறேன். இருபத்தைந்து வருட அனுபவத்தில் இயல்பான திரைப்படங்கள், சந்தோஷம், சோகம், பெரிய மற்றும் சிறியவர்களுக்கான திரைப்படங்கள், நிகழ்கால மற்றும் இறந்த கால மனிதர்களைப் பற்றிய படங்களை இயக்கும் வாய்ப்பைப் பெற்றேன். எல்லாக் கலையும் போல முழுமை என்பது திரைப்படக் கலையிலும் இல்லை. நான் புது உத்திகளை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறேன். அந்த உத்திகள் தயார் நிலையில் காத்துக்கொண்டு நிற்பவை அல்ல. அந்த உத்திகளை நோக்கிச் செல்கையில்தான் என் அனுபவங்கள் எனக்குத் துணை நிற்கின்றன. எதிர்காலம் நோக்கிச் சொல்லும் கலைஞன் நான். என் அனுபவம் என்னை வழி நடத்திச் செல்வதும் அதை நோக்கித்தான்.

*

—1980 'Bisay Chalachitra,
இதழில் ராய் எழுதிய கட்டுரையின்
தமிழ் வடிவம்

□ □ □

'காலம்' இதழுக்குப் படைப்புகள், விமர்சனங்கள் வரவேற்கப் படுகின்றன. 'காலம்' புத்தக வெளியீட்டு முயற்சியிலும் தன்னை ஈடுபடுத்த இருக்கிறது. ஆண்டுக்கு ஆறு இதழ்கள்; மூன்று புத்தகங்கள் கொண்டுவரும் உத்தேசமிருக்கிறது. எங்களை வழி நடத்தும் வகையில் படைப்புகளும் ஆலோசனைகளும் தந்து உதவுங்கள்.

ஆசிரியர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் கடிதம்

அன்பின் ஆசிரியருக்கு!

காலம் (3—4) கிடைத்தது. அதில் குறுமலை சுந்தரத்தின் படைப்பு இந்திய இலக்கியத்தின் நாற்றத்தை வெளிப்படுத்துகின்றது. ஈழத்தில் எஸ். பொ. 60களில் எழுதிய ''நச்சினிர்கினியாார் மூலமும் உரையும்" விடயங்களை ஞாபக மூட்டுகின்றது. எஸ். பொ இப்பொழுது அதை தனது சிறந்த படைப்பாக ஏற்றுக் கொள்வார் என்று நினைக்கவில்லை (அவருடைய வீ, தீ வேறுபட்டவை; தரமானவை) குறுமலை சுந்தரம் சு. ரா.வை மனதில் வைத்து (ஜே. ஜே. சில குறிப்புக்கள்) தான் அதை எழுதியிருக்கிறார் என எண்ணுகின்றேன். தருமுசிவராமை குறுமலை சுந்தரம் ஞாபகப்படுத்துகின்றார்.

வடிவம், புதுமை என்பதில் பொருள் அடிபட்டு போகின்ற அவலம் இது; இவர்கள் இதே கண்ணாடியால் நாளை மு. தவையும் மு. பொவையும் வில்வனையும் பார்க்கக் கூடும். இப்படியே ஆர்தர் கோஸ்லர், ஹெர்மன் ஹெஸ்சேயையும் பார்ப்பார்கள் என்றால் இங்கு உடன்பட முடியவில்லை. ஒரு எழுத்தாளருக்கு எதை எழுதுவது என்று யாரும் சொல்ல முடியாது என்று நீங்கள் கேட்கும் கேள்வி எனக்கு கேட்கிறது. வாசகனுக்கு தெரிவுச் சுதந்திரம் இருக்கிறதே. புதிய வடிவ முயற்சிகளுக்கு பொருளாக விடயங்களே தென்படவில்லையா? 20ம் நூற்றாண்டு ஆரம்பத்தில் நவீன ஐரோப்பிய இலக்கிய வடிவ பரிசோதனைக் காலத்திலா நாம் இருக்கின்றோம்.........

குறத்தி முடுக்கு அற்புதம். மறு பிரசுரம் செய்தது பெரிய தொண்டு. Under World Lifeஐ அப்படியே நம் கண் முன்னால் கொண்டு வருகிறார். அந்த மேதை குமார் மூர்த்தியின் கதை அற்புதமான படைப்பு.

செந்தாரன்
பாரிஸ்

Cakes! Cakes! Cakes! Cakes! Cakes! Cakes!

- CAKES FOR
- BIRTHDAYS
- ENGAGEMENT &
- ALL OTHER OCCASIONS

சகல வைபவங்களிற்குமான,
CAKE ORDER களுக்கு,

திருமதி வசந்தா ஆனந்தராஜா

(416)447 0734

BRIDAL HAIRDRESSING AND HAIR—DO FOR ALL OCCASIONS...

இத்துடன் அனுபவம் வாய்ந்தவரால்,
சிகையலங்கார சேவைகள்

(416)447 0734

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுவான் ருல்ஃபோ (1918)

இரண்டு மிகச் சிறிய புத்தகங்களே வெளிவந்திருந்தாலும் ருல்ஃபோ மெக்ஸிகோவின் மிகப் புகழ் பெற்ற எழுத்தாளர். 1924இல் இவரது தந்தை கொல்லப்பட்டார். தொடர்ந்து இவரது உறவினர்கள் பலரும் படுகொலை செய்யப்பட்டனர். இவரது தந்தையின் தந்தை கிரிஸ்டெரோர் கலகத்தின்போது மிகக் கொடூரமான முறையில் கொல்லப்பட்டார். சில ஆண்டுகள் கழித்து இவரது தாயும் இறந்தார்.

இவரது சிறுகதைத் தொகுப்பு : El llano en llamas (1953)

நாவல் : Pedro Paramo

இரண்டாவது நாவல் : La Cordillera

என்னைக் கொல்ல வேண்டாமென்று அவர்களிடம் சொல்

இச்சிறுகதை ருல்ஃபோவின் ''எரியும் சமவெளி'' என்ற தொகுப்பில் ஜார்ஜ்டி.சேடு-ஆல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் வழி தமிழில் : அமரந்த்தா & சாரு

''என்னைக் கொல்ல வேண்டாமென்று அவர்களிடம் சொல், ஹுஸ்தினோ! போய்ச் சொல். உனக்குப் புண்ணியமாகப் போகட்டும். அவர்களிடம் சொல். தயவு செய்து சொல்.''

''என்னால் முடியாது. அங்கே ஒரு சார்ஜண்ட் இருக்கிறார். உன்னைப் பற்றி எதைச் சொன்னாலும் அவர் கேட்கத் தயாராக இல்லை.''

''சாமர்த்தியமாகச் சொல்லிப் பார். இதுவரை என்னை பயமுறுத்தியதே போதும் என்று அவரிடம் சொல் உனக்குப் புண்ணியமாகப் போகட்டும்.''

''ஆனால் அது உன்னை வெறுமனே பயமுறுத்துவதற்காக அல்ல. நிச்சயமாக அவர்கள் உன்னைக் கொல்லத்தான் போகிறார்கள். இந்த நிலையில் நான் மறுபடியும் அங்கே போக விரும்பவில்லை.''

''இன்னும் ஒரு முறை போய்ப் பார். ஒரே ஒரு முறை போய் உன்னால் ஏதாவது செய்ய முடியுமா என்று பார்.''

''இல்லை, எனக்குப் போக வேண்டுமென்று தோன்றவில்லை. இப்போது நான் போய் அவர்களைத் தொந்தரவு செய்தால் நான் உன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னுடைய மகன் என்று தெரிந்து என்னையும் சுட்டுத் தள்ளிவிடுவார்கள். எல்லாம் இப்போது இருக்கிறபடியே இருக்கட்டும்."

''போ, ஹுஸ்தினோ, என்மேல் கொஞ்சம் இரக்கம் காட்டும்படி போய்ச் சொல். அதை மட்டுமாவது சொல்."

பற்களைக் கடித்துக் கொண்டு முடியாது என்று தலையை ஆட்டினான் ஹுஸ்தினோ.

ரொம்ப நேரத்திற்கு அவன் தலையை ஆட்டிக் கொண்டேயிருந்தான்.

''கர்னலைப் பார்ப்பதற்கு சார்ஜண்டிடம் அனுமதி கேள். நான் கொஞ்சமும் பிரயோஜனமில்லாத ஒரு வயோதிகன் என்பதை அவரிடம் சொல். என்னைக் கொல்வதால் அவருக்கு என்ன பயன்? குறைந்த பட்சம் அவருக்கு ஆன்மா என்ற ஒன்று இருக்க வேண்டும். அந்த ஆன்மாவின் ஆசீர்வதிக்கப்பட்ட மோட்சத்திற்காகவாவது இதைச் செய்யும்படி அவரிடம் சொல்.'' தான் உட்கார்ந்திருந்த கற்குவியலிலிருந்து எழுந்த ஹுஸ்தினோ லாயத்தின் வாசலை நோக்கி நடந்தான். பிறகு திரும்பிப் பார்த்துச் சொன்னான்: ''சரி. நான் போகிறேன். ஆனால் அவர்கள் என்னையும் கொன்று விட்டால் என் மனைவியையும் குழந்தைகளையும் யார் காப்பாற்றுவார்கள்?"

''கடவுள் காப்பாற்றுவார், ஹுஸ்தினோ. நீ இப்போது அங்கே போய் எனக்காக என்ன செய்ய முடியுமென்று பார். அதுதான் முக்கியம்."

அவர்கள் அவனை அதிகாலையில் உள்ளே கொண்டு வந்தார்கள். இப்போது பொழுது புலர்ந்து விட்டது. இன்னமும் அவன் ஒரு கம்பத்தில் கட்டப்பட்டு காத்துக் கொண்டிருந்தான். அவனால் அசையாமல் இருக்க முடியவில்லை. சிறிது நேரம் தூங்கி ஆசுவாசம் கொள்ளலாம் என்று நினைத்த போது அதுவும் முடியாமல் போனது. பசியும் இல்லை. உயிர் தரித்திருக்க வேண்டும் — அது ஒன்றுதான் அவனது ஆசை. இப்போது அவர்கள் தன்னை உண்மையிலேயே கொல்லத்தான் போகிறார்கள் என்று அவனுக்குத் தெரிந்துவிட்டதால், சமீபத்தில்தான் சாவிலிருந்து மீண்டவனைப் போல் அவனது நினைப்பெல்லாம் உயிரோடு இருக்க வேண்டும் என்ற ஒரே நோக்கமாகவே இருந்தது.

எப்போதோ வெகு காலத்திற்கு முன்பு நடந்து மறக்கப்பட்டுவிட்ட அந்த விஷயம்—அதாவது தோன் லூப் பேவை அவன் கொல்ல வேண்டி வந்தது—இப்போது இப்படி முளைத்து எழும் என்பதை யார்தான் எதிர்பார்த்திருக்க முடியும்? அவன் செய்த கொலை—அலிமாக் காரர்கள் குற்றம் சாட்டியது போல் அவன் ஒன்றும் காரணமின்றி கொலை செய்யவில்லை. அதற்குச் சரியான காரணம் இருந்தது. நினைத்துப் பார்த்தான்: ப்யூர்தா தெ பியேத்ராவுக்கு தோன் லூப்பே தெர்ரரோஸ் உரிமையாளனாக இருந்த போது அவனும் அவன் நண்பனும் தான் இவனுடைய கால்நடைகளை அவன் நிலத்தில் மேய்க்க அனுமதிக்கவில்லை.

முதலில் அவன் எதுவுமே செய்யவில்லை. ஆனால் பிறகு வறட்சி வந்த போது கால் நடைகள் தீனியில்லாமல் பட்டினியால் ஒன்றன் பின் ஒன்றாகச் செத்துக்கொண்டிருப்பதைப் பார்த்த போது அந்த நிலையிலும் பக்கத்து நிலத்துக்காரன் லூப்பே தன்னுடைய கால் நடைகளை அவனுடைய நிலத்தை அண்டவொட்டாமல் விரட்டி அடித்த போது—அப்போதுதான் இவன் லூப்பே நிலத்து வேலியை உடைத்து, எலும்பும் தோலுமாய் வற்றிக் கிடந்த தனது கால்நடைகளை அவைகளுக்கு வயிறு முட்ட புல் கிடைக்கக் கூடிய அந்த நிலத்துக்கு இட்டுச் சென்றான். தோன் லூப்பே கோபமடைந்தான். வேலியைச் செப்பனிட்டான். அதனால் ஹுவென்சியோ நாவா, திரும்பவும் வேலியில் வழி உண்டு பண்ண வேண்டி வந்தது. இப்படி பகலில் வழி அடைக்கப்படுவதும் இரவில் அது மீண்டும் உண்டாக்கப்படுவதுமாக இருந்தது. வேலிக்கு வெளியிலேயே புல்லை முகர்ந்துகொண்டு மட்டுமே உயிர் தரித்திருந்தன கால்நடைகள்.

எந்த உடன்பாட்டுக்கும் வரமுடியாமல் அவனும் தோன் லூப்பேவும் சண்டை போட்டுக் கொண்டிருந்தார்கள்.

ஒரு நாள் தோன் லூப்பே இவனிடம் சொன்னான்: ''இங்கே பார், ஹுவென்சியோ. இன்னும் ஒரு முறை நீ உன் கால்நடையை என்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தில் மேய விட்டால் நான் அவைகளைக் கொன்று போடுவேன்.''

''கால்நடைகள் அவைகளின் இஷ்டத்திற்கு போவது என் தவறல்ல. அவைகளுக்கு ஒன்றும் தெரியாது. நீ அவைகளைக் கொன்றால் அப்புறம் நான் உன்னைச் சும்மா விடமாட்டேன்'' என்று இவன் அதற்கு பதில் சொன்னான்.

பிறகு அவன் என்னுடைய ஒரு வயதுக் குட்டி ஒன்றைக் கொன்றான்.

முப்பந்தைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒரு மார்ச் மாதம் நடந்தது அது. ஏனென்றால் ஏப்ரலில் நான் சம்மனிலிருந்து தப்பி மலைகளுக்கு வந்து விட்டேன். பத்து பசுக்களையும் என் வீட்டின் உரிமையையும் ஐட்ஜுக்குக் கொடுத்தும் கூட சிறைத் தண்டனையிலிருந்து நான் தப்ப முடியவில்லை. அதற்குப் பிறகும் அவர்களின் தொந்தரவிலிருந்து தப்பிக்க மிச்சம் மீதி இருந்ததையும் கொடுத்தேன். ஆனாலும் தொந்தரவு விட்டபாடில்லை. அதனால் தான் நான் என் மகனோடு பாலோ தெ வெனாடோ என்கிற எனக்குச் சொந்தமான இந்த நிலத்திற்கு வந்து சேர்ந்தேன். பிறகு என் மகனும் வளர்ந்து பெரியவனாகி என் மருமகள் இக்னாசியாவுடன் திருமணமாகி இப்போது எட்டு குழந்தைகள் இருக்கின்றன. ஆக, இது எப்போதோ வெகு காலத்திற்கு முன்பு நடந்த ஒன்று. இப்போது மறக்கப்பட வேண்டியது. ஆனால் அப்படி ஆகவில்லை என்று தோன்றுகிறது.

ஒரு நூறு பெஸோக்களால் எல்லாவற்றையும் சரி செய்து விடலாம் என்று அப்போது கணக்கிட்டேன். செத்துப் போன தோன் லூப்பே அவன் மனைவியையும் இரண்டு கைக் குழந்தைகளையும் தான் விட்டுச் சென்றான். அப்படியும் அவன் மனைவியும் கூட விரைவில் செத்துப் போனாள் என்று அவர்கள் வேதனையுடன் சொன்னார்கள். குழந்தைகளை அவர்கள் எங்கோ தூரத்திலுள்ள உறவினர்களிடம் கொண்டு சேர்த்தார்கள். எனவே அவர்களிடம் பயப்படுவதற்கு எதுவும் இல்லை.

ஆனால் என் பொருட்களைத் திருடி அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் மற்றவர்கள் இன்னமும் எனக்கு சம்மன் வந்து கொண்டிருக்கிறது என்று சொல்லி பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். கிராமத்திற்கு யார் வந்தாலும் என்னிடம் வந்து ''யாரோ அந்நியர்கள் வந்திருக்கிறார்கள். ஜாக்கிரதை, ஹுவென்சியோ'' என்று சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

உடனே நான் மலைகளுக்கு ஓடி வந்து அங்குள்ள மரக் கூட்டங்களிடையே ஒளிந்து கொண்டு புல் பூண்டுகளைத் தின்று கொண்டு நாட்களைக் கடத்திக் கொண்டிருப்பேன். நாய்கள் என்னைத் துரத்தி வருவது போல் சமயங்களில் நடுநிசியில் கூட நான் அப்படி ஓடி ஒளிய நேர்ந்திருக்கிறது. என் வாழ்க்கை முழுவதுமே இப்படித்தான் கழிந்தது. ஒரு வருடமோ இரண்டு வருடமோ அல்ல. என் வாழ்க்கை முழுக்கவும் இப்படிக் கழிந்தது.

ஆனால் இப்போது அவர்கள் வந்திருக்கிறார்கள். மக்கள் அந்தச் சம்பவம் பற்றி எல்லாவற்றையும் மறந்து விட்டார்கள் என்ற தைரியத்தில் இனிமேல் தனக்காக யாரையும் அவன் எதிர்பார்த்திராத இந்தத் தருணத்தில் இனி குறைந்த பட்சம் தனது இறுதி நாட்களையாவது நிம்மதியாகக் கழித்து விடலாம் என்று நம்பியிருந்த போது அவர்கள் வந்திருக்கிறார்கள். ''குறைந்த பட்சம் என் கடைசி காலத்திலாவது எனக்குச் சிறிது அமைதி கிடைக்கும். அவர்கள் என்னை நிம்மதியாக விட்டு விடுவார்கள்'' என்று அவன் நினைத்தான்.

அவன் மனப் பூர்வமாக தனது அந்த நம்பிக்கையில் உறுதியாயிருந்தான். அதனால்தான் மரணத்திலிருந்து தப்பிக்க இவ்வளவு தூரம் போராடிய பிறகு, வாழ்வின் முக்கியமான காலத்தையெல்லாம் அவர்கள் வருவதையறிந்து ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு ஓடி ஒளிவதிலேயே கழித்து விட்ட பிறகு, எல்லாரிடமிருந்தும் தப்பிக்கும் பொருட்டு ஒளிந்து வாழ்ந்த அந்தக் கொடுமையான நாட்களெல்லாம் உடம்பில் வடுக்களாய்ப் படிந்து உடல் வற்றி தோலாய்ச் சுருங்கிய பிறகு, இப்போது வாழ்வின் அந்திமக் காலத்தில் திடீரென்று கொல்லப்படுவோம் என்று நினைத்துப் பார்க்கவே முடியாததாக இருந்தது.

அவன் தன் மனைவி தன்னிடமிருந்து பிரிந்து போனதைக்கூட சகித்துக் கொள்ளவில்லையா? அவன் மனைவி ஓடிப் போய் விட்டாள் என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிந்த அன்று அவளைத் தேடிப் போக வேண்டும் என்று அவன் நினைத்துக் கூடப் பார்க்கவில்லை. அவள் யாரோடு எங்கே போனாள் என்பதைப் பற்றியெல்லாம் யோசிக்காமல், போனது போகட்டுமென்று இருந்து விட்டான். இனிமேல் கீழே கிராமத்திற்குப் போக வேண்டியிருக்காது. மற்ற எல்லா இழப்புக்களையும் சகித்துக் கொண்டது போலவே இதற்கும் அவன் எந்த எதிர்ப்பையும் காட்டவில்லை. இனிமேல் அவனுக்கு கவலைப்பட எஞ்சியதெல்லாம் அவனுடைய வாழ்க்கை மட்டும்தான். அதை அவன் செய்வான்—வேறு எதைச் செய்ய முடியாவிட்டாலும் யாரும் தன்னைக் கொல்லும்படி விட்டு விட மாட்டான். இதுவரை அவனால் அது முடியவில்லை. இப்போது அது முடியவே முடியாது.

ஆனால் அதற்காகத்தான் அவர்கள் அவனை அங்கிருந்து கொண்டு வந்தார்கள். அவனைக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அவனே அவர்களைத் தொடர்ந்து சென்றான். பயத்தினால் கட்டப்பட்டு தனியாகச் சென்றான். எலும்பும் தோலுமாய் வற்றிக் கிடந்த அவனது வயோதிக உடம்பு மரண பயத்தினால் மேலும் ஒடுங்கியிருந்த நிலையில் அவனால் ஓடிவிட முடியாதென்று அவர்களுக்குத் தெரிந்திருந்தது. சாவை நோக்கித்தான் அவன் அழைத்துச் செல்லப்பட்டான். சாவை நோக்கி. அப்படித் தான் அவர்கள் அவனிடம் சொன்னார்கள்.

அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது. சாவை வெகு அருகாமையில் பார்க்கும் போதெல்லாம் வயிற்றில் ஏற்படும் தேள் கொட்டினாற் போன்ற வலியை உணர ஆரம்பித்தான். பயத்தினால் கண்கள் விரிய வாயில் எச்சில் ஊற மிடறு விழுங்கினான். கால்கள் கனப்பதை, தலை சுழல்வதை, நெஞ்சுக் கூட்டை உடைத்து விடுவது போல் இதயம் துடிப்பதை உணர்ந்தான். அவர்கள் தன்னைக் கொல்லப் போகிறார்கள் என்பதை அவனால் ஜீரணிக்கவே முடியவில்லை.

இன்னமும் கொஞ்சம் நம்பிக்கை மீதமிருக்கிறது. அவர்கள் தன்னை தவறுதலாக அழைத்துச் சென்றிருக்கலாம். ஒரு வேளை வேறு ஒரு ஹுவென்சியோ நாவாவுக்குப் பதிலாக அவர்கள் தன்னைப் பிடித்திருக்கலாம். அவர்களுக்கிடையே அவன் கைகளைத் தொங்கப் போட்டுக் கொண்டு அமைதியாக நடந்து கொண்டிருந்தான். வானம் நட்சத்திரங்களின்றி இருண்டிருந்தது. வறண்டிருந்த அந்தப் பூமியில் மெலிதான காற்று லேசாய் வீசிக் கொண்டிருந்தது. தூசு படிந்த சாலைகளுக்கேயுரிய மூத்திர நெடி அடித்தது.

முதுமையினால் ஒடுங்கியிருந்த அவன் கண்கள் அந்த இருட்டிலும் அவனது காலடியிலிருந்த பூமியையே பார்த்துக் கொண்டிருந்தன. அவனது வாழ்க்கையே 'இந்த மண்தான். இந்த மண்ணில்தான் அவன் அறுபது ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறான். கைகளால் அளைந்திருக்கிறான். உணவைப் போல் ருசித்திருக்கிறான். வெகு நேரம் 'இது தான் கடைசி தடவை' என்பது போல்—இது கடைசி தடவை தான் என்பது அவனுக்கு கிட்டத்தட்ட புரிந்து போய் விட்டது—ஒவ்வொரு துளியாகக் கண்களால் தழுவினான்.

பிறகு, எதையோ சொல்ல விரும்புவது போல் தன்னுடன் வந்து கொண்டிருந்தவர்களைப் பார்த்தான். தன்னை விட்டு விடும்படி அவர்களிடம் சொல்லப் போகிறான். ''நான் யாரையும் ஒன்றும் செய்து விடவில்லை, தம்பிகளே'' என்று அவன் அவர்களிடம் சொல்லி விடப் போகிறான். ஆனால் சொல்லாமல் மௌனமானான். இன்னும் கொஞ்ச தூரம் சென்று சொல்லலாம் என்று நினைக்கிறான். அவர்களை வெறுமனே பார்க்கிறான். அவர்கள் தனது நண்பர்கள் என்று கூட அவனால் நினைக்க முடிகிறது. ஆனால் அதை அவன் விரும்பவில்லை. அவர்கள் நண்பர்கள் அல்ல. அவர்கள் யாரென்று அவனுக்குத் தெரியாது. தன் இரு பக்கமும் அவர்கள் வருவதையும் சாலையின் தொடர்ச்சியைக் காண அவ்வப்போது வளைந்து பார்ப்பதையும் கவனித்தான். எல்லாமே மங்கித் தெரியும் அந்த இரவு கவியும் நேரத்தில்தான் அவன் அவர்களை முதன் முதலில் பார்த்தான். விளை நிலங்களின் மேல் சோள நாற்றுக்களை மிதித்துக் கொண்டு அவர்கள் நடந்தார்கள். அங்கே சோளப் பயிர் இருப்பதை அவன்தான் அவர்களுக்குத் தெரிவித்தான். அது ஒன்றும் அவர்களை நிறுத்தி விடவில்லை.

அவர்களை அவன் சரியான சமயத்தில் பார்த்து விட்டான். எல்லாவற்றையுமே சரியான சமயத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் பார்க்கும் அதிர்ஷ்டம் அவனுக்கு எப்போதுமே இருந்து வந்திருக்கிறது அவன் உடனே ஒளிந்து கொண்டிருந்திருக்க முடியும். அவர்கள் திரும்பிப் போகும் வரை சில மணி நேரம் மலையில் மறைந்திருந்து விட்டுப் பிறகு கீழே இறங்கியிருக்கலாம்.

ஏற்கனவே மழைக்காலம் தொடங்கியிருக்க வேண்டும். ஆனால் இதுவரை மழை இல்லாததால் சோளப் பயிர் கருக ஆரம்பித்து விட்டது. இன்னும் கொஞ்ச நாளில் முற்றிலுமாகக் காய்ந்து விடும்.

ஆக, அவன் எதற்காகக் கீழே போனானோ அதற்கு அர்த்தமே இல்லாமல் போய்விட்டது. மீண்டு வர முடியாத குழியில் அகப்பட்டுக் கொண்ட மாதிரிதான் ஆகி விட்டது அவன் போய் அவர்களைப் பார்த்தது.

தன்னை விட்டு விடும்படிச் சொல்லலாமா வேண்டாமா என்று குழம்பியபடியே அவர்களின் பின்னே சென்று கொண்டிருந்தான். அவர்களின் முகத்தை அவன் பார்க்கவில்லை. தன் முன்னும் பின்னுமாய் அசைந்த அவர்களின் உடம்பை மட்டுமே பார்க்க முடிந்தது. அதனால், தான் பேசியது அவர்கள் காதில் விழுந்ததா என்றே அவனால் அனுமானிக்க முடியாதிருந்தது. "நான் யாருக்கும் எந்தத் தொல்லையும் கொடுத்ததில்லை" என்றான். அவன் சொன்னது அதுதான். ஆனால் எந்த மாற்றமும் நிகழவில்லை. ஒருவர் கூட அவன் சொன்னதைக் கேட்டதாகத் தெரியவில்லை. யாரும் அவனைத் திரும்பியும் பார்க்கவில்லை. தூக்கத்தில் நடப்பது போல் அவர்கள் நடந்து கொண்டிருந்தார்கள்.

சொல்வதற்கு இனி எதுவுமில்லை என்று நினைத்தான். நம்பிக்கையை வேறு விதமாகத்தான் தேட வேண்டும். கைகளை மீண்டும் தொங்க விட்டபடி இரவால் இருண்ட அந்த நால்வருக்கிடையே கிராமத்து வீடுகளைத் தாண்டிப் போனான்.

"கர்னல், இதோ அழைத்து வந்து விட்டோம்." [illegible]கிய வாசலின் முன்னே அவர்கள் வந்து [illegible]றார்கள். தொப்பியைக் கையில் எடுத்துக் கொண்டு பவ்யமாக யாரையோ எதிர்பார்ப்பது போல் நின்றான் அவன். ஆனால் "யாரது?" என்ற குரல் மட்டுமே கேட்டது.

"பாலோ தெ வெனாதோவிலிருந்து நீங்கள் அழைத்து வரச் சொன்ன ஆள்தான், கர்னல்".

"அலிமாவில் அவன் எப்போதாவது வசித்ததுண்டா என்று கேள்" என்று திரும்பவும் உள்ளிருந்து கேட்டது குரல்.

"ஏய், நீ அலிமாவில் எப்போதாவது வசித்ததுண்டா?" — எதிரே நின்று கொண்டிருந்த சார்ஜண்ட் அதே கேள்வியைத் திரும்பக் கேட்டான்.

"ஆமாம், அதுதான் என்னுடைய ஊர் என்று கர்னலிடம் சொல்லுங்கள். சமீப காலம் வரை நான் அங்கேதான் இருந்தேன்."

"லூப்பே தெர்ரரோஸை அவனுக்குத் தெரியுமா என்று கேள்."

"லூப்பே தெர்ரரோஸை உனக்குத் தெரியுமா என்று கேட்கிறார்."

"தோன் லூப்பேவையா? தெரியும். எனக்கு அவனைத் தெரியுமென்று அவரிடம் சொல்லுங்கள். அவன் செத்து விட்டான்."

உள்ளிருந்து வந்த குரலின் தொனி இப்போது மாறியது: "அவன் செத்துவிட்டான் என்று எனக்குத் தெரியும்" — அந்தக் கோரைப்புல் தடுப்பின் மறு பக்கத்திலுள்ள ஒருவருடன் பேசும் தொனியில் தொடர்ந்தது குரல்.

"தெர்ரரோஸ் எனது தந்தை. நான் வளர்ந்த பிறகு அவரைப் பற்றிக் கேட்ட போது அவர் இறந்து விட்டார் என்று சொன்னார்கள். நாம் எதைப் பற்றிக் கொண்டு, எதிலிருந்து வேர் விட்டு வளர வேண்டுமோ அது கிள்ளியெறியப் பட்டு விட்டது என்று தெரிந்து கொண்டே வளர்வது என்பது மிகப் பெரிய கொடுமை. எங்களுக்கு அப்படித்தான் ஆயிற்று.

"பிறகு தான் தெரிந்தது அவர் கொலை செய்யப்பட்டார் என்று. முதலில் கோடாரியால் வெட்டி பிறகு எருமைக் கொம்பால் அவர் வயிற்றைக் கிழித்திருந்தார்கள். அப்படியே அவர் இரண்டு நாட்கள் குற்றுயிராய்க் கிடந்திருக்கிறார். இந்த நிலையில் அவர் ஒரு வாய்க்காலில் கிடப்பதைக் கண்டுபிடித்த போது தன் குடும்பத்தாரைக் கவனித்துக் கொள்ளும்படி கெஞ்சியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''காலப் போக்கில் இது மறந்து விட்டாற்போல் தான் தோன்றும். மறக்கத்தான் முயற்சியும் செய்கிறோம். ஆனால் எவன் அதைச் செய் தானோ அவன் இன்னும் உயிரோடுதான் இருக் கிறான் என்பதை எப்படி மறக்க முடியும்? அவனை எனக்குத் தெரியாது. ஆனாலும் வாழ்க்கை நிரந்தரமானது என்ற மாயையில் தன் அழுகிப்போன ஆத்மாவை சீராட்டிக் கொண்டிருக்கும் அவனை என்னால் மன்னிக்க முடியாது. அவன் இருக்கும் இடம் எனக்குத் தெரிந்து விட்ட காரணத்தால் அவனை முடித்து விட வேண்டும் என்று நினைக்கிறேன். இன்ன மும் அவன் உயிரோடிருப்பதை என்னால் அனுமதிக்க முடியாது. அவன் பிறந்திருக்கவே கூடாது.'' அவர் பேசியதெல்லாம் இங்கே வெளியிலிருந்தே தெளிவாகக் கேட்டது. ''அவனைக் கொண்டு போய் கட்டிப் போடுங் கள். நன்றாக வேதனைப் படட்டும். பிறகு சுடுங்கள்'' என்று உத்தரவிட்டார்.

''கர்னல், என்னைப் பாருங்கள், இப்போது நான் எதற்கும் பயனற்றவன். தள்ளாமை யால் நானே விரைவில் செத்துவிடுவேன். என்னைக் கொன்றுவிடாதீர்கள்'' என்று கெஞ் சினான் அவன்.

''கொண்டு போங்கள் அவனை!'' — உள்ளி ருந்து மீண்டும் கேட்டது குரல்.

''நான் ஏற்கனவே வேண்டிய தண்டனையை அனுபவித்து விட்டேன், கர்னல். என்னிட மிருந்த எல்லாவற்றையும் பிடுங்கிக் கொண்டு விட்டார்கள். பல விதங்களில் என்னைத் துன் புறுத்தினார்கள். எந்த நேரத்திலும் அவர்கள் என்னைக் கொன்று விடுவார்கள் என்ற பயத்தி லேயே கிட்டத்தட்ட நாற்பது வருடங்கள் குஷ்ட ரோகியைப் போல் ஒளிந்து வாழ்ந்தேன், கர்னல். இந்த மாதிரி சாக நான் என்ன பாவம் செய்தேன். கடவுளாவது என்னை மன்னிக் கட்டும். என்னைக் கொன்று விடாதீர்கள்! என்னைக் கொல்ல வேண்டாமென்று அவர் களிடம் சொல்லுங்கள்!''

அங்கே அவன் கிடந்தான். தொப்பியால் தரையை அறைந்து கொண்டு அடித்துப் போட்டது போல் புலம்பிக் கொண்டு கிடந்தான் அவன்.

உடனே உள்ளிருந்து வந்த குரல் சொன்னது: ''அவனைக் கட்டிப் போட்டு அவன் நினை விழக்கும் வரை மதுவைக் கொடுங்கள். அப் போது தான் துப்பாக்கிச் சூடு அவனுக்கு உறைக்காது.''

இறுதியில் அவன் ஒரு வழியாக அமைதி அடைந்தான். அதோ அந்தக் கம்பத்தின் கீழே விழுந்து கிடக்கிறான். அவன் மகன் ஹுஸ் தினோ வந்து வந்து போனான். இப்போது மறுபடியும் திரும்பி வந்து போய்க் கொண்டிருக் கிறான்.

உடலை கழுதையின் மேல் வைத்து வழியில் விழுந்து விடாமலிருக்கும்படி இறுகக் கட்டி னான். ஏதும் வித்தியாசமாய்த் தோன்றாம லிருக்க தலையை சாக்கினுள் வைத்து மறைத் தான். பிறகு இறந்தவனுக்கான சடங்குகளை விரைவில் செய்து முடிப்பதற்காக பாலோ தெ வெனாதோவை நோக்கிச் செல்ல அவசரத் துடன் கழுதையைக் கிளப்பினான்.

''உன் மருமகளும் பேரக் குழந்தைகளும் உன்னைத் தேடுவார்கள். அவர்கள் உன் முகத்தைப் பார்த்து அது நீ தான் என்று கண்டு பிடிக்க முடியாது. துப்பாக்கிக் குண்டுகளால் சல்லடையாகி விட்ட உன் முகத்தைப் பார்க்கும் போது ஓநாய்கள் உன்னைத் தின்று விட்டது என்று தான் அவர்கள் நினைத்துக் கொள்வார்கள்'' என்று இறந்தவனிடம் சொன்னான்.

○ ○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹுவான் போஸ்ச் (1909)

டொமினிகா நாட்டைச் சேர்ந்தவர். அரசியல் அகதியாக இருபத்தைந்து வருடங்கள் ஐரோப்பாவிலும் தென் அமெரிக்க நாடுகளிலும் கழித்தார் (பெரும் பகுதி கூபாவில்). சர்வாதிகாரி ட்ரூஜில்லோ கொலை செய்யப்பட்ட பிறகு 1961 இல் டொமினிகா புரட்சிகரக் கட்சியின் தலைவராக நாடு திரும்பினார். 1963இல் அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனாலும் சில மாதங்களில் ராணுவம் ஆட்சியைப் பிடித்தது. 1965 இல் இவரது ஆதரவாளர்கள் ராணுவ ஆட்சியை எதிர்த்து கலகம் செய்தபோது நாட்டில் 'அமைதியை நிலைநாட்ட' அமெரிக்க அதிபர் லின்டன் ஜான்ஸன் அமெரிக்கக் கடற்படையை அனுப்பினார். 1967 இல் நடந்த அதிபர் தேர்தலில் போஸ்ச் ஜோக்யுன் பாலகெர்ரிடம் தோற்றார். இவரது ஒரு நாவலும் பல சிறுகதைத் தொகுதிகளும் வெளி வந்திருக்கின்றன.

பெண்

ஆங்கில மொழிபெயர்ப்பு : குஸ்தாவ் பெலோன்

ஆங்கிலம் வழி தமிழில் : அமரந்த்தா

உயிரற்றுக் கிடந்தது சாலை. யாரும் எதுவும் அதை உயிர்ப்பித்து விட முடியாது. அதி நீளமான அதன் சாம்பல் நிறத் தோல் கூட எங்கும் உயிரின் அடையாளத்தைக் கொண்டிருக்கவில்லை. சூரியன் அதைக் கொன்றது. எஃகுச் சூரியன். கணகணவென்றுெ செம்பிழம் பாய்த் தோன்றிப் பின் வெண்மையாய் மாறும் சூரியன். முடிவில் அந்த வெண்ணிற எஃகு, சாலையின் முதுகில் படிந்து விட்டது.

சாலை இறந்து பல நூற்றாண்டுகள் ஆகியிருக்க வேண்டும். மண்வெட்டியாலும் கடப்பாரையாலும் மனிதர்கள் அதைத் தோண்டினார்கள். பாடிக் கொண்டே தோண்டினார்கள். ஆனால் தோண்டாதவர்களும் பாடாதவர்களும் கூட இருக்கத்தான் செய்தார்கள். இதெல்லாம் வெகு காலம் நீடித்தது. அவர்கள் நெடுந் தொலைவிலிருந்து வந்தவர்கள் என்பது பார்த்தவுடனே தெரிந்தது. அவர்கள் வியர்த்து நாறிக் கொண்டிருந்தார்கள். பகலில் சூரியன் வெண்ணிறம் மாறி செம்பிழம்பாய்த் தோன்றும். அப்போது சாலையைத் தோண்டுபவர்களின் கண்களுக்குள்ளும் ஒரு சிறு தீப்பிழம்பு பற்றிக் கொள்ளும்.

மரணம் சவான்னா சமவெளியைக் கடந்தது. குன்றுகளும் காற்றும் அதைத் தூசியால் மூடின. பிறகு தூசியும் செத்துப் போய் சாலையின் சாம்பல் நிறத் தோலில் படிந்து விட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலையின் இருமருங்கும் முட்புதர்கள் மண்டிக் கிடந்தன. காட்சியின் பிரும்மாண்டம் சமயங்களில் கண்களை களைப்படையச் செய்தது. ஆனால் எல்லாம் வறண்டு கிடக்கிறது. தூரத்தில் தெரிந்தன புதர்க்காடுகள். கள்ளிச் செடிகளின் மேல் இரைக்காக அலையும் பறவைகளின் கூட்டம். அந்தக் கள்ளிச் செடிகள் கூட வெகு தொலைவில் ஒளிரும் எஃகினுள் புதைந்து தான் கிடந்தன.

குடிசைகளும்கூட இருந்தன. மண்ணாலான தாழ்வான குடிசைகள். வெள்ளையடிக்கப் பட்டிருந்ததால் கண்ணுக்கே புலப்படவில்லை. தினந் தினம் எரிந்து போகும் ஆர்வமுள்ள உலர்ந்த கூரைகள் மட்டும் தனியே தெரிகிறது. சிலுப்பிக் கொண்டு நின்ற அக்கூரைகளிலிருந்து தண்ணீர் மட்டும் வழிந்தோடுவதே இல்லை.

செத்துப் போன சாலை தோண்டப் பட்டதால் ஒரேயடியாய் செத்துக் கிடந்தது. முதலில் அவள் ஒரு கரும் புள்ளியாய்த்தான் தெரிந்தாள். பிறகு அந்த நீண்ட செத்த உடலின் மேல் யாரோ விட்டுப் போன கல்லைப் போல் தெரிந்தாள். சிறு காற்று கூட அவள் உடையைத் தீண்டவில்லை. சூரியன் அவளை எரிக்கவில்லை—ஆனால் குழந்தையின் கதறல் தான் அவளை வாதையுறச் செய்தது. வெண்கல நிறத்தில் பிரகாசமான கண்களுடன் தனது பிஞ்சுக் கைகளால் அம்மாவைப் பற்றி இழுக்க முயற்சித்தது அந்தக் குட்டிக் குழந்தை. இன்னும் சற்று நேரத்தில் கதறியழும் அந்த அம்மணக் குழந்தையின் பச்சிளம் உடலை, அதன் கால்களை எரிக்கத் தொடங்கிவிடும் சாலை.

அருகிலிருந்த குடிசை கண்ணுக்கே தெரியவில்லை.

நெருங்க நெருங்க அந்தச் சாலையில் எறியப் பட்ட கல்லைப் போலிருந்த பொருள் வளர்ந்து கொண்டே வருவது தெரிந்தது. பெரிதாக ஆக ஆக அது காரில் அடிபட்டுச் செத்துக் கிடந்த ஏதோ ஒரு கன்றுக் குட்டியாய் இருக்கும் என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் குய்கோ.

சுற்றிலும் பார்த்தான். சவான்னா சமவெளி. தொலை தூரத்தில் புதர் அடர்ந்த ஒரு சிறு குன்று. காற்று உருவாக்கிய மணல் குன்று. வறண்டு போன நதி. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நீரைத் தேக்கியிருந்த பூமியின் உலர்ந்து போன வாய். அந்த பொன்னிறச் சமவெளி சூரியன் உமிழ்ந்த கனமான ஒளிரும் எஃகினால் விரிந்து பிளந்து கிடந்தது. கள்ளியின் மகுடமாய் இரை தேடும் பறவைகள்.

இப்போது மிக அருகில் நெருங்கியதும் அது ஒரு ஆள் என்பது தெரிந்தது. குழந்தையின் கதறல் தெளிவாகக் கேட்டது.

அவள் கணவன் அவளை அடித்து விட்டான். தலை முடியைப் பற்றிக் கொண்டு முஷ்டியால் மண்டையில் ஓங்கி ஓங்கி அடித்தான். அடுப்பைப் போல் தகிக்கும் அந்த வீட்டின் ஒரே அறையினுள் அவளை விரட்டி விரட்டி அடித்தான்.

''கழிசடை...உன்னை வெறி நாயை அடிப்பது போல் அடித்துக் கொல்லப் போகிறேன்''

''யாரும் வரவில்லை செப்பே... .யாருமே வரவில்லை' —விவரிக்க முனைந்தாள்.

''அப்படியா செய்தி? இப்போது பார்'', என்றபடி மறுபடியும் அடித்தான்.

குழந்தை அப்பாவின் காலைப் பற்றிக் கொண்டான். அம்மாவுக்கு மூக்கு வழியே ரத்தம் கொட்டுவதைப் பார்த்தான். ரத்தத்தைப் பார்த்து அவன் பயப்படவில்லை. அவனுக்குக் கதறி அழ வேண்டும் போல் தான் இருந்தது. இப்படியே ரத்தம் கொட்டினால் அம்மா செத்து விடுவாள்.

எல்லாம் அவள் தன் கணவன் கட்டளைப்படி பாலை விற்காததால் வந்த வினை. நான்கு நாட்கள் கழித்து அவன் மலையிலிருந்து திரும்பிய போது வீட்டில் பணம் இல்லை. பால் கெட்டுப் போய் விட்டது என்றாள். உண்மை என்னவென்றால் பாலை அவள்தான் குடித்து விட்டாள், கொஞ்சம் பணத்துக்காக பாலை விற்றுவிட்டு குழந்தையைத் தொடர்ந்து பல நாட்களுக்குப் பட்டினி போட மனம் வராமல் தான் அப்படிச் செய்தாள்.

அவன் அவளைக் குழந்தையை எடுத்துக் கொண்டு வெளியே போகச் சொல்லி விட்டான். ''மறுபடி வீட்டுக்குள் வந்தால் உன்னைக் கொன்று விடுவேன்'' என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவள் மண் தரையில் பரத்திக் கொண்டு கிடந் தாள். பெருமளவில் ரத்தம் வெளியேறியது. அவளுக்கு எதுவுமே கேட்கவில்லை. வெறி யுடன் அவளை வெளியே இழுத்துக் கொண்டு போய் சாலையில் போட்டான் செப்பே. பல நூற்றாண்டுகளாய் செத்துக் கிடந்த அந்தச் சடலத்தின் முதுகில் குற்றுயிராய்க் கிடந்தாள் அவள்.

குய்கோவிடம் இன்னும் இரண்டு நாள் பயணத் துக்கான தண்ணீர் இருந்தது. அவ்வளவை யும் அந்தப் பெண்ணின் முகத்தில் அடித்தான். கைத்தாங்கலாக அவளை குடிசைக்குள் கொண்டு போனான். தன் சட்டையைக் கிழித்து ரத்தத்தைத் துடைக்கலாமா என்று யோசித்தான். பின்பக்கமாக குடிசைக்குள் நுழைந்தான் செப்பே.

''மறுபடியும் இங்கே நீ உள்ளே நுழையக் கூடாது என்று சொன்னேனா இல்லையா?''

அவன் இந்தப் புதியவனை கவனித்ததாகத் தெரியவில்லை. உருகி வழிந்த அந்த வெள்ளை எஃகு அவனை நிச்சயமாக மிருகமாகத்தான் ஆக்கியிருக்கிறது. அவன் தலை செம்பட்டை படர்ந்திருந்தது. விழிகள் சிவந்திருந்தன.

குய்கோ அவனிடம் கத்தினான். ஆனால் அவனோ வெறி பிடித்தவனாக அவளை திரும் பவும் பயமுறுத்திக் கொண்டிருந்தான். அவளை அடிக்க கையை ஓங்கினான். அப்போதுதான் அவர்கள் இரண்டு பேருக்கும் சண்டை ஆரம் பித்தது.

அந்த சிசு அம்மாவின் பாவாடைக்குள் ஒளிந்த படி மறுபடியும் வீறிட்டுக் கத்தத் தொடங்கியது.

சண்டை அமைதியான ஒரு பாடலைப் போல் நடந்தது. அவர்கள் ஒரு வார்த்தை கூட பேச வில்லை. குழந்தையின் கதறலும் குரூரமான அடிதடி ஓசையும் மட்டுமே கேட்டன.

குய்கோ செப்பேயின் மென்னியைப் பிடித்து அவனை மூச்சுத் திணற அடித்துக் கொண்டிருப் பதைப் பார்த்தாள்; குய்கோவின் கைகள் அவள் கணவனின் குரல் வளையை நெறித்துக் கொண் டிருந்தன. செப்பேயின் கண்கள் செருகி விட் டன. முகத்தில் ரத்தம் பொங்க, வாய் பிளந்தது.

என்ன நடந்தது என்பதே அவளுக்குத் தெரி யாது. கதவுக்குப் பக்கத்தில் கருப்பான கன மான எரிமலைக் குழம்பாலான கல் ஒன்று கிடந்தது. தனக்குள் மிருக பலம் ஏற்படுவதை உணர்ந்தாள் அவள். அதை உயரே தூக்கி னாள். மொண்ணையாக விழுந்தது அடி. முதலில் செப்பேயைப் பிடித்திருந்த பிடியை நழுவ விட்டான் குய்கோ. பிறகு கால்களை மடித்து கைகளை விரித்தபடி முனகலோ துடிப்போ இன்றி மல்லாந்து வீழுந்தான்.

அதி சிவப்பாய் பெருகிய குருதியை உறிஞ்சி யது தரை. அதன் மேல் ஒளி தெறித்து மின்னு வதைப் பார்த்தான் செப்பே.

தெறித்து விழுகிறாற்போன்ற கண்களுடன் தலைவிரிகோலமாய் நின்றவள் கைகளால் முகத்தை மூடிக்கொண்டாள். ஓடினாள். உட லின் ஒவ்வொரு மூட்டும் வலிப்பதை உணர்ந் தாள். யாராவது வருகிறார்களா என்று பார்த்தாள். ஆனால் அந்த நீண்ட உயிர்ப் பற்ற சாலையில்—சிறிதளவும் உயிரற்ற அந்தச் சாலையில் அவளைக் கொன்ற சூரியனைத் தவிர வேறு யாரும் இல்லை. தொலைவில் சமவெளிக்குப் பின்னே காற்று குவித்த மணற் குன்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைபடும் சுவர்

குமார் மூர்த்தி

நான் அவனைச் சந்தித்தபோது மிகவும் இளைத்திருந்தான். மாதக் கணக்கில் சவரம் செய்யாத தாடியோடும் கசங்கிய சட்டையோடும் காணப்பட்டான். பார்க் ஒன்றில் உட்கார்ந்திருந்தபோதுதான் கண்டேன். இந்த பாலு என்கிற பாலசிங்கத்தை எனக்கு பன்னிரண்டு வயதிலிருந்தே தெரியும். ஆனால் அன்று பார்க்கில் பார்த்தபோது அடையாளமே தெரியவில்லை. அவ்வளவுக்கு மாறிவிட்டிருந்தான். கிட்டப்போய் நீதான் பாலுவா? என்று கேட்கக் கூட பயமாக இருந்தது. கொஞ்ச நாளுக்கு முன் வெறொரு பார்க்கில் நம்மவர் ஒருவர் மயக்கத்தில் கிடந்ததாகவும், அதைப் பார்த்துப் பரிதாபப்பட்ட இன்னொரு நம்மவர் உதவி செய்யப் போய் கடைசியில் அவர் பொலீசிடம் இருந்து விடுபட்டதே பெரிய கதையாக ஊரெல்லாம் கதைத்துக் கொண்டார்கள். மயங்கிக்கிடந்தவர் போதை மருந்து மயக்கத்தில் கிடந்ததுதான் காரணமாம். அங்கொன்றும் இங்கொன்றுமாக ஆண்களும் பெண்களும் வெய்யிலின் சுகத்தை அனுபவித்தபடி இருந்தனர். போன வாரம்தான் கோடை விடுப்பும் வந்தது. இந்தக் காலத்தில் ரொறன்ரோவைப் பார்க்க மிகவும் ஆசையாக இருக்கும். எங்கு பார்த்தாலும் புல்தரைகளும் மரங்களும் பச்சைப் பசேலென்று கவிந்திருக்கும். — பச்சைப் புல்லைத் தின்று விட்டு கழியும் மாடும், எருமையும் கிடையாது. சாலைகள் துப்புரவாக இருக்கும். விதம் விதமான பூக்கள் பெரிசும் சிறுசுமாக எல்லாவகைப் பூக்களும் இருக்கும். ஆனால் அரளிப்பூ மாத்திரம் இல்லை, நம் நாட்டில் சாமிக்கு சாத்துவது காய் அரைத்து சாப்பிட்டு தற்கொலை பண்ணிக் கொள்வது இதெல்லாம் நமக்கு சொந்தமான சமாச்சாரம்—பார்க்குகளில் பெஞ்சுகள் போட்டு தண்ணீர்த் தொட்டி அமைத்து ரொம்ப அழகாகப் பராமரிப்பார்கள். மாப்பிள் மரத்தில் இருந்து மர அணில்களும் புறாக்களுமாக இறங்கி வந்து எதையாவது வாங்கிக் கொறித்துக் கொள்ளும்—காதல் ஜோடிகள்தான் கொஞ்சம் உணர்ச்சி வசப்பட்டு விடுவார்கள்—நாகரிகமான நாட்டுச் சமாச்சாரம், நாம் என்ன செய்வது?

அவனை நெருங்கியும் என்னைக் கவனித்ததாக இல்லை. தலையைச் சொறிந்து கொண்டேன். மயிர் ஒன்றிரண்டு கையோடு வந்தது. முப்பத்தாறு வயதில் முக்கால்வாசி வழுக்கையாய்ப் போன என் தலை. என்ன செய்வது மூன்று தங்கைகளை கரை சேர்த்து முடிய முன்பாதி வழுக்கை; போராட்டம் என்று தொடங்கிய பின் முப்பத்திரண்டு இயக்கங்களின் கொள்கைகளையும் விளக்கங்களையும் கேட்டு மேல்பாதி வழுக்கை — கனடா வந்து சுடுதண்ணீரில் குளிக்கத் தொடங்க சீப்பு வாங்கும் காசு மிச்சமாகி விட்டது.

பாலு என்றேன்!

அண்ணார்ந்து பார்த்தான். கண்கள் கலங்கியிருந்தன. ஆச்சரியத்துடன் புருவங்களை நெரித்தான். ஒரு வருடத்துக்கு மேல் இருக்கும் இருவரும் சந்தித்திருக்கவில்லை. அவன் ஸ்காபுரோவில் நான் டவுன் ரவுனில். அவ்வளவு பெரிய தூரமில்லை. ஆனால் நேரப்பிரச்சனைதான் முக்கியமானது. ஏழுநாள் வேலை செய்தாலும் எப்போதுமே பற்றாக் குறைதான் எனக்கு.

பாலு ஸ்ரேபுரோவில் வீடு வாங்கியிருந்தான். காலியான வீட்டுக்கெல்லாம் போயிருந்தேன். அதற்குப்பின் ஓரிரு நாட்கள் டெலிபோனில் கதைத்ததோடு சரி. கோபமொன்றும் கிடையாது—என்னையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான்.

என்ன பாலு தாடியெல்லாம்? இது என்ன கோலம்? என்றேன்—அழத் தொடங்கிவிட்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னில் பார்க்க பன்னிரண்டு வயது இளமை. எப்போதுமே என்னில் ஒரு மரியாதை அவனுக்கு. ''அண்ணா'' என்று அடக்கமாகக் கதைப்பான். தானும் தன் சோலியுமாக இருக்கும் நல்ல குணமான பொடியன். இவனுக்கு என்ன குறை! வீடு வாங்கியிருக்கிறான். புதுசாக கார் வாங்கியிருக்கிறான்; ஊரில் காதலித்திருந்தவளையே செலவு பண்ணிக் கூப்பிட்டு கலியாணம் செய்தவன். கௌரி நல்ல குணமான பிள்ளை.

எனக்கு ஒன்றுமே புரியவிலை. ஊரில்தான் ஏதேனும்.........அவன் அழுவதை நிறுத்துவதாக இல்லை. தோளைப் பிடித்து உலுக்கி அணைத்துக் கொண்டேன். ஊரில் எவ்வளவோ அன்னியோன்னியமாகத்தான் இருந்தோம். அந்நிய நாடு அந்நியமாக்கி விட்டது. விடாக் கண்டனாக நானும் மல்லுக்கட்டியதில் ''கௌரி துரோகம் செய்துபோட்டாள்ள அண்ணை'' என்றுவிட்டு குலுங்கி குலுங்கி அழுதான். திடீரென்று இந்த அதிர்ச்சியில் நானும் நிலை குலைந்து போனேன். அவனுக்கு ஆறுதல் வார்த்தை கூறக்கூட திராணியில்லாமல் ரூமுக்கு வரும்படி மட்டும் கூறிவிட்டு வேலைக்கு சென்று விட்டேன்.

எனக்கு வேலையும் சரியாக ஓடவில்லை. பாலுவின் தோற்றமும் கௌரியின் சிரித்த முகமும் மாறி மாறி வந்து அலைக்கழித்தது. சின்ன வயதிலிருந்தே காதலித்தவர்கள் — கௌரி அப்படி மாறக்கூடிய பெண்ணுமல்ல. பின் எப்படி.........? கனடா அவளையும் மாற்றி விட்டதா? பல தமிழ்ப் பெண்களின் கதை தெருத் தெருவாக நாறடிக்கப்படுவதும், தொலைபேசி நாடகங்களும், ஓடிப்போவதும் கணிசமான விவாகரத்து வழக்குகளும் என்று கனடாத் தமிழர்களின் முன்னேற்றப்பாதை பற்றி ஒவ்வொரு நாளும் கேள்விப்பட்டதோடு கௌரியும் சேர்ந்து விட்டாளா? முகம் தெரியாதவர்களைப் பற்றி கேள்விப்பட்டபொழுது பெரிதான தாக்கம் என்னுள் ஏற்படவில்லை. இப்போது, பழகிய முகம்......காரணமில்லாமல் எல்லாவற்றின் மீதும் கோபமும் எரிச்சலுமாக வந்தது.

பாலு ரூமுக்கு வந்திருந்தான். சூனியமாக எதையோ வெறித்துக் கொண்டிருந்தான். பியர் கொடுத்து கொஞ்சம் தெம்பாக்கி, அவனைப் பேச வைப்பதற்குள் போதும் போதுமென்றாகிவிட்டது. அழுகையினூடே சில வற்றை மட்டும் சொன்னான். யாரோ வீட்டில் வாடகைக்கு குடியிருந்தவனோடு அவளுக்கு..... ......பின்பு என்ன? சண்டை சச்சரவு என்று பூகம்பமே வெடித்திருக்கின்றது. ஏற்கனவே இந்த கலியாணத்தை விரும்பாத அவன் அக்காளும் நெய் வார்த்திருக்கிறாள். எல்லாமே சீரழிந்து இப்போது அவன் விட்டேற்றியாக யாரோ நண்பர்களுடன் தங்கியிருக்கிறானாம். இப்படித்தான் பலர் ரொறன்ரோவில் பேருக்கும் புகழுக்கும் கடன்பட்டு வீடு வாங்குகிறார்கள். முன் பின் தெரியாதவர்களுக்கு அறை வாடகைக்கு கொடுக்கப்படுகின்றது. பின்பு வீட்டுக்காரிக்கும், குடியிருப்பாளருக்கும் இது என்று கதை கட்டப்படும். முத்திரை குத்துவதிலும் கதை கட்டுவதிலும் நம்மவர்களை மிஞ்ச யாராலும் முடியாதே! நண்பர்கள் சொன்னபோது பெரிதுபடுத்தவில்லை. ஆனால் இப்போது கண் முன்னால் ஒரு குடும்பம் சிதைந்து போகிறது—ஒரு தடவை கௌரியைப் பார்த்து நாலு வார்த்தை சூடாகக் கேட்டுவிட்டு வர வேண்டும் போல் மனது குறுகுறுத்தது.

அவள் தங்கியிருந்த வீட்டைக் கண்டுபிடிப்பதில் அவளவு சிரமம் இருக்கவில்லை. பெல்லை அழுத்தினதும் கௌரியே வந்து கதவைத் திறந்தாள். வெள்ளையில் பூப்போட்ட கவுனுடன் தலைவிரிகோலமாக நின்றாள். அவள் சந்தோஷமாக இருப்பதாகப் பட்டதும் என் மனக் குமைச்சல் இன்னும் அதிகமாகியது. புன்முறுவலோடு உள்ளே கூட்டிச்சென்று சோபாவில் உட்கார வைத்துவிட்டு சற்று தள்ளியிருந்த சோபாவில் உட்கார்ந்து விசும்பி விசும்பி அழத்தொடங்கி விட்டாள். பார்வையை வேறு பக்கம் திருப்பினேன்.

குத்துச் சண்டைப் பிரபலங்கள் ஆக்ரோஷமாக மோதிக் கொண்டிருந்தார்கள் ரீவியில். ஒரு வயதான அம்மாள் ஹாலுக்குள் வந்து எட்டிப் பார்த்துவிட்டு வெடுக்கென்று போய்விட்டாள். எனக்கு ஆச்சரியமாக இருந்தது. யாருக்காக இந்த குத்துச் சண்டை? இந்த அம்மாளுக்காகவா அல்லது கௌரிக்காகவா? எனது சந்தேகத்தை நீடிக்க விருப்பம் இல்லை போலும். நாலு வயது நிரம்பிய ரசிகன் அநாயசமாக வந்து ரீவிக்கு முன் உட்கார்ந்து கொண்டார். அவருடைய ஐம்புலனும் ரீவியிலேயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லயித்திருந்தது. ஒரு குத்துச்சண்டை பிரபலம் ஒரு பெண்ணை மேடையில் வைத்து ஆபாசமாக ஏதோ செய்து கொண்டிருந்தான். அதையும் குறிப்பாக பார்த்துக் கொண்டிருந்தார் அந்த ரசிகர். ஒருவேளை இவரின் அப்பா ஸ்ரேடியத்துக்கு நேரில் பார்க்க போயிருக்க லாம். காட்சி தவறாமல் போகும் நண்பர்கள் வரிசையில் இந்த முகம் தெரியாத மனிதரையும் இணைத்துக் கொண்டேன்.

கௌரி இன்னும் அழுது கொண்டிருந்தாள். என்ன நடந்தது என்று கேட்பது அடிமுட்டாள் தனம். பேச்சை மாற்றி வீட்டுக்காரர் நலத்தை விசாரித்தேன். ''எல்லாமே போச்சு'' என்று மீண்டும் அழுதாள்.

அவளின் குடும்பம் மிகவும் ஆச்சாரமான குடும்பம். அப்பா ஒரு பண்டிதர். எங்கள் மாமாவின் மில்லுக்கு முன்னால்தான் வீடு. தென்னையும், கமுகும், வாழையுமாக வீடு சோலையாக இருக்கும். ஆளுயர சுற்று மதிலும், அலங்கார முகப்பும் பளீரென்றிருக் கும். சிறுவர்களோடு சிறுவர்களாக பாலுவும் கௌரியும் தெருவில் விளையாடிக் கொண்டிருந் தது, இப்போதும் பசுமையாக ஞாபகத்தில் வந்து போனது. நான் கொழும்பில் வேலை கிடைத்துப் போனபின், கௌரி வளர்ந்து பெரியவளாகி, பாலு வளர்ந்து அவளைக் காதலித்தது எல்லாம் என்னைக் கேட்காமல் நடந்த சமாச்சாரங்கள்.

இப்போது கௌரி அருகில் வந்து உட்கார்ந்து கொண்டாள். கலகலப்பாக பேசும் பண்பும், வெகுளித்தனமும் இன்னமும் அப்படியே இருந் தது. திக்கித் திணறி அவள் சொன்னவை களைக் கோர்த்துப் பார்த்தேன். விஷயம் முற்றாக விளங்கி விட்டது. யாரோ முன்பின் தெரியாதவனுக்கு வாடகைக்கு விட்டிருக்கிறார் கள். யாருமில்லாத வேளையில் அவளிடம் வாலாட்டியிருக்கிறான் அந்தக் கயவன். அதை அவள் பாலுவிடம் சொல்ல, பாலு அவனை விசாரிக்கப்போக, ''எல்லாம் அவளும் விருப்பத் தோடுதான்'' என்று சொன்னதோடு நில்லாமல் இன்னும் என்னென்னவோ வாய் கூசாமல் சொல்லி தன்னை தற்காத்துக் கொண்டான் அந்த வீரத் தமிழன்.

ரூமுக்கு வந்தபோது நன்றாக இருட்டிவிட்டது. புழுக்கம் வேறு ஆளை அமுக்கியது. ரூம் என்று எனக்கும் மற்றவர்களுக்கும் சொல்லிக் கொள் வதைத் தவிர உண்மையில் ஒரு பொந்து—நில வறையில் தயாரிக்கப்பட்டது. இருந்தாலும் விலை அதிகம்தான். சுதந்திரத்திற்கு அந்த விலை.

இல்லாத நண்பனுக்கு விபத்து என்று சொல்லி வேலைக்கு லீவு போட்டுவிட்டு பாலுவைத் தேடிப்பிடித்து ரூமுக்கு வரும்போது வெளியில் வெப்பம் அதிகமாக இருந்தது. குளிர்மையான பியர் உள்ளுக்குள் இறங்கியதும் இதமாக இருந்தது. நீண்ட நேரமாக இருவரும் எதுவும் பேசவில்லை.

எப்போது விவாகரத்து கிடைக்கும் என்ற என் கேள்வியில் மௌனம் கரைந்தது. என்னை இமை வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந் தான் பாலு. ஏனென்றால் அவள் மறுமணம் செய்வதற்கு சம்மதித்து விட்டாள். பையன் எனக்கு தெரிந்தவன்தான். நல்ல குணமான பொடியன், நான்தான்.........அவனுக்கு கண் கள் சிவந்து மீசை துடித்ததுகூட என் கண்களுக் குத் தெரிந்தது. வாயை மூடிப் பல்லை நறுப்பிக் கொண்டான். மீதமிருந்த கால்போத்தல் பியரை மடக்கென்று குடித்துவிட்டு, எழுந்து விறைப்பாக வாசல் வரைக்கும் போனவன் மறுபடியும் வந்து அமர்ந்து கொண்டான். எனக்கு முன்னாலிருந்த பியரையும் என்னைக் கேளாமல் வெடுக்கென்று எடுத்து குடித்துவிட்டு போத்தலைத் தடாரென்று ஓசையோடு வைத் தான். இந்த இடத்தில் வேறு யாருமாக இருந்திருந்தால் அவனின் கோபம் வேறுவித மாக இருந்திருக்கும். ஆனால் நான் இந்த பாலுவுக்கு பயந்த காலமும் இருந்தது. திருட்டு ''தம்'' அடிக்கின்ற காலம். கொழும்பு உத்தி யோகத்தில் பெற்றுக்கொண்ட பழக்கம். ஊருக்கு வரும்போது கூல்பாருக்குள் ஒதுங்கி ஒன்றிரண்டு சுகத்தை அனுபவிப்பது வழக்கம். திடீரென்று ஒரு நாள் பாலு கண்டுவிட்டான்— எங்கே வீட்டில் சொல்லி விடுவானோ என்று பயந்து அவனைக் காணும்போதெல்லாம் தாஜா பண்ணுவேன். ரொறன்ரோ வந்தபின் ஏக சுதந்திரம். எனக்கு மட்டுமென்ன எட்டு வயதுச் சிறுவனுக்கும் ஏக சுதந்திரம்தான் இங்கு. தட்டிக் கேட்டால் பொலீஸ் வரும். தாய் தகப்பன் கம்பி எண்ணவேண்டி வரும்.

இப்போது பாலு கைகளால் முகத்தைப் பொத்திக் கொண்டு கேவிக்கேவி அழுதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தங்கள் தவறுகளை தாங்களே உணருவதற்கு சந்தர்ப்பம் கொடுத்தால் நிறையப் பிரச்சனைகள் தீர்ந்து போய்விடும் என்று நான் நம்புவது உண்டு. அவர்கள் உள்ளுணர்வுகளில் நியாயமான சிந்தனை இருக்கும். அதைத் தூண்டிவிடவேண்டும். சிறிது நேர அமைதிக்குப்பின் பாலுவைக் கூட்டிவந்து காரில் ஏற்றினேன். பதிலேதும் கூறாமல் முகத்தைத் துடைத்துக் கொண்டான்.

கௌரி வீட்டுக்கு முன்னால் காரை நிறுத்திய போது எதேச்சையாக வெளியில் வந்த கௌரி எங்களைக் கண்டு திகைத்துப் போனாள். நான் கேட்டதுக்கு மறுப்புச் சொல்லாமல் காருக்குள் ஏறிக்கொண்டாள். இருவர் முகத்திலும் ஏக்கமும், தாபமும், வன்மமும் மாறி மாறித் தோன்றி மறைவதை மட்டும் உணர்ந்து கொண்டேன். ஆனால் மௌனமே பெரிதும் ஆட்சி செய்தது.

ரூமுக்கு வந்த போது ரீவியை நிற்பாட்டாமல் போனதற்காக தலையைச் சொறிந்து கொண்டேன். இருந்தாலும் பேர்லின் சுவர் உடைப்பதைக் காட்டிக்கொண்டிருந்தார்கள். மனதுக்கு இதமாக இருந்தது. சுவருக்கு அப்பால் இருக்கும் உலகத்திற்கு அப்போதுதான் சூரியன் உதிக்கிறது மாதிரி என் கண்களுக்கு கமராவின் வெளிச்சம் தென்பட்டது. கௌரியிடம் ஊர் விடயங்கள் பற்றி பொதுவாகப் பேசினேன். பாபு குனிவதும் நிமிர்வதுமாக ஒரே டென்சனாக இருந்தான். உங்களுக்கு ஆட்சேபணையில்லை யென்றால் சமைத்து சாப்பிட்டு விட்டுப் போகலாம்; எனக்காகத் தான் கேட்கிறேன் என்று சொன்னதும் கௌரி புன்சிரிப்போடு தலையை ஆட்டிக் கொண்டாள். எப்போதோ செத்துப்போன கோழியை பிரிஜ்ஜில் இருந்து எடுத்து சமையலுக்கு அவளோடு உதவிய போது, பாலு எதிலும் கலந்து கொள்ளாமல் கதிரை நுனியில் விறைப்போடு இருந்தான். அவனுக்கு உள்ளூர மனம் இருந்திருக்கலாம், இருந்தாலும் ஆண் பிள்ளை யாயிற்றே என்ற கிறுக்குத்தனமும் கூடவே தொற்றிக் கொண்டிருப்பது தெரிந்தது.

கௌரியிடம் சொல்லிவிட்டு பாலுவோடு வெளியில் வந்து நடந்த போது அடுத்த கட்டத்தைப் பற்றி மனது தீவிரமாக அடித்துக் கொண்டிருந்தது. ''தேடகம்'' நூல் நிலையத்திற்குள் நுழைந்து பேப்பர்களை மேலோட்டமாக மேய்ந்து விட்டு வெளியில் வந்து நடந்த போது பாலு எனது கையை வலுக்கட்டாயமாக பிடித்து நிறுத்தி ''ஏன் அண்ணை ஒன்றும் கதைக்கிறியள் இல்லை'' என்று உருகி ஓடும் பனி போல மெதுவாகக் கேட்டான். என் மௌனம், அவனை மிகவும் வாட்டியிருக்கின்றது. எதையோ சிந்திக்க வைத்திருக்கின்றது என்பதை மட்டும் புரிந்து கொண்டேன். அவனை ஆதரவோடு அணைத்த போது ஏக்கப் பெருமூச்சு விஸ்தாரமாக வெளியேறியது.

பாலு! நான் சொல்லித்தான் நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்னும் அளவுக்கு நீங்கள் சிறுபிள்ளைகள் அல்ல. நீங்கள் எவ்வளவு அன்பாக வாழ்ந்தீர்கள் என்பதை நான் சொல்லுவது அதைக் கொச்சைப் படுத்துவதாகத் தான் இருக்கும். நீ சிந்திக்க கூடியவன், புரிந்து கொள்ளக்கூடியவன் என்ற எண்ணத்தில்தான் ஆரம்பத்திலிருந்தே மனத் தூய்மையோடு அவள் எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாள். அதை நீ சரியாகப் புரிந்து கொள்ளத் தவறி விட்டாய். உன்னுடைய அலட்சியம் தான் பிரச்சனையை வளர விட்டது என்பது என்னுடைய கணிப்பு. சம்பவங்கள் விபத்து மாதிரி நடப்பவைகள். அதைப் புத்திசாதுரியத்துடன் தவிர்த்துக் கொள்பவன் தான் கெட்டிக்காரன். இதற்கு மேல் நான் ஒன்றும் சொல்ல விரும்பவில்லை. ஆனால் கௌரி இன்னும் சுற்று மதில் வீட்டுக்குள் இருந்த கௌரியாகவே இருக்கிறாள். எந்த சூழ்நிலையும் அவளை மாற்றும் என்று நான் நம்பவில்லை. நினைக்கும் போது பெருமையாக இருக்கின்றது.

உண்மைதான் அண்ணை. நானும் தவறு செய்து விட்டேன். பணம், பணம் என்று அலைந்ததில் எல்லாவற்றையும் மறந்து ....

முதல் முறையாக அவன் தன் பிழையை ஒப்புக் கொண்டவிதம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

வீட்டுக்குள் நுழைந்த போது ரீவியில் மறுபடியும் சுவர் உடைவதைப் பார்க்க வேண்டும் போல் மனது ஆதங்கப்பட்டது. கட்டிய கைகளே அதை உடைத்தபோது, மயிர்க்கால்கள் குத்திட்டு நின்றதை, மனது மறுபடியும் நினைத்துக் கொண்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கௌரியே சாப்பாடு பரிமாறினாள். நீண்ட நாள் களுக்குப் பின் ருசியான சாப்பாடு வளையல் கையால் என்று சொன்னபோது அவனையறி யாத சிரிப்பில் பாலுவுக்கு புரையேறிற்று. சடுதியாக அருகில் சென்று தலையில் தட்டி விட்டு தண்ணீர் எடுத்துக் கொடுத்தாள் கௌரி. அவளாக இல்லை அவளின் உள்ளுணர்வுதான் அதை உரிமையோடு செய்திருக்கவேண்டும் என்று நினைத்தவுடன் எனக்கு அந்த ரூமை விட்டு உடனடியாக வெளியேற வேண்டும் போல் இருந்தது.

அவசர வேலை ஐந்து நிமிடத்தில் வந்து விடு கிறேன் என்று பொய் கூறிவிட்டு வீதிக்கு வந்து கால் போன போக்கில் நடந்தேன். உலகம் புதுமையாக இருந்தது. எதிர்படும் மனிதர்களெல்லாம் சந்தோசமாக இருப்பதாகப் பட்டது. இந்த தனிமை அவர்களைச் சேர்த்து வைக்கலாம் அல்லாமலும் விடலாம். இடை யில் நான் எதற்கு பூசாரி மாதிரி. ஊரிலும் இதை விட அதிகம் பிரச்சனைகள் வந்திருக்கும். பெரியவர்கள் பேசித் தீர்த்திருப்பார்கள். ஆனால் இங்கே............ஏனோ சம்பந்தா சம் பந்தமில்லாமல் சங்கரி மாமாவின் நினைவு வந்தது. பாவம் மனுசர் நல்லவர்தான். கொஞ்சம் ஊர் மருந்து சாப்பிட்டு விட்டால் சீதனக்காணி ஞாபகம் வந்து விடும். மாமியோடு கலாட்டா என்று சொல்லத் தேவையில்லை. இப்படித் தான் மூன்று சிறுவர்கள் வந்து குடும் பப் பிரச்சனை தீர்த்து வைக்கிறோம் என்று சொன்னபோது ''எந்த இயக்கம் தம்பியவை'' என்று எக்குத்தப்பாக கேட்டு விட்டார் சங்கரி மாமா? அவ்வளவுதான் நடமாட முடியாத மனிதனாகி விட்டார்.

பழைய ஞாபகங்களை அசைபோட்டு விட்டு கடைசி ஆளாக பார்க்கை விட்டுப் புறப்படும் போது நடுச்சாமத்தை தாண்டி விட்டிருந்தது. ரூமை எட்டிப் பார்த்தபோது விளக்குகள் அணைக்கப்பட்டு நிசப்தமாக இருந்தது. காருக்குள் சென்று முடங்கி விட்டேன்.

காலையில் ரூமுக்குப் போன போது, பாலு வுக்குப் பின்னால் கௌரி ஒட்டிக் கொண்டு நின் றாள். அவள் கண்கள் துருதுருத்தன. இரு வரும் ஏதோ சொல்லவந்து சொல்ல முடியாத தவிப்பாய் விழுங்கிய போது, எனக்கு குபீர் என்று சிரிப்பு வந்தது. அதோடு அவர்களும் கலந்து கொண்டார்கள்.

○ ○ ○

நவீன கலை–இலக்கியம்
குறித்த அனைத்துப்
புத்தகங்களையும் பெற
தொடர்பு கொள்ளுங்கள் :

வயல்

பதிப்பாளர்—புத்தக விற்பனையாளர்
5 கச்சேரி சந்து
மயிலாப்பூர்
சென்னை
600 004

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயில்களும் கூடு கட்ட ஆரம்பித்துவிட்டன !

சரண்யா

சுவாமிநாதனின் மூலைக்குள்ளிருக்கும் 'செல்லுகள்' கொஞ்ச கொஞ்சமாகச் செத்துப்போய்க் கொண்டிருப்பதை அவன் மிகத் தெளிவாகவே உணர்ந்து கொண்டிருக்கிறான். மண்டையோட்டுக்குள் ஒரு கரப்பான்பூச்சி, வெளியே வரும் வழிதெரியாமல் ஓடிக்கொண்டிருப்பதை போல, யாரோ ஒருகுழந்தை விஷமத்தனமாக நகங்கள் வெட்டாத கைவிரல்களை உள்ளே நுழைத்துப் பிராண்டிக் கொண்டிருப்பதைப் போல எப்போது பார்த்தாலும் 'சுளீர் சுளீர்' என்று தனது இலக்கிய மண்டைக்குள் ஏற்பட்டு கொண்டிருக்கிற ரணங்களிலிருந்து கசியும் இரத்தத்தை மையாக்கி எழுதித் தள்ளிக் கொண்டிருக்கிறான். எப்போது எழுத ஆரம்பித்தாலும் கூடவே சகல உபாதைகளும் தோன்றிவிடும். பல்லை நெறுமியபடி கோபித்து, கண் கலங்கி அழுது, பலமாக வாய் விட்டுச் சிரித்து, சுயத்தை வெறுக்குமளவுக்குக் கழிவிரக்கம் மீறிப்போய் எல்லாவற்றிலும் முட்டி மோதிக் கொண்டு ஒருவாறு எழுதி முடித்தபின்பு எப்படியோ அந்தக் கரப்பான் பூச்சி வெளியேறிப்போய் விட்டிருக்கும். இப்போது மூளைக்குள்ளே ஆயிரம் வயலின்களின் கனதியான பின்னணியில் தனித்து ஒரு சித்தார் மீட்டிக் கொண்டிருக்கத் தனக்குள்ளேயே சிரித்துக் கொள்வான். நாளைக்கு வேலைக்குப் போக வேண்டுமென்ற உண்மை உறைத்து விட்டால் போதும்! கூடவே சிகாமணியின் முகத்தில் முழித்துத் தொலைக்க வேண்டுமென்கிற நினைப்பும் வந்து வெறுப்பில் பேனையைத் தூக்கியெறிந்து விட்டுப் புகை பிடிக்கத் துவங்கி விடுவான். அன்றும் அப்படித்தான் நடந்தது.

சிகாமணியின் முழுப்பெயர் என்ன என்பது இவனுக்கு இன்றளவும் தெரியாது. எனினும் ஞான சிகாமணியென்றோ, புத்தி சிகாமணியென்றோ நிச்சயமாக இருக்காதென்பது இவனுடைய திடமான நம்பிக்கை. ஈச்சிலம்பத்தைக் கிராமத்திலிருந்து கனடா வந்த ஒரு அப்பாவி இளைஞனின் கதையைக் குடிவரவு அதிகாரியிடம் மொழி பெயர்த்துச் சொல்லி விட்டுக் கூடவே ''இந்தப் பெயரில் ஒரு கிராமம் இருப்பதாக நான் கேள்விப்பட்டதில்லை'' என்று அனாவசியமானதொரு அபிப்பிராயம் சொல்லப் போனதன் விளைவு? ''எழுபத்திரண்டுமணி நேரத்திற்குள் நீ ஈச்சிலம்பத்தைக்கே திரும்பிப்போய் வெட்டித் திருத்திக் கொண்டிரு'' என்று அந்த அதிகாரி தயவு தாட்சண்யமில்லாமல் சொல்லி விட்டுப் போய் விட்டான். அழுது புலம்பிக்கொண்டிருந்த அந்தப் பையனைக் கண்ட சுவாமிநாதன் என்ன, ஏது விபரமெல்லாம் விசாரித்துக் கடைசியில் இலங்கையின் வரைபடத்தைக் கொண்டு வந்து காண்பித்து அந்த அதிகாரியை ஈச்சிலம்பத்தைக்கு அழைத்துக் கொண்டு போகாத குறையாக நிரூபித்து ஒருவாறு தப்பவைத்து விட்டான். அன்றிலிருந்து அந்தப் பையன் எந்த கடுங்குளிரிலும் சுவாமிநாதனுடைய படத்துக்கு பூவும்வைத்து, ஊதுபத்தியும் கொளுத்தி வருகிறான்.

அதன் பிறகேதான் வடிகட்டிய இந்தச் சிகாமணியின் அறிவின்பாற் கவரப்பட்டு, இன்னும் எத்தனை பேரை இவன் திருப்பியனுப்புவானோ என்ற பயத்தில் தனது கண்பார்வைக்குள்ளேயே வைத்துக் கொண்டிருந்தான் சுவாமிநாதன். இவனையும் ஒரு மொழிபெயர்ப்பாளனாக வரித்துக் கொண்ட கனேடிய குடிவரவு நிலையத்தின் சாமர்த்தியத்தை வியந்தபடியே சிகாமணியைக் கட்டி மேய்த்துக் கொண்டிருந்தான். அதே நேரத்தில் தன்னு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டையக் கண்களுக்குள்ளால் மெல்ல மெல்லத் தனது இருதயத்துக்குள்ளேயே இறக்கி வைத்து நாளெல்லாம் பார்த்துக் கொண்டிருந்த திருமதி சிகாமணியை அப்போதெல்லாம் சுவாமிநாதன் உணர்ந்து கொண்டிருக்க வேண்டுமென்பதில் எந்த நியாயமுமில்லை.

திடகாத்திரமான, உறுதியான தேகக்கட்டு. நன்கு படியவாரி விடப்பட்டிருந்த அடர்த்தியான தலைமயிரின் சில கற்றைகள் இயல்பாகவே நெற்றியில்வந்து விழுந்து தலையாட்டி பேசும் போது அசைந்து கொடுப்பதைப் பார்க்க லயிப்பாக இருக்கும். கண்களில் அப்படியொரு ஜீவகளை. ஆத்மாவையே ஊடுருவிப் பார்க்கக் கூடியதொரு தீட்சண்யம். அறிவைப்போலவே கூர்மையான நாசி. மூக்கிற்கும், மேலுதட்டுக்கும் நடுவேயுள்ள பரப்பளவு அகன்றிருப்பதால் திரண்ட கருகருவென்ற மீசையோடு சுவாமிநாதனைப் பார்க்கும்போது ஒரு இத்தாலியக் களை சொட்டும். துளியளவு தானும் வஞ்சனை கலக்காத நிறைந்த சிரிப்பு. திமிர்த்தனமான நடையிலிருக்கும் கம்பீரம். எந்தமாதிரியான ஆடைகளும் கனகச்சிதமாக அமைந்து விடக்கூடியதான உடல்வாகு. அந்த ஆண்மை தெறிக்கும் முகத்தை நாயகி நெஞ்சுக்குள் பத்திரமாக இறக்கி வைத்துப் பராமரித்து வருவதை எந்த தர்க்கவாதங்களாலும் அநியாயப்படுத்தி விட முடியாது— அவள் சிகாமணியின் மனைவியென்றாலும் கூட!

சுவாமிநாதனின் அகன்ற மார்பில் படர்ந்து கிடப்பதிலும், மார்பு ரோமத்திற்குள் கைவிரல்களை நுழைத்துத் துழாவிக் கொண்டிருப்பதிலும் நாயகிக்கு அலாதிப் பிரியம் அவளது அடர்ந்த நீண்ட தலைமுடியை தனது கைவிரல்களால் கோதி வகிடு பிரிப்பதில் இவனுக்குப் பரம சந்தோஷம்.

''அற்வாட்டர் ஷாப்பிங் சென்டரில்'' நாயகியோடு ஐந்தரை வயது அனுஷ்யாக் குட்டியையும் பார்த்துப்பேசிய அந்த ஒருநாளில்தான் நாயகியை அளக்க முடிந்தது சுவாமிநாதனால். அதற்கு முன்பு எத்தனையோ தரம் சிகாமணி வீட்டுக்குச் சென்றிருக்கிறான். அவள் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் தன்னை வெளிக்காட்டிக் கொண்டதில்லை. அவனும் அறிய முயன்றதில்லை. சிகாமணியைத்தான் தெரியுமே! அவனுக்கு வாயத்தது நிச்சயம் அறிவுக்கொழுந்தாகத்தானே திகழும் என்பதும் இவனுடைய அனுமானம்.

இவனுக்கு பிரெஞ்சு மொழியில் கவிதை எழுதுகிற அளவுக்குத் தெரியும். இந்த மொழியில் இருந்து எதையாவது பெயர்த்தெடுக்க வேண்டிய அலுவலகத் தேவைகள் ஏற்படும்போது இவனைக் குருவாக்கிக் கொள்வான் சிகாமணி. இலங்கைக்கு யாரும் திருப்பியனுப்பப்பட்டு விடக் கூடாதே என்ற பரந்த நோக்கில் கர்ம சிரத்தையோடு உதவுவான் சுவாமிநாதன். அப்பா ஏதாவது காரியமாக உள்ளே சென்றால் மட்டும் அனுஷ்யாக் குட்டி மெதுவாக இவனிடம் வந்து பிரெஞ்சில் நாலு வார்த்தையில் சுகம் விசாரித்துவிட்டுப் போய்விடும். இவனும் கன்னத்தில் வாஞ்சையோடு ஒரு முத்தம் கொடுத்தனுப்புவான். அனுஷ்யா உள்ளே போனதும் அவள் கன்னத்தில் அதே இடத்தில் தானும் ஒன்று கொடுத்து இவனது முத்தத்தைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறாள் நாயகியென்பதை அப்போதெல்லாம் தெரிந்துகொள்ள இவனுக்குக் கடுகளவேனும் வாய்ப்பில்லை, அற்வாட்டரில் அன்று சந்திக்கும்வரை. தகப்பன் இல்லாத சமயங்களில் மட்டும் அனுஷ்யாக் குட்டி ஏன் பயந்து பயந்து தன்னிடம் வந்து பேசிவிட்டுப் போகிறதென்ற கேள்விக்கு ''உவன் அடிக்கிறவன் போலை'' என்று தனக்குள்ளேயே பதில் சொல்லி விட்டுவிட மட்டுமே அவனால் முடிந்தது.

''எஸ்கலேட்டரில்'' மூன்றாம் மாடிக்கு ஏறிக் கொண்டிருந்தவன் பல்வேறு மொழிகளும் சங்கமித்துக்கொண்ட குழப்பமான இரைச்சலுக்கு மத்தியில் ''நாதன் மாமா'' என்ற சுத்தமான தமிழில் பரிச்சயமான குரல் ஒன்றைக் கேட்டுத் திரும்பியவனைப் பார்த்து மூன்றாம் மாடியிலிருந்து கீழே இறங்கிக் கொண்டிருந்த அனுஷ்யாக் குட்டி கையை ஆட்டியது. நிற்கச் சொல்லித் தான் கீழே இறங்கி வருவதாகச் சைகை காட்டிவிட்டு மறுபடியும் இரண்டாம் மாடிக்கு இறங்கினான் சுவாமிநாதன். தன்னைவிடப் பெரியதொரு Teddy Bearஐக் கட்டிப் பிடித்துக் கொண்டிருந்த அனுஷ்யாவை செல்லமாகக் கன்னத்தில் தட்டி விட்டு—

''எங்க மிஸ்டர் சிகாமணியைக் காணேல்ல'' என்று நாயகியிடம் கேட்டான். அந்த மிஸ்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதில் ஒரு கிண்டல் பொதிந்து கிடப்பதை உணர்ந்த நாயகி கொஞ்சம் அழுத்திப் பதில் கொடுத்தாள்—

''மிஸ்ரர் சிகாமணி மிஸிஸ்சகா போயிருக்கிறார். சற்றுத் திடுக்குற்ற சுவாமிநாதன் உடனேயே சுதாரித்துக் கொண்டு அந்த மெல்லிய நகைச்சுவையை ரசித்துச் சிரித்துக் கொண்டு “ஓ! ரொறன்டோ” போயிருக்கிறா? மிஸ்ரருக்கு மிஸஸ் நல்ல காம்பினேஷன் தான். நல்ல ஜோக்'' என்றான்.

''என்ன அர்த்தத்தில் அப்படிச் சொல்கிறீர்கள்?'' என்று அவள் கேட்க, ''ஐயய்யோ, தப்பாக எடுத்து விடாதீர்கள். நீங்கள் சொன்னதைத்தான சொன்னேன்” என்று திருப்பிச் சொன்ன இவனை ''வாங்களேன், ஒரு காப்பி சாப்பிட்டுக்கொண்டே பேசலாம். If you don't mind” என்று அவளே வெகு இயல்பாக அழைத்தாள்.

மூன்று துண்டுப் Pizza, இரண்டு காப்பி, அனுக்குட்டிக்கு ஆரஞ்சு ஜுஸ் என்று ஆர்டர் செய்துவிட்டு — ''உங்கள் எழுத்துக்களை நான் தொடர்ந்து வாசித்து வருகிறேன். அதனால உங்களையே என்னால வாசிக்க முடியுது. அதாவது உங்கடை மனதை என்னால அணுகிப் பார்க்க முடியுது. அவ்வளவு தெளிவாகவும், தீர்க்கமாகவும் எழுதுறீங்கள். குறிப்பாகப் பெண்நிலை வாதம் பற்றியும்; Existentialism பற்றியும் நீங்கள் எழுதும்போது உங்கடை அறிவின் ஆளுமை தெரியுது. எல்லாமே மனது தான். அகமென்றும், புறமென்றும் பிரிச்சுப் பார்க்கிறதுக்கு அங்கை எதுவுமில்லை எண்டதாக உங்கடை கதைகளிலேயும், சில கவிதைகளிலேயும் ஒரு தத்துவத்தை வலியுறுத்த முயற்சி செய்யிறீங்கள். அதே நேரம் அது கலையம்சத்தோடயும் இருக்கிறதும், வெறும் வரட்டுத்தனமான பிரச்சாரமாக இல்லாதுபோய் அழகுபடச் செய்திகளைச் சொல்லிக்கொண்டு போவதும் உங்களின்ரை ஆழமான எழுத்துப் பரிச்சயத்தின் விளைவுதானென்டு நினைக்கிறன்.''

ஏங்கிப்போனான் சுவாமிநாதன். சோவியத் யூனியன் கொடியிறங்கி ரஷ்யக் கொடியேறுவதைப் பார்க்க நேர்ந்த முன்னால் கம்யூனிஸ்ட் போல ஆகிப்போனான். ஈனஸ்வரத்தில் ஒன்று மட்டும் அவனால் கேட்க முடிந்தது.

''உங்கட பெயர் என்னங்கோ?'' அவள் சிரித்துக்கொண்டே, ''நாயகி'' என்றதில் கிறங்கிப் போனான். அன்றுதான் முதன் முதலில் சிகாமணியென்ற மூக்குக் கண்ணாடி கழற்றியெறிந்துவிட்டு வெறும் சுவாமிநாதக் கண்களால் அவளைப் பரிபூரணமாகப் பார்த்தான். அவளது அழகுகள் அப்போதுதான் படு துல்லியமாகத் தெரிந்தன. அனுவுக்கும் அவளுக்கும் முகத்தில் ஏதொரு வித்தியாசமும் இல்லை. இரண்டுமே களங்கமில்லாமலிருந்தன. அந்தக் கரவில்லாத சிரிப்பு இவனை எழுதத் தூண்டிய கவிதைகளுக்குத் தனியாக ஒரு தொகுதியே வெளியிடலாம். அன்று மணிக்கணக்காகப் பேசிக்கொண்டிருந்தனர். அனைத்துமே ஆரோக்கியமானதும், ஆழமானதுமாக அமைந்திருந்தன. அவளது நுட்பமான அறிவையும், இலக்கிய ரசனையையும், பெண்களுக்குக் கெதிரான வன்முறைகள் பற்றிய உரத்த சிந்தனைகளையும் இவனால் இனங்கண்டு கொள்ள முடிந்தது. இரண்டாவது காப்பி குடித்து முடிந்தபோது அவளுடைய அனுமதியைப் பெற்றுக்கொண்டு ஒரு சிகரெட் புகைக்க ஆரம்பித்தான். அதன் பிறகு சிறிதுநேரம் பேசிவிட்டு விடைபெற்றுவரும் வழி நெடுகிலும் ''சிகாமணிக்குப் போய் இப்படியொன்றா?'' என்று சொல்லிச் சொல்லி மாய்ந்துகொண்டே வந்தான்.

இந்தச் சந்திப்பு நிகழ்ந்து சுமார் ஒரு வருடம் வரையிலும் அனேகமாக ஒவ்வொரு நாளும் தொலைபேசியில் மணிக்கணக்காகப் பேசிக் கொண்டிருப்பார்கள். எப்போதாகிலும் நேரில் சந்தித்தும் உரையாடிக் கொண்டார்கள். அவள் வால்ட் விட்மனைப் பற்றிப் பேசுவாள். அவரைப் பின்பற்றிக் கவிதைகள் எழுதிய அலன் கின்ஸ்பேர்க்கைப் பற்றி விமர்சிப்பாள். சமூகம் கட்டிக்கொண்டு அழும் போலித்தனமான வாழ்வியல் நடைமுறைகளை மூர்த்தண்யமாக எதிர்த்து வந்த Beat கவிதை இயக்கத்தினரைப் பற்றியெல்லாம்கூட விரிவாக அலசுவாள். அவளிடமிருந்த ஆங்கில அறிவையிட்டும் இவன் பிரமித்துப் போவான். இவன் எழுத்துக்களை அக்குவேறு, ஆணிவேறாக்கி ஆணித்தரமான விமர்சனங்கள் அவளால் முன் வைக்கப்படும். அட! எனது எழுத்துக்களுக்கு இப்படியும் ஒரு பரிமாணமிருக்கிறதா! என்று அவன் தலையைப் பிய்த்துக் கொள்வான். ஒரு ஸ்ருதிலயத்தோடு இந்த நட்புப் பின்னிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிணைந்து இறுகிக் கொண்டு வருவதை இருவருமே உணர்ந்து கொண்டிருந்தார்கள். இவனும் அண்ணமாச்சார்யார் கீர்த்தனை களிலிருந்து அண்டோனி மோ விவால்டி வரை அறிமுகம் செய்துவைத்துக் கொண்டிருந்தான். உயிர்ப்பான சங்கீதத்தைக் கேட்பதில் அவளும் மிகுந்த ஆர்வம் காட்டினாள். என்னதான் அர சியல், சமூகவியல், கலை, இலக்கியம் குறித்த பார்வைகள் பரிமாறப்பட்டுக் கொண்டாலும் நாயகி பேசும்போது உள்ளார்ந்த ஒரு துன்பம் இருப்பதாக அடிக்கடி இவனுக்குத் தோன்றும். சில நாட்களில் அவள் குரல் அடைத்துப்போயோ அன்றி உற்சாகமிழந்துபோயோ இருக்கும். கலகலப்பாகப் பேசுவதற்காகப் பிரயத்தனம் செய்கிறாளென்பது 'பளிச்'சென்று தெரியும். ஆயினும் இதுபற்றி அவன் எதுவுமே அவளைக் கேட்டதில்லை. ஆனால் அவளுடைய அந்த ரங்க வாழ்க்கையின் அவலங்களைப் பற்றித் தெரிந்து கொள்ளக்கூடிய நேரம் விரைந்தே வந்தது.

தொடர்ந்து மூன்று நாட்களாக அவளிடமிருந்து தொலைபேசியழைப்பு எதுவுமே வராததை யிட்டு ஆச்சரியப்பட்டுப்போன சுவாமிநாதன் ''கடந்த ஒரு வருடத்தில் இப்படி எப்போதும் இருந்ததில்லையே!" என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்டு அவள் வீட்டுக்கு 'டயல்' செய்தான். சுமார் ஆறு தடவைகள் மணி அடித்துவிட்டு எதிர் முனையில் ''ஹலோ.'' அனுக்குட்டிதான் எடுத்தாள்.

''அனும்மா, நான் நாதன் மாமா கதைக் கிறன். அப்பா அல்லது அம்மா யாராவது இருக்கிறார்களா?''

''அப்பா வெளியில போய்ட்டார். அம்மா அழுதுகொண்டு படுத்திருக்கிறா. அம்மா பாவம் மாமா. அம்மா.........அம்மா கதைக்க ஏலாம இருக்கிறா. எனக்குப் பயமா இருக்கு மாமா. அம்மாட முகத்தைப் பார்க்க ஏலாம இருக்கு மாமா. மாமா...........மாமா.......... எனக்குப் பயமா...........''

ஓவென்று அழத் துவங்கினாள் அனு. விக்கி விக்கிப் பேச முடியாமல், உதடுகள் துடிக்க வார்த்தைகள் தொண்டைக்குள்ளிருந்து வெளியே வர முடியாமல் திணறித் திணறி அழுததைக் கேட்டபோது துடித்துப்போய் விட்டான் சுவாமிநாதன். கொஞ்ச நேரம் அழுது ஓய்ந்த பிறகு—

''அனுக்குட்டி, அனும்மா நான் இருக்கிறன்டா. பயப்பட வேண்டாம். என்ன நடந்ததென்டு சொல்லம்மா. என்ர குஞ்செல்லா. ப்ளீஸ், மாமா இருக்கிறன்டா உனக்கு. பயப்படவே வேண்டாம் சொல்லும்மா என்ன நடந்தது?

—மிகவும் ஆதரவோடும், பரிவோடும் கேட் டான். ''மாமா, மாமா அண்டைக்கு இரவு அப்பா அம்மாவ பூட்ஸ் காலால உதைச்சவர். பிறகு முகத்தில எல்லாம் அறைஞ்சு கையால முதுகில எல்லாம் குத்தினவர். பிறகு......... மாமா.........தலைமயிரில பிடிச்சு இழுத்துக் கொண்டுப்போய் ஸ்டவ்வை ஆன் பண்ணிட்டு அம்மாட முகத்தை... ....மாமா......எனக்கு பயமா............''

—மீண்டும் அழுகை பீறிட்டுக் கிளம்ப விம்மி விம்மி அழுதாள் அனுஷ்யா. என்ன செய் தாளோ தெரியாது. லைன் கட் ஆகி விட்டது. இவன் திரும்பவும் டயல் செய்ய முனைய விலலை. இப்போதுதான் முழுப்படமும் தெளி வாகத் தெரிகிறதே! அதிர்ந்துபோய் உட்கார்ந் திருந்தவன் எவ்வளவு நேரம் அப்படியே உறைந்து போயிருந்தானோ தெரியாது. கண் கலங்கி இவன் அழுதான்.

மறுநாள் காலையில் அலுவலகத்துக்குப்போய் சிகாமணி வேலைக்கு வந்திருக்கிறான் என்று ஊர்ஜிதம் செய்தபிறகு பத்துமணிபோல முக்கி யமான 'அப்பாயின்மென்ட்' இருப்பதாகச் சொல்லிவிட்டு லீவு போட்டுக்கொண்டு புறப்பட் டான். அந்த ஒருமணி நேரமும் சிகாமணியின் முகத்தைச் சிதைத்துவிட வேண்டும் என்று ஏற் பட்ட வெறியை அடக்கிக் கொண்டிருப்பதற்கு மிகுந்த எத்தனிப்பு வேண்டியிருந்தது. புறப்பட் டவன் நேரே நாயகி வீட்டுக்கு வந்தான். அழைப்பு மணியை அழுத்திவிட்டு நீண்ட நேரம் காத்திருந்தான். திறப்பதற்கான அறிகுறிகள் ஏதுமில்லை. கதவில் காதைப் பொருத்திக் கேட்டதில் உள்ளே ஆளரவம் இல்லை. மீண்டும் மணியை அழுத்திவிட்டு சில நிமிடங்கள் பொறுத்துப் பார்த்தான். திரும்பிப்போவோமா என்று தோன்றியபோது 'வியூபைன்டர்' வழியே நிழலாடியது. கதவை மெல்லத் திறந்துவிட்டுத் திரும்பிப்போய் சோபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில் அமர்ந்து முகத்தைக் குப்புறக்கவிழ்த்து முழந்தாள்களுக்குள் புதைத்தபடி இருந்து விட்டாள் நாயகி. உட்புறம் கதவைத் தாளிட்டு விட்டுத் திரும்பிய இவனுக்கு எங்கிருந்துதான் அவ்வளவு தைரியம் வந்ததோ. அவள்முன்னால் மண்டியிட்டு உட்கார்ந்து தலையை ஆதரவாகத் தடவி விட்டுத் தோள்களைப்பற்றி முகத்தை நிமிர்த்தினான். அந்தக் குரூரத்தைக் காணச் சகிக்காது கண்களை மூடிக்கொண்டான். அவள் கீழுதடு தடித்துப் பெரிதாக வீங்கி யிருந்தது இரத்தம் வெளிவந்து உறைந்து போயிருந்தது. இடது கண்ணில் பழுக்கக் காய்ந்த 'ஸ்டவ்'வில் வைத்து முகத்தை அழுத்தியதில் கொசுவர்த்திச்சுருள்போல வளை யம் வளையமாக எரிந்து போயிருந்தது. இவனுக்கோ இருதயத்திலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. தொடர்ந்து பார்க்க முடியவில்லை. கண்களில் நீர் நிறைந்து உருண்டோடியது. இருவருமே அழுதார்கள். பொய்மைகளை நினைத்து அழுதார்கள். சமூ கத்தின் பைத்தியக்காரத்தனமான, உளுத்துப் போன அமைப்பை நினைத்து அழுதார்கள். மலடுதட்டிப் போய்விட்ட மரபுகளையும், சம்பிர தாயங்களையும் நினைத்து அழுதார்கள். பண் பாடுகளின் பம்மாத்துத்தனங்களுக்கு இதோ, இதோ 'விக்டிம்'கள். யுகாந்திரமாக வடிந்து தேங்கிப்போயிருந்த கண்ணீர் மடையுடைந்து வழிந்தோடிக்கொண்டிருக்கிறது. சத்தியமாக அவளின் உடலில் நேர்ந்த புண்களுக்காக அவளோ, அவனோ அழவில்லை. சீழும், இரத்தமும் வடிந்து புழுத்துப்போன ஒரு கலாச்சாரத்திற்காக ஆத்மாவிலிருந்து வந்தது அந்தக் கண்ணீர்.

அன்றைய தினத்திலிருந்து அவர்களுக்கிடையே இருந்த மிக மெல்லியதேயான இடைவெளிகூட முற்று முழுதாக அகன்றுபோய், பரிவையும், பாசத்தையும் நாளது வரையில் மறைத்துத் தொங்கிக் கொண்டிருந்த மரியாதைத் திரை அறுந்துபோய் அன்புக்கு பரிபூரணமான சுதந் திரம் கிடைத்தது. அவன் அவளிடம் அவள் தோள்களை ஸ்பரிசித்ததற்காகவும், தலையை வருடியதற்காகவும் மன்னிப்புக்கோரி நின்றான். தான் அதிகம் உரிமையெடுத்துக் கொண்டே னோ என்று மனவேதனைப்பட்டான். அவளோ அவன் கரங்களைப் பற்றிக்கொண்டு அவன் கண்களுக்கூடாகப் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்கள் பேசின.

ஐயா, நீ மனதுக்குச் சத்தியமாக நடந்து கொண்டாய். பிறகென்ன? இப்போது இந்த நிமிடத்திலிருந்து நமக்குள்ளிருந்த கடைசிப் போலித்தனமும் பொசுங்கிப் போனதுவே. வாழ்க்கையின் அனைத்து அம்சங்களிலும் ஒரு வருக்கொருவர் இன்றியமையாதவர்களென்பது இன்னமும் புரியவில்லையா? அவன் மிகத் தெளிவாகவே எல்லாவற்றையும் புரிந்து கொண்டான். இதுவரையில் அறிந்துகொள்ளாத அவளது வாழ்வின் ரகஸ்யங்களையெல்லாம் தெரிந்து கொண்டான். அதனால் அவள் மீதிருந்த மதிப்பும், அன்பும் பல மடங்குகள் பெருகின.

பாடசாலை நாட்களில் நாயகி ஒரு இளை ஞனை விரும்பியிருந்தாள். அவனும் அவளை உளமார நேசித்தான். ஊர்க்கட்டுப்பாடுகள் இவர்கள் பார்த்துக்கொள்வதையோ, சந்தித்து பேசிக்கொள்வதையோ—அது சமூகவாழ்வுக்குப் பாரிய அனர்த்தங்களை உண்டுபண்ணிவிடு மென்கிற பீதியில்—பழமையேபோல் வரிந்து கட்டிக்கொண்டு எதிர்த்தது. இவர்களை மட்டு மல்ல. ஊர் என்கிறதான ஒரு அமைப்பு எல்லா வற்றையும் எல்லாக்காலத்திலும் எதிர்த்தே வந்திருக்கிறது. இதற்கு காதல் மட்டும் விதி விலக்கல்ல. இதனால்தானோ என்னவோ காதல் பிரபஞ்சம் முழுவதிலும் விசுவரூபம் எடுத்து விடுகிறது, ஊரை அம்போ என்று விட்டுவிட்டு! யாரும் தெரிந்து கொள்ளாத படிக்கு இவர்கள் பார்த்தனர், பேசினர், உரிய வரையறைக்குள்ளே அன்பு செலுத்திக்கொண்ட னர். இருவரும் வேறுவேறு பாடசாலைகளில் கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தர வகுப்பில் சில லட்சியங்களையும், பல்கலைக் கழகக் கனவுகளையும் சுமந்துகொண்டு பேரா தெனிய வளாகத்திலேனும் தங்கள் காதல் சுதந்திரமாகத் தொடராதா என்ற நம்பிக்கை யோடு மிகக் கடுமையாகப் படித்துக்கொண்டி ருந்தனர். பௌதீகத்தில் அவளுக்கு விளங் காத பலவற்றை அவன் விளக்கினான். இரசா யனவியலில் அவன் சந்தேகங்களை அவள் நிவர்த்தி செய்தாள். இறுதியாண்டுப் பரீட் சைகள் நெருங்கிக் கொண்டிருந்த நேரம் அது. இந்தப் பரீட்சை முடிவுகளில்தான் பல்கலைக் கழகக் கனவுகள் பலிப்பது நிர்ணயிக்கப்படுகிற நிலைமை.

ஒரு நாள் மாலையில் பாடசாலை முடிந்து நாயகி நடந்து வீடு திரும்பிக்கொண்டிருக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறாள். பின்புறமாக சைக்கிளில் மெதுவாக வந்த அவன் புத்தகமொன்றை அவசரஅவசர மாகய ரும் பார்க்கவில்லையென்று நினைத்துக் கொண்டு அவள் கைகளில் திணித்துவிட்டு வேக மாக மறைந்து விட்டான். அவளுக்கு உடனடியாகத் தேவைப்பட்ட தாவரவியற் கைநூல் அது. ஆனால் இவர்கள் துரதிஷ்டம் நாயகியின் பக்கத்து வீட்டில் வசிக்கும் மாமி இதைப் பார்த்து விட்டாள். பிறகென்ன? கல் தோன்றி மண்தோன்றாக் காலத்தே முன் தோன்றிய மரபுகளை மீறாத மாமி நாயகியின் தாயாரிடம் சென்று ஒரு குறுநாவல் வாசித்து விட்டு அதையே நாவலாக்கி ஊருக்குள் வாசிக்க லாமென்ற யோசனையில் ஆழ்ந்து விட்டாள். இதைத்தொடர்ந்து ஒரு வாரம் வரை எதுவுமே நடக்கவில்லை. நாயகிக்கு எதுவுமே தெரியாது. எப்போதும் போலவே சிரத்தையோடு படித்துக் கொண்டும், பாடசாலைக்குப்போய் வந்து கொண்டுமிருந்தாள். ஆனால் அவள் தாயாரோ அந்த ஒரு கிழமைக்குள்ளாக அந்த இளைஞனை பற்றிய பூரணதகவல்களையும் புலனாய்வு செய்தாள். வடலி ''நெற் வேர்க்'' படுவேக வேலை செய்தது. அவனது குலம், கோத்திரம், குடும்ப நிலைமைகள் குறித்த விசாரணைகள் முடுக்கி விடப்பட்டன. அயலிலுள்ள அனைத்து மாமிகளாலும் இவர்களிருவரதும் நடமாட் டங்கள் கண்காணிக்கப்பட்டன. அவர்களோ பரீட்சை மும்முரத்திலிருந்ததால் இந்தக் கண் காணிப்பு வலயத்தினின்றும் தப்பிக் கண் காணாத தொலைவுக்குப் போய்விட எத்தனிக்க வில்லை. கண்காணிப்பதையே உணர்ந்து கொள்ளமுடியாமற்போன அசடுகள் தப்பித்துப் போவதாவது?

முடிவில் ஒரு போயா தினத்தில் நிர்மனுஷ்ய மான, உற்சாகமில்லாத பிற்பகலில் நாயகியின் படிப்புக்கு முற்றுத்தரிப்பிடப்பட்டது. காரணம் புரியாது கதறினாள். ''என்னைப் படிக்கவிடு'' என்று சண்டை போட்டாளாயினும் அடுப்புச் சுவாலை கிளப்பும் ஊதாங்குழலைத் தூக்கிக் கொண்டு வந்த தாயன்பின் முன்பு அடங்கிப் போய்க் குமுறிக் கொண்டிருந்தாள். அந்த இளைஞன் மிகத் தாழ்ந்த ஜாதி வகுப் பினன் என்று உத்தியோகபூர்வ அறிக்கைகள் தெரிவிப்பதால் அவள் அவனுடன் பழகி யதும், நேசத்தை வளர்த்துக் கொண்டதும் தமது ஜாதிக்கு இழைக்கப்பட்ட அநீதியென்ப தாகவும், அதனால் அவள் உயர்கல்வி பாதிக் கப்பட்டதெனவும் அவளுக்கு அறிவுறுத்தப்பட் டது. ஆயினும் அவளது வளமான எதிர்காலம் இதனால் பாதிப்புக்குள்ளாகவில்லையென்றும், விரைவில் அவளுக்குத் திருமண ஒழுங்குகள் மேற்கொள்ளப்படுமென்றும், அந்த சர்வமங்கள் சுபமுகூர்த்த நாளது வரைவில் அவள் வீட்டு வாசற்படியைத் தாண்டுவதற்கு இடைக்காலத் தடையுத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளதென்றும் தீர்மானங்கள் ஒன்றன் பின்னொன்றாக நிறை வேறின.

திருமணமாகிச் சுமார் ஆறுமாத காலத்திலேயே இறந்துபோன பிற்பாடு, இன்றளவும் நட மாடிக் கொண்டும் — இரண்டாவது தடவை இறந்து போவதற்குத் தருணம் பார்த்துக் கொண்டுமிருக்கும் தந்தையிடமிருந்து எந்த ஆதரவையும் நாயகி எதிர்பார்க்க முடியாத நிலைமையில் எதிர்காலம் பற்றிய நம்பிக்கை கள் பொய்த்தொரு பக்கம்போக அதுவே அச்சுறுத்தலாக இப்போது அமைந்து விட் டதை நினைத்து அழுவதைத் தவிர வேறொன் றும் செய்வதறியாமற் போனாள் நாயகி.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலிஸபெத் ராணி

விக்ரமாதித்யன்

ஒரு வாரமாக மெட்ராஸ் பூராவும் இதுதான் பேச்சு; தினத்தந்தி, தினமணி, நவமணி எல்லாவற்றிலும் போட்டோக்களோடு தலைப்புச் செய்தி; பிரதமர் நேருவோடு, ஜனாதிபதி மாளிகையில், மராட்டிய பிரதேச, மேற்கு வங்காள முதல் மந்திரிகளோடு, கவர்னர்களோடு......டெல்லி, பம்பாய், கல்கத்தா விஜயம் எல்லாம் முடிந்துவிட்டது; அடுத்ததாகச் சென்னையும் திருவனந்தபுரமும்தான். இந்த நாளில் வருகிறார், இங்கிங்கே வருகிறார் என்றெல்லாம் இருந்தது, நாளை பட்டணம் வருகிறார் என்றாகிவிட்டது. இரண்டு தினங்களிலும் ஊர் முழுக்க இதுதான் விஷயம்: 'எலிஸபெத் ராணி சென்னை வருகிறார்.'

கவர்னர் மாளிகையில்தானே எல்லோரும் தங்குவது......சைதாப்பேட்டையில் தொடங்கி மவுண்ட்ரோடு வழியே பீச் ரோடு பக்கமாகத் திரும்பி வருவார். வந்து பொது ஜனங்களுக்கு காட்சி தருவார் ராணி!

இரண்டு நாளைக்கு முன்னாடியே சாலைகளில் நடைபாதைகளை அடைத்துச் சவுக்குக் கட்டைகளில் தடுப்புப் போடப்பட்டது; முதல்நாளே போலிஸ் பந்தோபஸ்து குவிக்கப்பட்டது. இங்கிலாந்திலிருந்து ராணி வருவதென்றால் என்ன சும்மாவா...சுதந்திரம் பெற்ற பிறகு இதுதான் முதல் விஜயம்! இந்தியாவுக்கு வருகை தரும் முதல் ராணி...தேசமெல்லாம் எப்படியோ ஒரு கனவு விரிந்திருந்தது. எடின்பரோ கோமகன் பெயர் எலிஸபெத் ராணி பெயரோடு இணைந்திருந்தது; விலாவாரியாக அவர்கள் வாழ்க்கை சரிதம் எழுதப்பட்டிருந்தது. ஜனங்களின் மனசில் கற்பனைகள் சந்தோஷமாய்ச் சிறகு விரித்துப் பறந்தன.

* * *

பூர்ணனுக்கு உலகம் புரியாத வயசு. கல்லிடைக்குறிச்சியிலிருந்து கிளம்பி வந்தது, அப்பா அந்த மலையாளத்துத் தேவடியாளைக் கூட்டிக்கொண்டு அலைந்தது, அப்பாவும் அவளும் சினிமாவில் எக்ஸ்ட்ராக்களாக நடித்தது, தேடி வந்த இவனைத் திருப்பி அனுப்பியது, அம்மாவை போலிஸ் ஸ்டேஷனில் எழுதி வைத்தது, வீட்டுக்கார ஆயா ஆதரவில் இவர்கள் வாழ்ந்தது......

ருக்மிணி அம்மா, கிருஷ்ணம்மா எல்லாம் ரொம்ப உதவியாக இருந்தார்கள்; வீட்டுத் திண்ணையில் இருக்க இடம் கொடுத்தார்கள்; பசி நேரம் சோறு போட்டார்கள். ''ராஜா மாதிரி பிள்ளைங்கள வச்சுக்கினு இவனுக்குத் தேவிடியா கேட்குதோ, கம்மனாட்டி'' என்று அப்பாவைத் திட்டித் தீர்த்தார்கள். 'அங்கே நிற்காதே, இங்கே போகாதே' என்று அக்காவிடம் கண்டிப்பு காட்டினார்கள். ''லட்சுமி அம்மா..நீ தைர்யமா இரும்மா; நாங்க இருக்கோம்'' என்று தைரியம் சொன்னார்கள்; அப்பாவை வீடு காலிபண்ண வைத்தார்கள்.

அம்மா ஐயர் வீடுகளில் பத்துப் பாத்திரம் துலக்கினாள்; பாய்லருக்குக் கரி அள்ளிப் போட்டாள்; முறைவாசல் செய்தாள்; துணி துவைத்துப் போட்டாள்; மாவு மில் போய்க் கோதுமை திரித்துக்கொண்டு வந்தாள்; வீட்டு வேலை பார்த்துத்தான் இவர்களை வளர்த்து ஆளாக்கினாள்.

திரிக்கக் கொடுத்த கோதுமையில் கொஞ்சம் மேலோடு மாவு எடுத்து வைத்து இவர்களுக்கு சப்பாத்தி போட்டுக் கொடுத்தாள்; ஐயர் வீடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் மிச்சம் மிஞ்சாடியைக் கொண்டுவந்து போட்டாள்; வேறு வழியே இல்லை. பச்சரிசிச் சோறு இப்படித்தான் பழக்கமாச்சு; இவன் உடம்பில் ஐயர் வீட்டுச் சாப்பாடு சாப்பிட்டு ஊறிய ரத்தம் ஓடியது.

பெரிய தம்பி சேகர் வீட்டை விட்டு ஓடிப் போனான்: பாண்டிபஜார் பக்கம்தான் அவனுக்கு இருப்பு. பொறுக்கிப் பயல்களோடு சேர்ந்து கொண்டு சுற்றினான்; பிருந்தாவன் ஓட்டல், பனகல் பார்க் பக்கம் தொட்டிகளில் எச்சில் இலையெடுத்துச் சாப்பிட்டான்.

ராஜசேகரன்! அப்பாவுக்குச் செல்லப்பிள்ளை. ''ராஜசேகரா.....ராஜதந்திரி நீயடா ...மோடி செய்யலாகுமோ......ராஜசேகரா... ..'' இந்த சினிமா பாடல் வரிகளிலிருந்துதான் இப்படியொரு பெயர் வைத்திருப்பார்கள் போல. அவனிடம் வெகு ஆசையாக இருந்தார்கள். சேகர் மாம்பலம் ஸ்டேஷனில் பெட்டி சுமந்தான்; கொஞ்ச காலம் பேனா விற்றான்; யார் என்ன வேலை எவினாலும் செய்வான்; உஸ்மான் ரோடில் எல்லாக் கடைக்காரர்களையும் தெரியும் இவனுக்கே ஒரு மெத்தைக் கடையில் வேலை வாங்கிக் கொடுத்தான்.

எப்போதாவது வீட்டுக்கு வருவான்; அஞ்சு, மூணு தருவான்; அம்மா குளிக்கச் சொல்லி, சாப்பாடு போட்டு, தலைக்கு எண்ணெய் தேய்க்கச் சொல்லி, டிரௌசர் சட்டை துவைத்துக் கொடுப்பாள். (இன்றைக்கும் அம்மாவுக்கு அவன்மேல் தனி பிரியம்.) இருக்கச் சொன்னால் இருப்பானா; படிடா, பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுகிறேன் என்றால் கேட்பானா? அவன் படிப்பே போச்சு. அந்த வயசிலேயே டிரௌசர் பையில் பீடிக்கட்டும், தீப்பெட்டியும் வைத்திருப்பான். அம்மாதான் இவனைத் துணைப்பிடித்துக் கொண்டு தேடிப்போய்க் கூட்டிக் கொண்டு வருவாள். இரண்டு நாள் இருப்பான்; ஓடிவிடுவான்.

சின்னவன் ஆறுமுகம் கைக்குழந்தை; அம்மா எங்கே போனாலும் ஒக்கலில் இடுக்கிக் கொண்டே போவாள். ஐயர் வீடுகளின் பின் வாசல் பக்கம் துண்டை விரித்து அவனைப் படுக்கப் போட்டுவிட்டு ஏனம் கழுவுவாள். சரியான ஆகாரம் இல்லாமல் அவன் வயிறு கெட்டுப் போயிற்று; எப்போதும் பேதியாகிக் கொண்டிருக்கும். இவன்தான் ஜெனரல் ஆஸ்பத்திரிக்குத் தோளில் போட்டுக்கொண்டு போய்க் காண்பித்தான். வழியிலேயே இவன் மேல் பீச்சியெடுத்திருக்கிறான்.

அக்கா படிப்பை மட்டும் நிறுத்தவில்லை. சாரதா ஸ்கூலில் சேர்த்துவிட்டிருந்தது. தமிழ் நன்றாக வரும். கட்டுரைப் போட்டியில், பாட்டுப் போட்டியில் முதல். புத்திசாலி. நல்லா பாட்டுப் படிப்பாள். சின்னத்தம்பியைத் தொட்டிலில் போட்டு ஆட்டும்போது 'பதிபக்தி' படத்தில் சாவித்ரி பாடும் தாலாட்டுப் பாட்டைத்தான் படிப்பாள். அந்த வரிகள் இப்பவும் ஞாபகத்தில் நிற்கின்றன. ''பாப்பா உன் அப்பாவைப் பார்க்காத ஏக்கமோ, பாய்ந்தே மடிதனில் சாய்ந்தால்தான் தூக்கமோ! தட்டாமல் வந்துன்னை அள்ளியே அணைப்பார்; தாமரைக்கன்னத்தில் முத்தங்கள் விதைப்பார்......'' இன்னொரு பாட்டு: 'இரு சகோதரிகள்' படம். ''நெஞ்சம் அலை மோதவே, கண்கள் குளமாகவே, கொஞ்சும் ராதை கண்ணனைப் பிரிந்தே போகிறாள்.'' ''கல்யாண ஊர்வலம் வரும், உல்லாசமே தரும். மகிழ்ந்து நான் ஆடிவேன்...'' இதுகூட அக்கா படித்து மனசில் பதிந்த வரிகள் போலத்தான் இருக்கிறது.

ஆச்சி பெயர்தான் விட்டிருந்தது; சிவகாமி. பட்டப்பேர் மாணிக்கம்; மாமியார் பெயர் சொல்லக்கூடாது என்று. அம்மா ஆச்சி, பெரியம்மா வீட்டில் எல்லோரும் மாணிக்கம் தான். மாமா பெயர் மாணிக்கம் பிள்ளை. மாமாவும் சொல்ப வயசிலேயே, கல்யாணம் ஆகாமலேயே, செத்துப் போனார்கள்; மாமா பேரும் விளங்கவில்லை. அம்மா பேர் சொல்லிக் கூப்பிடுவது அபூர்வம்...அம்மா ஆச்சிதான் மிக பிரியமாக அந்தப் பெயர் சொல்லிக் கூப்பிடுவாள். மகன் பேர் இல்லையா.

அக்கா அப்பாப்பொண்ணு. இப்படியெல்லாம் பண்ணிவிட்டார்களே என்று கோபத்தில் இவன் அப்பாவைத் திட்டுவான்; இல்லாத எரிச்சலில் அம்மாவும் ஏசுவாள். அக்கா மட்டும் ஒன்றும் பேசமாட்டாள். உள்ளூர ஒரு தனி அன்பு வைத்திருந்தாள். ரொம்ப வெள்ளந்தியானவள். அப்பாவை ஒரு முறை தேடிப்போய் பட்ட அவஸ்தைகூட அவள் மனசை மாற்றிவிடவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கா சமைந்து வீட்டில் இருந்ததும் இவன் தான் அப்பாவைப் போய்ப் பார்த்துச் சொன்னான். ''நீ போ...நா நாளைக்கி வர்றேன்'' என்று சொல்லி அனுப்பினார்கள்; ஆனால் வரவில்லை. அக்கா இதை மனசில் வைத்துக் கொள்ளவில்லை. சடங்கு கழிக்க வசதியில்லை; வெறுமே தலைக்குத் தண்ணீர் விட்டு, ஐயரைக் கூப்பிட்டு புண்யானம் பண்ணிவிட்டு, பிறகு பள்ளிக்கூடம் அனுப்பி வைத்துவிட்டது.

அக்காவைப் படிக்கவைக்க வேண்டும்; அவள் தலையெடுத்தால் எல்லாம் சரியாகி விடும். ஈ. எஸ் .எல். சி முடித்து விட்டால் போதும். பெரியக்கா (பெரியம்மா மகள்; அத்தான் ஸ்கூல் இன்ஸ்பெக்டர்.) மனசு வைத்தால் டீச்சர் டிரெயினிங்கில் சேர்ந்து விடலாம். அக்கா டீச்சர் வேலைக்குப் போய்க் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வாள்.

அம்மா காளி... துன்பங்களையெல்லாம் தலை மாலையாகப் போட்டுக் கொண்டாள்: கஷ்டங்களைக் காலில் போட்டு மிதித்தாள். பிள்ளைகள் தாம் வாழ்வு அவளுக்கு. மறத்தி மாதிரி வைராக்யம். கூடலூரில் தேவமார்கள்தாம் அதிகம். ஆச்சி வீட்டைச் சுற்றி அவர்கள் வீடுதான். மறக்குடிப் பழக்கம்தான் அம்மாவுக்கு இந்த தைரியத்தைத் தந்திருக்குமோ... அதிகம் பேச மாட்டாள்; யாரையும் எதுக்கும் எதிர் பார்க்க மாட்டாள். தன்னந்தனியாக இவ்வளவு பெரிய பட்டணத்தில் மூன்று பிள்ளைகளை வைத்துக்கொண்டு காலம் கழிப்பதென்ன லேசா... சமயங்களில் இவர்களிடம் எரிந்து விழுவாள். ''உங்கப்பன் காமாட்டில போயி முட்டுங்க''... என்று கோபிப்பாள்; எதாவது தப்புப் பண்ணிவிட்டால் கண்ணாப்பை சட்டாப் பையைக்கூட விட்டெறிந்து விடுவாள்; பழியாக அடிப்பாள். ஆனால், இவர்களைப் பிரிந்து இருக்க மாட்டாள். இவ்வளவுக்கு மத்தியிலும் இவர்களைப் பொத்திப் பொத்தித்தான் வளர்த்தாள்.

* * *

அம்மா காலையில் இட்லி அவித்துத் தருவாள்; சாயங்காலம் வடை சுட்டுத் தருவாள். இவன் அலைந்து திரிந்து விற்று வருவான். எல்லையம்மன் கோயிலில் சூடன் ஏற்றிக் கும்பிட்டுவிட்டு, அலுமினியச் சட்டியை இடுப்பில் வைத்து அணைத்துக்கொண்டு புறப்பட்டால் வாழைத்தோப்பு வழியே நல்லான்குப்பம், மேட்டுபாளையம், ஜாபர்கான்பேட்டை, சைதாபேட்டை வரை போய், மாந்தோப்பு வந்து, மாம்பலம் ரயில்வே ஸ்டேஷன், ரங்கநாதன் தெரு, பனகல் பார்க் வரை இவன் ஏரியா. சட்டி சுமந்து இடுப்பும், இடது பெருவிரல்-சுட்டு விரல் இணைப்பும் காய்த்துப் போய்விட்டது. இப்படி இட்லி-வடை விற்கப் போகையில்தான் மேட்டுபாளையம் பழைய இரும்புக் கடைக் காரர்கள் பழக்கம். கங்கைகொண்டான் முஸ்லீம்கள்... திருநெல்வேலிக்காரர்களுக்கே ஊர்ப்பற்று ஜாஸ்தி. நாளாசரியாக இவனிடம் பேசி இருந்து விசாரித்தார்கள்

முதலாளி காசிம்பாய் இதில் எவ்வளவு கிடைக்கும் என்று கேட்டார்; சொன்னான். இவ்வளவு தந்தால், வேலைக்கு வருகிறாயா என்று கூப்பிட்டார்; சரி என்றான். அலைய முடியவில்லை; ம...சா...ல் வ...டை என்று கூவ வேண்டியதில்லை; இருந்து செய்கிற வேலை; கொஞ்சம் கூடக் குறைய இருந்தாலும் பரவாயில்லை. இப்படித்தான் காசிம்பாய் கடையில் சேர்ந்தது.

* * *

சேர்ந்து ஒரு வருஷம் ஆகப்போகிறது. ரம்ஜான், பக்ரீத், தீபாவளி, பொங்கல்தான் லீவு. (வருஷம் 363 நாளும் கடை உண்டு.) ரம்ஜானுக்கு முதலாளி டிரௌசர் சட்டை எடுத்துத் தந்தார். வீட்டுக்கு வரச் சொல்லிக் கையில் அஞ்சு ரூபாய் கொடுத்தார்; பிரியாணி சாப்பிட மாட்டான் என்று ரொட்டி சாப்பிடச் சொன்னார்.

சுல்தானா அக்கா அன்பானவர்கள். மதியம் சாப்பாடு எடுத்துவரப் போகையில் இவனுக்காக ரசம் வைத்துச் சோறு சாப்பிடச் சொல்வார்கள். (பூர்ணன் கறி சாப்பிடுவதில்லை; சைவப்பிள்ளைமார் குடும்பத்தில் யாரும் சாப்பிடுவதிலை.) அக்கா அழகாக இருப்பார்கள்; அவர்களின் எளிமையும் அமைதியும் அழகுக்கு அழகு சேர்த்திருந்தது. அவர்களைப் பார்க்கும் போது காந்திமதி அம்மன் ஞாபகம் வரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காசிம்பாய் வித்தியாசமான மனுஷன். காலையில் ஒன்பது மணிக்கெல்லாம் அமிஞ்சிக்கரையிலிருந்து சைக்கிள் மிதித்து வந்துவிடுவார். வந்ததும் இரண்டு ஆமைவடை வாங்கிக் கொண்டு வரச் சொல்வார்; பிறகு சிங்கிள் டீ; இதுதான் காலை டிபன். மதியம் சாப்பிட்டதும் ஒரு குட்டித் தூக்கம். ராத்திரி பத்து மணிக்கு மேல் இரண்டு பக்கோடா பொட்டலத்துடன் வீட்டுக்குப் புறப்பட்டுப் போவார்.

அக்கா நகைகளை அடகு வைத்துத்தான் கடை ஆரம்பித்திருந்தது. கல்யாணத்துக்கு முன்னால் திரி ரோஸஸ் டீ, ஃபைவ் ரோஸஸ் டீத் தூள் வியாபாரம். சைக்கிள் மிதித்துக் கடைகளுக்குப் போட்டுவர வேண்டும். இரண்டு பிள்ளைகள்; ஆண்; அஞ்சு வயசு, மூணு வயசு. ஆள் நன்றாக இருப்பார்; முஸ்லீம்களுக்கே உள்ள சிவந்த மேனி; சுருட்டை முடி; ஒல்லியும் இல்லை; தடிமனும் இல்லை. வயசு முப்பதுக்குள்ளேதான் இருக்கும்.

கடுமையான உழைப்பாளி; கடைக்கு வந்து சட்டையைக் கழற்றிப் போட்டுவிட்டுக் கிளம்பினால் மத்தியான சாப்பாடு வரைக்கும் ஏதாவது வேலை செய்துகொண்டிருப்பார். முதல் நாள் வந்த இரும்புச் சாமான்களை ரகவாரியாகப் பிரித்து போடுவார். தகரம், கம்பி, தண்டவாளம், ஸ்டீல் எல்லாம் அந்தந்த இடத்தில் இருக்க வேண்டும். மார்க்கெட் நிலவரம் தெரிந்து கொள்ள, முன்பணம் வாங்க மண்ணடி போய் வருவார்; சாயங்காலம் வந்து கூட சாப்பிட்டுக் கொள்வார். கடையை நல்ல விருத்தி பண்ணி வைத்திருந்தார். முதலாளிக்கான எல்லா லட்சணங்களும் பொருந்தியவர். ராத்திரி சரக்கு வருகிறது என்றால் இருந்து எடை போட்டு விட்டுத்தான் வீட்டுக்குப் போவார்.

அவர் ரொம்ப நல்ல மனுஷன்; இவனை ரொம்பவும் அன்பாக நடத்தி வந்தார். காலையில் வந்ததும் இவன் சாப்பிட்டானா என்று ஞாபகமாக விசாரிப்பார்; ''இல்லை'' என்றால் சில்லரை எடுத்துக் கொடுத்துச் சாப்பிட்டுவிட்டு வரச் சொல்வார். முதல் தேதி சம்பளம்; வீட்டில் கொண்டுபோய்க் கொடுத்து விட்டு வரச் சொல்வார். இவன்தான் தேநீர் செம்பில் தேநீர் வாங்கி வந்து எல்லோருக்கும் ஊற்றிக் கொடுப்பது; அரைத் தம்ளர் அரைத் தம்ளர்தான்; கடைசியில் நிறைய மீறும்; அது பூர்ணனுக்கு. ஒரு முறை இவனுடைய கள்ளத்தனத்தைக் கண்டுபிடித்துத் திருத்தினார். ஒரு நாள் இவன் அப்துல் வாங்கி வந்த இந்துநேசனை சத்தம்போட்டு படித்துக் கொண்டிருக்கையில் வந்தவர், ''இனிமே இதெல்லாம் படிக்கத பாத்தே, முதுகுத் தோல உரிச்சுப்போடுவேன்'' என்று கண்டித்தார்.

கடையில் அஞ்சு பேர் வண்டிக்காரர்கள். மைதீன்பாய், அப்துல், இப்ராஹிம், சலீம், கனி. மைதீன்பாய் ஓர் அருமையான மனுஷன். எது எப்படிப் போனாலும் வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் போய் விடுவார். ஞாயிற்றுக் கிழமை ரேஸுக்குப் போவார்; ஜெயித்தால் பூர்ணனுக்கு முழுசாக இரண்டு ரூபாய்! நன்றாகச் சமைப்பார். அநேகமாக அவர்தான் சமையல். ஏழெட்டு பார்ட்டிகள் பிடித்து வைத்திருந்தார். கட்டட வேலை நடக்கும் இடங்களில் வாட்ச்மேன் திருட்டுத்தனமாகக் கம்பிகளை எடுத்துப் போடுவான். பின்னிரவில், விடிவதற்குமுன் சைக்கிளை எடுத்துக் கொண்டு போவார்; நீளவாட்டில் வைத்துக் கட்டி எடுத்துக் கொண்டு வருவார். அம்பது ராத்தல், அறுபது ராத்தல்கூட இப்படிக் கொண்டு வந்து விடுவார் ஒரே நாளில் நூறு, இருநூறு சம்பாதித்து விடுவார். இதே மாதிரி, கார்ப்பரேஷன் சாக்கடைக் குழாய்களும் வாங்கிக் கொண்டு விடுவார் திருட்டு இரும்பு வாங்குவதில்தான் காசு பார்க்க முடியும். வண்டி தள்ளிக் கிடைப்பதெல்லாம் தினசரிப்பாட்டுக்கே பத்தாது. எல்லா ஸ்டேஷனுக்கும் மாமுல் உண்டு; வந்து வாங்கிக் கொண்டு போவார்கள். அப்படியிருந்தும், வண்டிக்காரர்களை மடக்கிப் பிடித்து வைத்துக் கொள்வார்கள்; கேஸ் போடுவார்கள். முதலாளி கடையில் வந்து சோதனை போடுவார்கள்; முதலாளியே ரெண்டு மூணு தடவை மாட்டிக்கொண்டு அபராதம் கட்டிவிட்டு வந்திருக்கிறார். இவ்வளவுக்கும் இந்த மாதிரி இரும்புக் கம்பிகளைப் பழைய தகரக் குவியலுக்கு அடியில்தான் போட்டு வைப்பது; உள்ளே சுரங்கம் மாதிரி இருக்கிற ஓர் அறையில்தான் ஒளித்து வைப்பது; யாரும் கண்டுபிடிக்க முடியாது.

மைதீன்பாய்க்குப் பெரிய குடும்பம்; எல்லோரும் ஊரில் இருந்தார்கள்; கையில் கிடைக்கிற பணத்தையெல்லாம் மணியார்டர் அனுப்பி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்து விடுவார். மைதீன்பாய் சுவாரஸ்ய மான மனுஷன். சிரித்த முகமாய் இருப்பார். பழைய தகரம் போட வரும் பெண்களிடம் கேலி பேசுவார். கவலையில்லாத மனுஷன் மாதிரியே இருப்பார்.

இப்ராஹிம் மட்டும் குடும்பத்தைக் கூட்டிக் கொண்டு வந்துவிட்டார். அவர் கொஞ்சம் தந்திரமான ஆள். அவ்வளவாக யாரோடும் ஒட்ட மாட்டார். எல்லோரும் வண்டி எடுத்துக் கொண்டு போனபிறகு, கடைசியில்தான் வருவார். ஆறு, ஏழு மணிக்கு மேல் இருக்க மாட்டார். சைதாப்பேட்டை நாடார் சபையில் சரக்கைப் போட்டுவிட்டு வருகிறார் என்பது பிறகு தெரிந்தது. தெரிந்து என்ன பண்ண. மைதீன்பாய் உட்பட எல்லோரையும் நாடார் கடைக்கே கூட்டிக் கொண்டு போய் விட்டார்; முதலாளியை ஓய்த்து விட்டார்.

அப்துல் கொஞ்ச வயசுப் பையன்; மைதீன் பாய்க்கும் அவனுக்கும்தான் போட்டி; யார் அதிகம் சரக்குப் போடுவது. அப்துல்தான் ஜெயிப்பான். அவன் வண்டி எடுப்பதே கிடையாது. பகலில் வெளியே போவதே இல்லை. மைதீன்பாயைவிட அப்துலுக்கு நிறைய பார்ட்டிகள். நடுராத்திரியில் சைக் கிளை எடுத்துக்கொண்டு போவான்; சில சமயம் வெறுமனே திரும்பும்படியும் ஆகிவிடும். பகல் பூரா தூங்குவான்; சினிமாவுக்குப் போயிருப் பான்; எங்கேயாவது சுற்றுவான். அப்துலு ஒவ்வொரு தடவையும் இவனுக்குக் காசு கொடுப்பான். இவன்தான் ராத்திரி கதவு திறந்து அனுப்ப வேண்டும்; அலாரம் வைத்து எழுப்ப வேண்டும்.

மற்ற இரண்டு பேரும் அதிர்ஷ்டம் இல்லாதவர் கள். நிஜமாகவே பழைய இரும்பு வாங்கிக் கொண்டு வந்து போடுபவர்கள். வீர சாகசம் செய்ய வாய்ப்புக் கிடைக்காதவர்கள்; அவர்கள் தாம் சிரமத்தில் இருப்பவர்களும்.

சாயங்காலம் யார் முதலில் வருகிறார்களோ அவர்கள்தான் சமையல்; சோறு; குழம்பு; ரசம், பக்கோடா. சோற்றில் உப்புப் போட்டுச் சமைப்பது பூர்ணனுக்கு அப்போதுதான் தெரி யும். ராத்திரி அவர்களோடு சாப்பிடுவான். காலையில் ஏனம் கழுவி வைக்க வேண்டும். மிச்சம் பழையது இருக்கும். எல்லோரும் வண்டி தள்ளிக்கொண்டு போய்விடுவார்கள். இவன்தான் சாப்பிடுவான்.

பழைய தகரம், இரும்பு பொறுக்கிக் கொண்டு வரும் பையன்கள், பெண்களிடம் எடைபோட்டு வாங்கி, காசு கொடுத்து அனுப்ப வேண்டும். வண்டிக்காரர்கள் போடுவதைக் குறித்து வைக்க வேண்டும். யாராவது பழைய இரும்புச் சாமான்கள் கேட்டு வந்தால் கொடுத்துவிட்டுக் காசு வாங்கிப் போடவேண்டும். முதலாளி சொல்லும்போது டீ வாங்கிவர வேண்டும். மதியம் சாப்பாடு எடுத்துவர வேண்டும். சாயங்காலம் பக்கோடா பொட்டலம் வாங்கிக் கொண்டு வரவேண்டும். வேலை ஒன்றும் கஷ்டம் இல்லை.

பூர்ணனுக்கு சைக்கிள் விடத் தெரியாது. மாம்பலம் ஸ்டேஷன் நடந்துபோய், நுங்கம் பாக்கத்தில் இறங்கி, அமிஞ்சிக்கரைவரை மறுபடியும் நடந்துபோய்ச் சாப்பாடு எடுத்து வருவதுதான் பெரிய வேலை. சீஸன் டிக்கெட் வாங்கிக் கொடுக்கும்வரை இவன் வித்தவுட்டில் தான் போனான். முதலாளி கொடுத்த காசுக்கு டைமண்ட் பிஸ்கெட்டும் பொரையும் வாங்கித் தின்றுகொண்டே போவான்.

தெருவுக்கு தெரு தி. மு. க. மன்றங்கள், நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மன்றம், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். ரசிகர் மன்றம், இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் ரசிகர் மன்றம், அண்ணா படிப்பகம், சிந்தனைச் சிற்பி சி. பி. சிற்றரசு மன்றம் இப்படி...... பூர்ணன் வாராவாரம் வரும் திராவிட நாடு, இனமுழக்கம், மாலை மணி, மன்றம், தென்றல் ......முரசொலி, தனியரசு, நம்நாடு எல்லாம் படித்து முடித்து விட்டுத்தான் கிளம்பிப் போவான். முதலாளி சாப்பிட மூணு மணியாகி விடும். தினம் அந்த மதிய நேரம் பிரச்சனை யாகும். ஏன்டா இவ்வளவு நேரம் என்று திட்டுவார். கேட் அடைத்துவிட்டது, அக்கா நான் போன பிறகுதான் எடுத்து வச்சாங்க, வீட்டுக்குப் போயிட்டு வந்தேன்—ஏதாவது சொல்வான். மத்தியானம் ஒழுங்காகப் போய் விட்டு வந்துவிட்டால், சாயங்காலம் பக்கோடா வாங்கப் போகையில் படிக்காமல் திரும்பிவர மாட்டான். இதோடு வாஞ்சிநாதன் வாசக சாலை, திருப்பூர் குமரன் படிப்பகம் போய் நாத்திகம், சிகப்பு நாடா, பாரதம் எல்லாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிப்பான். பூர்ணனின் கல்வியறிவே இது தான்!

* * *

டிரங்கு பெட்டி செய்யப் பழைய தகரம் வாங்க ஒருத்தர் வருவார்; நல்ல தகரமாகப் பார்த்து வாங்கிக் கொண்டு போவார். சில சமயங்களில் அவருடன் ஒருத்தியும் வருவாள்; அவருடைய அண்ணி; அண்ணன் இறந்து போய்விட்டார்.

அவர் நல்ல தொழிலாளி; பட்டறையில் கூட ஒரு ஆள்; இரண்டு பேரும் சேர்ந்து தினத்துக்கும் ஏழு, எட்டு பெட்டி செய்து விடுவார்கள். கையில் நல்ல காசு புரண்டது: தொழில் விருத்திக்கு வந்தது.

அவருடைய அண்ணியே பிற்பாடு பிற்பாடு தகரம் வாங்க வந்தாள்.

சின்ன வயசு; பிள்ளை இல்லை. நல்ல லட்சணமாக இருப்பாள்; கறுப்பு என்றாலும் ஓர் அழகு. ஒல்லிதான். சிரிக்கும்போது பார்த்துக் கொண்டிருக்கலாம் போல இருக்கும். சிரித்துச் சிரித்துத்தான் பேசுவாள். சில நேரங்களில் பூர்ணனே தகரத்தைத் தூக்கிக் கொண்டுபோய்ப் போட்டிருக்கிறான். காசு கொடுக்காமல் அனுப்பியதே இல்லை.

அநேகமாக அவள் வருகிற நேரத்தில் முதலாளிதான் இருப்பார். சில சமயம் கடன் சொல்லியும் தகர டின் வாங்கிக் கொண்டு போவாள்; சில சமயம் முதலாளிக்கு இருநூறு, முன்னூறு கைமாற்றும் கொடுத்திருக்கிறாள். ஒரு தடவை சீட்டு எடுத்து இரண்டாயிரம் கொடுத்தாள். வீடு கொஞ்சம் தள்ளி இருந்தாலும் குழம்பு, கறி கொண்டுவந்து கொடுப்பாள். எப்படியோ முதலாளிக்கும் அவளுக்கும் பழக்கமாகி விட்டது. கடையில் எல்லோருக்கும் தெரியும் இது.

இவனை ஒரு நாள் காலையில் ''நிலுவை நிறைய நிக்கி; கேட்டு வாங்கிவைடே...'' என்று சொல்லியிருந்தார். அன்றைக்கு சாயங்காலமே முதலாளி வீட்டுக்குப் புறப்பட்டு போயிருந்தார். மைதீன்பாய் வண்டி வந்ததும் இவன் சொல்லி விட்டுக் கிளம்பினான்.

வாழைத்தோப்புக்கு நடுவில் நாலு குடிசைகள்... முதல் வீடு. இவன் போன நேரம் கதவு அடைத்திருந்தது. தட்டினான்; கொஞ்ச நேரம் தயக்கத்துடன் நின்றிருந்தான். திரும்பலாமா என்று நினைத்துக் கொண்டிருந்தான். கதவை ஒருக்களித்து வைத்தபடி அவள், என்ன என்று விசாரித்தாள். பூர்ணன் சொன்னான். நாளைக்கு கொடுத்து விடுகிறேன் என்று சொல்லி அனுப்பி னாள். அவள் எப்போதுமே இப்படி நிறுத்தி வைத்துப் பேசுகிறவள் இல்லை. திரும்பிவரும் போதுதான் கவனித்தான்: வீட்டுக்கு எதிர்புறம் மரத்தடியில் முதலாளி சைக்கிள் நின்று கொண்டிருந்தது.

முதலாளி இப்போதெல்லாம் சாயங்காலமே புறப்பட்டு விடுகிறார்; பக்கோடா பொட்டலம் வாங்கிக் கொண்டு போவதை விட்டுவிட்டார். கடையைக் கவனிப்பது இல்லை; மண்ணடிக்குச் சரக்கு அனுப்பவில்லை. இவன் சாப்பாடு எடுக்கப் போகும் போதெல்லாம் சுல்தானா அக்கா கேட்டார்கள்; பக்கத்தில் இருந்த சொந்தக்காரர்கள் சந்தேகப்பட்டார்கள். பூர்ணன் தெரியாது என்று சொல்லிப் பார்த்தான்; நம்பவில்லை அம்மா மாதிரி இந்த அக்காவும் கஷ்டப்படப் போகிறார்கள் என்ற எண்ணத்தில் பொய் சொல்ல முடியவில்லை; உண்மையைச் சொன்னான்.

பூர்ணன் அன்றைக்கு லீவு கேட்டான். எதுக்கு என்று கேட்டார் முதலாளி; சொன்னான். ''நீ ஒண்ணும் போ வேண்டாம்; கடையை பாத்துக்கிட ஆளு இல்ல. ராணியப் பாத்து என்ன ஆகப் போகுது'' என்று சொல்லி விட்டார்.

மத்தியானம் சாப்பாடு எடுத்துக் கொண்டு வந்தான்; சாப்பிட்டு, தூங்கி எழுந்து, சைக்கிளை எடுத்துக் கொண்டு வெளியில் எங்கோ புறப்பட்டார் முதலாளி. வெயில் இன்னும் தாழவில்லை. கொஞ்ச நேரம் சென்ற தும் அப்துல் வந்தான். இவன் யோசித்துக் கொண்டே இருந்தான்.

கசகசப்புத் தீரக் குளித்தான்; தேங்கா யெண்ணை தடவித் தலை வாரினான்; டிரௌசர் சட்டை மாற்றினான்; அப்துலிடம் பவுடர் கேட்டு வாங்கி போட்டான்; மெயின் கேட் சாவியைக் கொடுத்தான். அப்துல் கேட்டதுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீட்டுக்குப் போய்விட்டு வருவதாகச் சொன்னான்; கிளம்பி விட்டான்.

நடந்தே போனான்; சைதாப்பேட்டை வளைவில் நிறையக் கூட்டம் நின்றிருந்தது. ராணி வர நேரமாகும் போல. அந்திக் கருக்கல் தாண்டி அங்கே இங்கே நட்சத்திரங்கள் முளைவிட்டன. குழல் விளக்குகள் ஜெக ஜோதியாக சுடர் விட்டன. மதியம் சரியாகச் சாப்பிடாதது பசித்தது; தகையாக இருந்தது; நின்று நின்று கால் கடுத்தது.

ஜனக் கூட்டம் அலை மோதியது; இவ்வளவு பெரிய கூட்டத்தை இந்த மெட்ராஸில் பார்ப்பது இதுதான் முதல் தடவை இவனுக்கு.

* * *

முதலில் ஒரு பைலட் பைக்; பிறகு ஒரு கார்; இரண்டு ஜீப். திறந்த ஒரு பிளைமவுத்தில் நின்றிருக்கும் ராணி; பக்கத்தில் எடின்பரோ கோமகன். ராணிக்கு வலதுபுறம் காமராஜர்.

எல்லாம் ஒரு மின்னல் மாதிரி... கனவு மாதிரி. வெண்சிவப்பு நிறமும் அழகும் ஒய்யாரமும் நூதனமுமாய் எலிசபெத் ராணி; வாட்ட சாட்டமாய், கம்பீரமாய் எடின்பரோ கோமகன். காமராஜர் எப்போதும் போல கதர்வேட்டி, நீளமான சட்டையில். ஜனங்கள் கலைந்தார்கள். இவன் வீடு திரும்பினான். அம்மா கேட்டாள். எல்லாவற்றையும் விவரித்தான். பழையது எடுத்து வைத்தாள்; சாப்பிட்டான்; தூங்கினான்.

* * *

மறு நாள் .. கடைக்குப் போகவில்லை. அம்மா வேலைக்குப் போனாள்; அக்கா பள்ளிக்கூடம் போனாள். பூர்ணன் வீட்டிலேயே இருந்தான். அக்கா வந்து உலை வைத்தாள்; அம்மா குழம்பு வைத்து இவனுக்குப் பிடிக்குமென்று முட்டைக்கோஸ் துவரம் வைத்தாள். சீக்கிரமே சாப்பிட்டு விட்டார்கள். இவன் ஜமுக்காளத்தை எடுத்துக்கொண்டு திண்ணைக்குப் புறப்பட்டான்.

யாரோ தேடி வந்திருப்பதாக வீட்டுக்கார ஆயா சொல்லிற்று. மைதீன்பாய்! முதலாளி கூட்டிக்கொண்டு வரச் சொன்னதாகக் கூப்பிட்டார். முதலாளி சத்தம் போடுவார், அடிப்பார் என்று இவன் பயந்தான். ''நான் பாத்துக்கறேன்; நீ வா,'' என்று சமாதானப்படுத்தினார் மைதீன்பாய்.

இவர்கள் கடைவாசல் நுழைகையில் முதலாளி சைக்கிளைத் தள்ளிக்கொண்டு எதிரே வந்தார். மைதீன்பாய் பின்னால் இவன் நின்றான். முதலாளி முகம் பார்க்க தயங்கினான். மைதீன்பாயிடம் என்னவோ விசாரித்தார். சைக்கிளை ஸ்டாண்ட் போட்டு நிறுத்தினார். இவன் கிட்ட வந்தார். நெட்டித் தள்ளி, பிடரியில் ஓங்கி ஓர் அடி விட்டார். பொறி கலங்கியது போல இருந்தது.

''ராணிய பாக்கப் போறிஹலோ... மூதி... செத்த மூதி. அவ பின்னால போலாம்லாலே... எதுக்கு இங்க வரணும்... போடா நாயி!''

மைதீன்பாய் குறுக்கே புகுந்து தடுத்து இவனை உள்ளே கூட்டிக்கொண்டு போனார்; இவன் வெடுக்கென்று அவர் கையை உதறி விட்டான். பூர்ணனுக்கு அழுகை வந்தது; ஆனால் அழவேயில்லை. முதலாளி சைக்கிளை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். மைதீன்பாய் ஒன்றும் பேசவில்லை.

* * *

அடுத்த நாள்... விடிந்ததும் புறப்பட்டு வீட்டுக்கு வந்தான்; இனி மேல் எங்கேயும் வேலைக்குப் போக முடியாது என்றான்; படிக்க வைக்கச் சொன்னான். அம்மா அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்தாள்! பள்ளிக்கூடத்தில் சேர்த்து விடுவதாகச் சொன்னாள்.

பூர்ணனுக்கு இன்னும் பிடிபடவில்லை அது... இவன் சுல்தானா அக்கா கட்சிதான். இன்று வரையும் இதுதான் விஷயமென்று படுகிறது. அக்காவிடம் சொன்னதற்குக் கிடைத்த பரிசு!

○ ○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கனடாவின் கதை

புதிய பிரான்ஸ் — *பாகம் I* — *ரகுநாதன்*

1980களின் பின் கனடா நாட்டில் குடியேற ஏராளமான இலங்கைத் தமிழர் வந்தவண்ணம் உள்ளனர். மத்தியதர வர்க்கத்திற்கு பெரும் கனவாக இருந்த வெளிநாட்டுப் பயணங்கள் இப்போது சர்வ சாதாரணமாயிற்று. கனடாவில் வந்து குடியேறும் தமிழர்களுக்கு கனடாவைப் பற்றி அதிகம் தெரியாவிட்டாலும் கனடா தங்களுக்கு பாதுகாப்பையும் நல்வாழ்வையும் அளிக்கும் என்ற நம்பிக்கையுடனே குடியேறுகிறார்கள். இவர்கள் கனடாவில் பெறும் சலுகைகள் மேலும் தமிழரின் எண்ணிக்கை அதிகரிக்கக் காரணமாயிற்று. கனடா அகதிகளுக்கு தஞ்சம் அளிப்பதிலும், பாதுகாப்பு வழங்குவதிலும் ஏனைய நாடுகளைவிட மிஞ்சி நிற்கிறது என்பது தெளிவு.

உலகின் இரண்டாவது பெரிய நாடான கனடா சனத் தொகைச் செறிவைப் பொறுத்தவரை மிகவும் பின்தங்கியே உள்ளது.

பொருளாதார சிக்கல்கள் ஏற்படும் ஒவ்வொரு தடவையும் பொருளாதார நிபுணர்கள் கூறும் முக்கிய தீர்வுகளில் மேல் நிற்பது சனத் தொகையை அதிகரிக்க வேண்டும் என்பதே.

இன்றைய கனடா யாவரும் அறிந்ததே. ஆனால் கனடாவைப் பற்றிய ஆரம்ப காலங்களைப் பார்ப்போம். இக்கட்டுரையின் நோக்கமும் அதுவே.

1400களில் ஐரோப்பாவில் இருந்து இந்தியாவைத் தேடி தொடர் பயணங்கள் நடைபெற்றன. இவ்வகையில் கொலம்பஸ் அமெரிக்காவை கண்டுபிடித்தார். வட அமெரிக்க கண்டத்தின் மறு பகுதியான கனடாவை 1497ல் இந்தியாவைத் தேடிச் சென்ற மற்றொருவரான ஜோன் கோபொட் (John Cobot) வந்தடைந்தார். இவர் முதன் முதலில் Labrador அதாவது தற்போதைய Nova Scotia பகுதியை வந்தடைந்தார். இவ் வரவிற்கான நினைவுச் சின்னம் இன்றும் Halifaxல் உள்ளது.

இவரைத் தொடர்ந்து இவரது மகன் (Sebastran) செபஸ்ரியன் Nova Scotia பகுதியை வந்தடைந்தார். இவர்களது வரவு இந்தியாவிற்கான புதிய பாதையை வகுக்கவில்லை. ஆனால் ஐரோப்பாவில் இருந்து மீனவர்கள், கம்பளி வியாபாரிகள் போன்றோர் அமெரிக்காவிற்கு வருவது அதிகரித்தது.

இவ்வாறு இவர்கள் அமெரிக்க கண்டத்தை கண்டுபிடித்தபொழுது இங்கு வாழ்ந்து வந்தவர்கள் 'சிவப்பு இந்தியர்கள்.' தற்பொழுது "Native people" அல்லது பூர்வீகக் குடிகள் என அழைக்கப்படுகின்றனர். அமெரிக்க கண்டம் எங்கும் பரந்து காணப்பட்ட இவர்கள் மத்தியிலும் பல மொழிகள் பேசப்பட்டன.

1534ல் King Francist, என்னும் பிரான்ஸ் நாட்டு அரசன் Jacques Cantie என்னும் கடலோடியை 2 கப்பல்களில் கனடாவை நோக்கி அனுப்பி வைத்தான். இவன் தனது பயணத்தின் போது Minamichi Bayல் 30 அடி உயர நினைவுச் சின்னம் ஒன்றை தமது அரசன் பெயராலும் பிரான்ஸ் நாட்டு முத்திரை கொண்டதாகவும் அமைத்தான். தமது பயண முடிவில் இரு இந்தியர்களை நினைவாகக் கடத்திச் சென்றான்.

மீண்டும் மே 1535ல் தமது இரண்டாவது பயணத்தின்பொழுது Saint Moloல் இருந்து 3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய கப்பல்களில் கனடா வந்தான். இப் பயணத்தின்பொழுது Hochelago என்னும் சிறிய கிராமத்தை அடைந்தார்கள். இது இப்பொழுது Montreal என அழைக்கப் படுகிறது. இப்பயணத்தின்போது Mount Royal மலையையடைந்த இவர்கள் இதற்கு Mount Royal என பெயரிட்டனர். இது இப்பொழுதும் இப்பெயரிலேயே அழைக்கப் படுகிறது. Hochelagoல் அப்பொழுது சுமார் 3,000 இந்தியர்கள் வசித்து வந்தனர். இப் பயணத்தின்போது இவர்கள் கடும் குளிரில் கஷ்டப்பட்டனர். இவர்களுடன் வந்த பயணவாசிகளில் சுமார் ஒரு பகுதி இறந்துபோக குளிர் காலத்தின் பின்னர் இரண்டாவது பகுதியுடன் மீண்டும் பிரான்ஸ் நாட்டை அடைந்தனர். அங்கு பிரான்ஸ், ஸ்பெயின் உள்நாட்டு யுத்தம் நடைபெற்றதால் சிறிது காலம் கனடாவை நோக்கிய பயணங்கள் தாமதமாகின.

கனடா என்ற பெயர் அங்கு வாழ்ந்த பூர்வீகக் குடிகளால் சூட்டப்பட்டது என்பது குறிப்பிடத் தக்கது. இதன் பின்னர் Roberval, Cantlen ஆகியோரால் பயணங்கள் மேற்கொள்ளப் பட்டன. ஸ்பெயின், இங்கிலாந்து நாட்டு கடலோடிகளும் பல தடவைகள் இக்கரையை அடைந்தனர். ஆனால் இச்சமயத்தில் பிரான்ஸ் நாட்டு மீனவர் கனடாவைச் சுற்றியுள்ள பிரதேசத்தில் குறிப்பாக New Foundland & New Brewniswick பகுதிகளை அண்டிய கடல் பிரதேசங்களில் மீன் பிடித்தனர். அத்துடன் இந்தியர்களுடன் வியாபாரத்திலும் ஈடுபட்டனர்.

1603ல் Preree du-Gua முதலாவது லெப்டினட் கவர்னராக அகாடியா மற்றும் St. Lawerance நதிகளையண்டிய பிரதேசங்களுக்கு நியமிக்கப் பட்டார்.

1608-1640 கம்பனி வியாபாரம் வளர்ச்சி யடைந்தது. எனினும் புதிய பிரான்ஸின் பொருளாதாரம் வளர்ச்சி அடையவில்லை. 1627ஐ அடுத்த 5 ஆண்டுகளில் சனத் தொகை 4000 ஆக்குவதென தீர்மானிக்கப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட 5 ஆண்டுகளின் பின்னர் சனத்தொகை 240 ஆகும். இதே போன்று 1663ல் 30,000 ஆக்க வேண்டும் என திட்ட மிடப்பட்ட பொழுதிலும் சனத்தொகை 2500 ஐயே அடைந்தது.

இந்நிலையில் புதிய பிரான்ஸின் சனத்தொகை பற்றிய புள்ளி விபரம் ஆரம்ப காலத்தில் இருந்தே கனடாவின் சனத்தொகை வளர்ச்சி விகிதம் மிகவும் குன்றிய நிலையிலிருந்ததை எடுத்துக் காட்டுகிறது.

Population Statistics
of
NEW FRANCE

ஆண்டு	தொகை	ஆண்டு	தொகை
1608	28	1685	12263
1628	76	1695	13639
1641	240	1706	16417
1653	2000	1719	22530
1663	2500	1734	37716
1665	3215	1739	42701
1668	6282	1754	55009
1679	9400	1760	64041

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Source: Life in New France by Eric Skcoch., Grolier Ltd., Toronto.]

இவ்வட்டவணையில் இங்கு வாழ்ந்த பூர்வீக மக்களின் தொகை உள்ளடக்கப்படவில்லை.

1663

Louix XIV என்னும் 23 வயதுடைய பிரான்ஸ் அரசன் தனது மந்திரியான Jean - Baptiste Colpent உடன் இணைந்து பிரான்சை வளமாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டான். ஐரோப்பாவில் மிகவும் செல்வந்த நாடாக பிரான்ஸ் திகழ வேண்டும் என்று நினைத்த இவன் புதிய நாடுகளை கண்டு பிடிப்பதில் ஆர்வம் கொண்டான். இதன் விளைவாக புதிய பிரான்ஸில் இவன் அதிக கவனம் செலுத்தினான்.

புதிய பிரான்ஸிற்கு 3 உயர் அதிகாரிகளை நியமனம் செய்தான்.

1. Governor. இவருக்கு உதவியாக 5 Councillors நியமிக்கப்பட்டார்கள். இதைவிட Local Governorsம் நியமிக்கப்பட்டார்கள். Governorதான் New Franceன் அதிபர். இவரது பொறுப்பில் இராணுவம், வெளிநாட்டிலாகா என்பன உள்ளடக்கப்பட்டன.

2. Bishop. இவரது பொறுப்பில் மதம் குறிப்பாக பூர்வீகக் குடிகள் மத்தியில் மதம் பரப்புவது, மற்றும் அரசியல் ஆலோசனைகள் என்பன.

3. The. Intendant இவரது பொறுப்பில் சட்டஇலாகா, நிதி, உள்ளூர் போக்குவரத்து, வைத்தியசாலை, உள்நாட்டு விவகாரம் என்பன.

Bishop ஆக Francois de laval, Intendant ஆக Jean Taylor ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

1665ல் புதிய உலகத்தின் (New World) படைத் தளபதியாக Prouville de Tracy நியமிக்கப்பட்டார்.

புதிய உலகம்

புதிதாக நாடுகளை கண்டுபிடிப்பதற்கும், கண்டு பிடித்த நாடுகளில் தமது ஆதிக்கத்தை கொண்டு வருவதற்காகவும் அமைக்கப்பட்ட போர்ப்படை புதிய உலகப் போர் படை எனவும், கண்டு பிடிக்கப்பட்ட நாடுகள் புதிய உலகம் எனவும் அழைக்கப்பட்டன.

1665ன் பிற்பகுதியில் இவர் New France வந்தடைந்தார். இவர் சுமார் 1300 இராணுவ வீரர்களுடன் வந்திறங்கினார். இவரது வருகையின் நோக்கம் 1663ல் பிரான்ஸுக்கும், பூர்வீகக் குடிகளுக்குமிடையே நடைபெற்ற சண்டையில் அடைந்த தோல்விக்கு பதிலளிக்கும் முகமாகவே வருகை தந்திருந்தார். பூர்வீகக் குடிகள் Mohavcak, Oncida, Onongiga, Caguga, Seneca ஆகிய 5 பிரிவினரும் ஒன்றிணைந்து மீண்டும் பிரான்ஸ் படைகளை எதிர்த்தனர். இதில் பூர்வீகக் குடிகள் தோல்வியடைந்தனர்.

இதன் பினனர் பூர்வீகக் குடிகள் மத்தியில் அச்சம் ஏற்பட்டது. குறிப்பாக பிரான்ஸிலிருந்து மேலும் படைகள் வரலாமென எதிர்பார்த்தார்கள்.

1677ல் புதிய பிரான்ஸில் பிரான்ஸுக்கும் பூர்வீகக் குடிகளுக்குமிடையே வர்த்தக உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்பட்டது.

1672ல் Irontenae கவர்னராக நியமிக்கப்பட்டார். 1690ல் இங்கிலாந்தின் Admiral Phipps 34 போர்க் கப்பல்களுடன் புதிய பிரான்ஸின் மீது தாக்குதல் மேற்கொண்டார். Irontenae சரணடைய மறுத்துவிட்டார். குளிர் காலம் ஆரம்பித்ததையடுத்து இங்கிலாந்து படை பின்வாங்கியது.

1713ல் Hudson Bay பகுதியும் மற்றும் அகாபியா (Cape Breton Island தவிர்ந்த) பகுதிகளை இங்கிலாந்து கைப்பற்றியது.

புதிய பிரான்ஸே இந்நாளில் Qubec என அழைக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சனத்தொகையை அதிகரிப்பதற்கென புதிய பிரான்ஸில் கையாண்ட வழிமுறைகள்

* பத்து பிள்ளைகளின் தந்தைக்கு 300 lirres பரிசாக அளிக்கப்பட்டது. (One lirre = 2 டாலர்) 12 பிள்ளைகளின் தந்தைக்கு 400 lirres அளிக்கப்பட்டது.

* பெண்கள் பிள்ளைகளைப் பெற்றபொழுதிலும் ஆண்களுக்கே பரிசளிக்கப்பட்டது.

* 20 வயதுக்குட்பட்ட ஆண் திருமணம் செய்தால் அல்லது 16 வயதுக்குட்பட்ட பெண் திருமணம் செய்தால் 20 lirres அளிக்கப்பட்டது.

  Family Allowence முறை இதிலிருந்தே ஆரம்பமானது.

* 1665க்கும் 1672க்கும் பிறப்பு விகிதம் வருடத்திற்கு சராசரி 700 என இருந்தது.

* Madeleine Coutean 1691ல் தமது 85 வயதில் காலமானார். இவர் 44 ஆண்டு ஆண்டுகள் புதிய பிரான்ஸில் வாழ்ந்தவர். இரு பெண் குழந்தைகளுக்கு தாய். ஆனால் இவரது இரு பெண்களுக்கும் 21 பிள்ளைகளும் 65 பேரக் குழந்தைகளும் உண்டு.

○ ○ ○

Sources:

* The Canadian Educator by Sara B. McLaughlin. The Iroquois Press. (1929)

* The History of Qubec by Leandre Bergeron. N. C. Press.

* Life in New France by Eric. Skcoch., Grolier Ltd. Toronto.

● ரகசியம்

○ மதுரூபன்

இலைகளின் வண்ண-வடிவ அழகுகளில்
ஒளிர்கிறது இயற்கையின் ரகசியம்

ஆண்-பெண் ஈர்ப்பின் இணை முடிச்சுகளில்
அவிழ்கிறது பிறப்பின் ரகசியம்

அவளின் மார்பகக் குழிவில்
தகிக்கிறது என் காதல் ரகசியம்

அழியா ரகசியங்களின் காந்த அலைகளில்
புரள்கிறது வாழ்வின் ரகசியம்

ரகசியங்களை மேவியிருக்கும் ருசிகளில் திளைக்காது
ரகசியங்களை அறிவதெப்படி?

அவரவர் ருசி; அவரவர் வழி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● மூன்று கவிதைகள்

○ அலெக்ஸ்

1. கிரணம்

இடைவெளியின்
இதம் குதூகலம்
முன்னைப்போன்ற வெளியற்று திரிதல்
மீண்டும்.

ஆகாசத்தின்
நீலம்
விரிவது பிரமையன்று

தினம் தினம் பயணித்த
சரளைத்தடமாய்
நீயும் நினைவும்.

○

2. கசிவு

நிரடுவது
நினைவுதானே
நீயும் ஸ்நேகம் தின்றுவிடு
நான் பிரசவிக்கின்றேன்
கடிக்காமல்
அடிக்காமல்
கண் உறுத்தி போகட்டும் ஆம்பல்.

விடு

○

3. விடைதேடி

மூன்றாவது உடலின்
துண்டு பட்ட துடிப்பு

வானம் பார்த்த
மீசைத்தலைக்கு
பின்னிய கோரை

காலற்றோ கையற்றோ
கிளைவிடும் ஸ்வரம்

தாண்டித் தவிக்கும்
வெளியில்
நிற்கும் மூச்சு

○ ○ ○

● ஓர் கவிதை

○ இஸ்பேட் ஜாக்கி

உலர்ந்துதிர்ந்த இதழ்கள் ஒட்டிய
உன் உதடோரம்
கவிழ்ந்த பெருந்துயரம் உன்
பெரும் ஸ்தனத்தில்
குடி கொள்ளும் மீண்டெழும் என்
துயரப்பாலைதனை
பூட்டும் மறதிப் பெருந்திரை (நன்றி: அதிர்ந்த
என் கைரேகைகளுக்கு)
கிடைத்தாய் நீ
விரிந்த பெரும் உடலின் கருங்காட்டினிடை
முகக்குழிகள் அப்பெரும் ஸ்தனத்தை தேடும்
ஸ்தனமின்றி மீண்டுமெழும் பாலை
நீ தேட என்னிடமும் இல்லை முடிப்பெரும் விழி

சரி போகட்டும்: திரும்பிப்படு என்
பொன் குஞ்சே
தேடலின்றி துவங்கும் நமது
முயக்கத்திற்கு ஏது

முகக்குழிகள் சங்கமம்
உதடுகளின் ஸ்பரிசம்
மிஞ்சட்டும் நமது கைரேகைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● மூன்று கவிதைகள்

○ குவளைக் கண்ணன்

1.

பக்கத்தில் நீ படுத்திருக்க
பல இரவுகளை புத்தகங்களில்
கழித்தபோதும்

மழலையைக் கேட்காமல்
இசைத் தட்டுகளில் தோய்ந்த போதும்

வான், நிலவு, நட்சத்திரம்
ஆறு, கடல், செடி, கொடி, மரம், மலர்
என்று
ஆழ்ந்திருந்த போதும்

முதலில் நீ முகம் சுளித்த போதும்
கூடிக் கூடிப் பேசிக் கொண்ட போதும்
கழிவறையிலும் கவிதையிலும் இருந்த
கரப்பான் பூச்சிகள் பற்றி
எனக்குத் தெரியாது

கடைசி வரை யாருக்கும் தெரியாது
கொடுக்குகள் வெளியே நீளும் வரை
மண்டைக்குள் நண்டு இருந்தது.

○

2. அதிகம் எழுதாதது குறித்து

அடிக்கடி பேனா தொலைந்து போகிறது

எப்பொழுதும்
இரண்டு கொம்புகளுக்கு இடையில்
மன அலைவுகளில்

பெயர் தவிர வேறொன்றும் எழுதாத
போன வருட நாள்க் குறிப்பேடு
ஆங்கிலத்திலிருந்து ஆங்கில அகராதி
தின மாத ரிப்போர்ட் புத்தகங்கள்
படித்த, படிக்கிற, படிக்க வேண்டிய
நாவல்கள், சிறுகதை மற்றும் கவிதைத்
தொகுப்புகள்
வார மாத தமிழ் ஆங்கில சிறு பெரும்
சஞ்சிகைகள்
வாழ்த்து அட்டைகள்
ரீஃபில் தீர்ந்த பேனாக்கள்
என்று
வைத்து எழுவ இடமில்லாமல்
கிடக்கிறது
என் மேசையில்.

○

3. இனி

கூரை பறந்தது
கால்கள் சரிந்தது
குழிகள் ஆழப் படுத்தி
கால்கள் நட்டு கிட்டித்தேன்
அடுத்த கூரை வரை
வெற்றிடத்தை வேய்ந்து கொண்டு

○ ○ ○

● மூன்று கவிதைகள்

○ ஆலன் திலக்

1. நோட்டுப்புத்தகமும் பூங்கொத்தும்

கவிதையெழுத
வாகாய் நோட்டுப் புத்தகம்
வாங்கச் சென்று
பூக்களிடம் மயங்கி
பூங்கொத்தொன்றை வாங்கி
யாருக்குத் தர பூங்கொத்தை?
யோசிக்க யோசிக்க
வாடின பூக்களும்.

நான் வாங்காதிருந்தால்
வேறெவரேனும் வாங்கி
ப்ரியமானவருக்குத் தந்திருப்பார்.

பூக்களும்
சிரித்தபடி சேருமிடம்
சேர்ந்திருக்கும்.

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. எனது கடை

மனங்களில்
சங்கமத்து விகாசத்தில் எனது கடை.
விற்பனையாளனாய் நான்
கொள்பவனாயும் சிலவேளை.
கேட்பதை இல்லையெனும் போதும்
இருப்பதை யாரும் வேண்டாத வேளையும்
இருப்பின் பயனின்மை
அலைக்கழிகிறது
மனதின் பூகம்பத்தில்.

என் சரக்கின் தரம்
வாங்குவோர் கண் ஒளியில்
மற்றவர் வாய் ஓசையில்.

சரக்குகளின் கைமாறல்
புன்னகைக்கும் மகிழ்வுக்கும்.

எல்லாம் முடிந்து
லாபநஷ்டம் அறிய
என் இருப்பு என்னவாகும்?

○

3. என் வீட்டு முற்றம்

என் வீட்டு முற்றம்
ஒரு ராஜாவைப் போல...!
அசோக மரங்கள்
நிமிர்ந்த வீரர்களாய்க்
காவல் செய்ய...
சூழ்ந்திருக்கும்
தென்னை மரங்கள்
தாழ்ந்து வணங்க...

மூன்று நாட்களுக்கு முன்
முளைவிட்ட வாழைக்குருத்தை
இனந்தெரியாத பயத்தில்
சுற்றி வரும் குருவியை
விளையாடும் பேரப்பிள்ளையென
புன்னகைத்து ரசிக்கும்
கோடை காலத்தின்
ஒரு மாலைப் பொழுதில்.

○ ○ ○

● நான்கு கவிதைகள்

○ **ரகுநாத் கணேசன்**

எனக்குள்
என்ன இருக்கிறது

ஏன்
இப்படி இருக்கிறேன்.

●

ஆக,
அது அப்படித்தானென
பிறகு முடிவாயிற்று

எப்படியென
யாருக்கும் புரியாமல்.

●

நிறைய இருக்கிறது
நான் எழுத

நிறைய இருக்கிறது
நான் பேச

ஆனால்
ஒன்றும் செய்ய முடியாதபடி
இருக்கிறேன்.

●

ஏன் என்று கேட்காதீர்கள்
என்னால்
முடியாது.

○ ○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● **ஐந்து கவிதைகள்**

○ **எம். யுவன்**

அணுகுதல்

நான் பார்வை[illegible]லும்
நீ தானியத்தாலும்
அவன் அம்பாலும்
அணுகுவது ஒரே
பறவையை. [illegible]
கூடோ இரையோ
நெருங்குதலை தொழிலாக
பறத்தலை வாழ்வாக
கொண்டது. காற்றை
தன்வயமாய் உண[illegible]ப்போது
மிதக்கவும் செய்கிறது.

○

ஆல்பர் காம்புவின் இரண்டு வாசகர்கள்

மற்றபடி
எனக்கும் கரப்பாம் பூச்சிக்கும்
வசிக்கக் கிடைத்தது
இதே உலகம்தான்.
புத்தக அலமாரி[illegible]த்
திறந்தவுடன் இறங்கிப் போன
கரப்பாம் பூச்சிக்கும்
ஆல்பர் காம்யுதான்
அபிமான எழுத்தாளர்.
நான் அடிக்குறியிட்ட [illegible]ளில்
முட்டையிட்டு வைத்திருக்கிறது.
என்ன, அதைவிட
சிலவரிகள், அதிகம் படித்திருப்பேன்.
சில தடவை அதிகம் புணர்[illegible]ருப்பேன்.
சில தடவை கூடுதலாய் உண்டிருப்பேன்.
சில தடவை.

○

உருமாற்றம்

கொக்கின் பெயர் கொக்கு
என்றறிந்த போது
வயது மூன்றோ நாலோ.
கொக்கென்றால் வெண்மையென
பின்னால் கற்றேன்.
அழகு என பறத்தல் என
விடுதலையென போக்கின்கதியில்
தெரிந்து கொண்டது.
வேலையோ வெய்யிலோ
வார்த்தையோ வன்முறையோ
உறுத்தும் போது கொக்கு
மிருதுவென உணர்ந்தது.
அவரவர் வழியில் வளர்கிறோம்
கொக்கு அடுத்து என்ன
ஆகும் எனும் மர்மம்
உடன் தொடர.

○

அழைப்பு

நிலவு என்னை அழைத்தபோது
சாப்பிடுவதை நிறுத்தியிருந்தேன்.
மின் தடையின் ராட்சஸக் குழந்தை
முழுசாக விழுங்கியிருந்தது என்னை.
நானும் உலகமும்
ஒருவருக்கொருவர் இல்லாது
போயிருந்த போது
முற்றம் விட்டு
நிலை தாண்டி
வெளியில் வரும்படி
அழைத்தது நிலவு.
பழுத்த இலைகளை
உதிர்ப்பதும்
உதிர்ந்த இடங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளிர்கள் துளிர்ப்பதுமாய்
கழிந்ததைக் கூட்டியும்
கூடினதைக் கழித்தும்
இருப்பைத் தக்க வைக்க
தெரிந்து வைத்
திருக்கிறது மரம்.

○

குரல்கள்

இதற்கு முன்பும்
கேட்டிருக்கிறார்கள்
வானத்திலிருந்து குரல்களை
திசைகள் இலக்கு
தர்மம் வன்மம்
எதையும்
நிச்சயித்தன அவை
மொட்டைமாடித் தனிமையில்
'கக்' கென்று
தகவல் துணுக்கு
உதிர்த்துச் செல்லும்
கூடு போகும் பறவை.

இன்று ஒலிகளற்ற
ஆகாயத்தை ஆள்கிறது
நிறங்களின் சப்த
ஜாலம்.

○

● மூன்று கவிதைகள்

○ பா. வெங்கடேசன்

ஊர்ப்ரதாபம்

இடம் பெயர்ந்து ஒரு குப்பை மேட்டில்
பிழைப்பு நடத்த வேண்டுமென்று
விதிக்கப்பட்டு விட்டபிறகு அந்த ஊரிலிருந்தா
வருகிறாய் என்று அடுத்தவன் விசாரிக்கும்
போதுதான் எவ்வளவு பெருமையாக
இருக்கிறது.
சாட்சாத் பரமேஸ்வரனே அடிமையாக கால்
பதித்து திருவிளையாடிய புண்ணியத்தல
மல்லவா
என்று கசிந்து கண்ணீர் மல்க அவன்
என் காலை கண்ணில் ஒற்றிக் கொள்ளாத
குறையாக உருகி வழியும் போது எனக்கும்
சொந்த
ஊரை விட்டு ஏன் வந்தோம் என்று
ஆகி விடுகிறது. ஒரு திருவிழா கார்த்திகை
யென்றால் கூட அதை வந்த இடத்தில்
ஏனென்று இவள் குழந்தையையும் இடுக்கிக்
கொண்டு மூச்சிரைக்கப் பின் தொடர
அங்கே போய்க் கொண்டாடி விட்டு வருவதில்
ஒரு திருப்தி.
இனிமேல் இங்கேதான் புதைபடும் வரை
என்றான பிறகும் கூட சொந்த ஊர் ஞாபகம்
பெண்களைப் போலவே ஆண்களுக்கும்
பிறவிப் பிணியாகக் கூட இருக்கக் கூடும்.
தெரியவில்லை.
பிழைப்புக்கு வழி செய்யாத மண்ணென்று
அதை வெறுத்து வெளியே பறக்கத் துடித்த
காலமெல்லாம் கண் முன்னே
நிழலாடுகிறது காலம் கடந்து விட்டதே
என்று இப்போது நினைத்துப் பயனொன்றும்
இல்லைதான். கைலாசவாசிக்கே பிட்டுக்கு மண்
சுமந்தாவது பிழைக்க ஒரு இடம்
அவன் சொந்த ஊரில் வாய்க்காத போது
சாதாரண நரன் நான் எந்த மூலைக்கு
பொல்லாத வலிய விதியின் முன்.

○

தீபாவளித்துக்கம்

யாரோ ஒரு அசுரன் தன் திவசத்தை
ஒழிந்தான் என்று இனிப்புச் செய்து
விளக்கேற்றி சினிமாவுக்குப் போய் எல்லோரும்
ஆனந்தமாகக் கொண்டாடட்டும் என்று வரம்
கேட்டு வாங்கிக் கொண்டு செத்தான்.
வரங்கள் எதுவும் தேவைப் படாத
பெரியவன் என்று தன்னைச் சொல்லிக்
கொள்ளும்
மனிதனுக்கோ தன் ஆத்மா அடுத்தவன்
கண்களுக்குத் தெரிந்தாலும் தெரியா
விட்டாலும் தன் கண்களுக்கு
புண்ணியாத்மா வாகவேதான் இன்னும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிந்து கொண்டிருக்கிறது. அந்த அசுரன்
செத்து யுகங்கள் பல கடந்து
போய் விட்டன. அவனைக் கொன்றவன்
இவனைக் கொல்லத் தன்னாலாகதென்று
என்றோ விஷத்தைக் குடித்துப் பார்த்து
விட்டான்
அவனுக்கும் சேர்த்து வெடிகள்
வெடி வெடியென்று வெடிக்கின்றன.
புத்தாடைகள்
சரசர வென்று காலடியில் மிதி படுகின்றன.
கடைசிக் கெட்டவன் என்று ஒரு இளிச்ச
வாயனை அடையாளங்காட்டும்
அறுதப் பழைய தீபாவளிகள் சலிக்கச் சலிக்க
ஆயிரம் பார்த்தாயிற்று. காலண்டர் தாள்களைக்
கிழித்து வெடியாச் சுருட்டி வெடித்துத்
தீர்த்தாயிற்று. புதிய இரண்டாவது
தீபாவளியைத்
துவக்கி அதை நீயும் நானும் கொண்டாட
இன்னொரு அசுரன் பிறக்கத்தான் வேண்டும்.
தன்னால் கெடுதல் விளையும் தன் காலின் கீழ்
மிதிபடும் எறும்புகளும் உள என்று ஒத்துக்
கொண்டு உயிரை விட ஒரு பலியை
எங்கே எப்போது
யாருக்கு எதிராக கருத்தரிக்கப் போகிறாளோ
அவனையும் உன்னையும் என்னையும்
பெற்றவள்.

○

சிவாஜிகணேசன்

அப்பாவை எனக்கு ரொம்ப நாட்களாகத்
தெரியும். சிவாஜி போலிருக்கும் அப்பா
தெரிய வந்தது கொஞ்ச நாட்களாகத்தான்.
எழுபதுகளில் தொலைந்து விட்ட தன்
நிழலைப் பின்னும் தேடிக்
கொண்டிருக்கும் நடிகன் இன்னும்
தன்னிடம் உயிரோடு இருப்பது பற்றித்
தலை கொள்ளாத பெருமை இருந்தது
அவருக்கு. பேச்சு நடையுடை
பாவனைகளில் ஒரு திரைப்பிம்பத்தைப்
பிரதிபலிப்பது சிறு பிள்ளைத்தனம் என்பது
என் அபிப்பிராயம்.
''மேலும் சிவாஜியே ஆங்கில பிராண்டோவின்
போலி''
''என்றால் நீ உன் புத்தகங்களின் போலி.''
நேற்று வந்தவள் என்னிடம் அச்சசலாக
அப்பாவைப் பார்க்க முடிகிறதேயென்று
ஆச்சர்யப்
படுகிறாள். என் தலைமுறை வேறு
என் திரைகளின் கதாநாயகன் வேறு என்று
சொல்லியுங்கூட என் அசைவுகளில் அப்பா
வந்து உட்கார்ந்து கொள்வது
கண்களுக்குத் தப்பவில்லை யென்கிறாள் அதில்
சிவாஜியின் சாயல்
ஆனால் இல்லை யென்றும் உறுதியாக.

○

● தேடல்

○ **பாவண்ணன்**

தாமதித்து வருமாம் வண்டி
எங்கும் மனிதத் தலைகள்

சரியான தகவல் இல்லை
எந்த வண்டியில் வருகிறானோ
சந்தேகம் முறுக்கும் மனசை

சொடக்கும் நேரம்தான் முகம் தெரியும்
கூலிகள் சுமந்த பெட்டிகள் மறைத்துவிடும்

அலையும் முகங்களோ ஆயிரம்
அதைரியம்தான் குழப்புகிறது
நழுவவிட்டு விடுவேனோ

உடல்வாகு மாத்திரம் அவன்போல இருக்கும்
முகஜாடை பொருந்தும் சிலர்க்கு
எனினும் அவனில்லை அவர்கள்
நெருங்காமலேயே புரிகிறது

எல்லாம் பொருத்தமாய் இருந்தவன்
தானில்லையென்று உதட்டைப் பிதுக்கினான்

போவதா
இன்னும் கொஞ்சம் காத்திருப்பதா

கைவீசி வந்தான் ஒருவன்
உந்தித் தள்ளியது மனம்
பரபரத்து முன்னேறி நடந்தேன்

பெயர்சொல்லி அழைத்தது குரலொன்று
திரும்பினேன்
இரைக்க இரைக்க வந்தபடி
வீட்டிலிருக்கிறான் அவன் என்றான்

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

● நாட்கள்

○ ராதை

இரவு,
விளக்கின் துணையையும் இழந்தாயிற்று.
வெறிச்சோடிப்போன வீடுகளில்
துரத்தமுடியாத பிசாசு
மௌனம்.
எங்களின் அச்சம்
சுவரில் துடிக்கும் கடிகாரம்.
எங்களின் துக்கம்
யன்னற் கண்ணாடிகளில் வழிந்தோடுகிற
மழைநீர்....

பார்,
எங்களிடம் வார்த்தைகளில்லை;
ஆண்டவனைத் தவிர நம்பிக்கையுமில்லை.
காற்று
அனைத்திற்கும் சாட்சி.

○

● எட்டு கவிதைகள்

○ வள்ளுவன்

போருள் நானும் என்னுள் போரும்

1.

எனது நிகழ்காலம் கொடியதும் இனியதும்
கணங்களும் மணிகளாய்ப் பெறுமதி கொள்ளும்.
இந்தக் காலம் என்னையும் உயிர்ப்பித்தது.
மரணத்தைச் சுமந்துவரும் காற்றுக்கும்
தெரியும்
கொல்ல முடியும் வெல்ல முடியாதெம்மை
என்று,

2.

கோடை வெய்யில்.
கிளையில் அலையும் இலைகள்
விசிறி வருடிவிடும்.
கோடை; மரங்களை வாட்டும்
எனினும்
அவை வாழும்
எமக்காய் இலை அசைத்து.
ஆழ நீரெடுத்து
அவை வாழும்
எமக்காய் இலை அசைத்து.

3.

எனது புறவுலகு
ஒரு சுட்டி விளக்கொளியின்
வட்டத்துள் சுருக்கப்பட்டு
இருளால் நெரிக்கப்படினும்
அண்டங்களின் விளிம்புகளைத் தேடி
விரியும் அகவுலகம்.

4.

நேற்றைய திகதியைக் கிழித்துப் போட்டு
இன்றும் நுழையும் பயங்கரம்.

அடுத்த கணத்தை உறைய வைக்கும்
இந்தக் கணத்து அழிவுகள்.

இன்றைய பக்கம் மரணத்தைச் சுமக்க;
அசைந்து அஞ்சலிக்கும்
தினக் குறிப்பின் நாளைய பக்கம்.

மரணமும் நாமும் கூடியிருக்கும்
ஒரு முகாமில்
எப்போதும் என்னுள்ளே
பூத்திருக்கும் நம்பிக்கை.

5.

சூழலின் கொடூரத்தை
துரத்தியபடி
என் மனதுள்
உன் இருப்பு.

சாற்றிலே உயிர்கொல்லி
ஆர்ப்பரித்து வருகையிலும்
உயிர்கொல்லி வாய்பொத்தி
உள்நுழையும் உன்சிரிப்பு.

கரங்கள் பற்றி
உயிர்த்த கணங்களில்
எழுந்த அதிர்வுகள்
பெருகிப் பேராறாய்ப் பாய்ந்தபடி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போரொ[illegible] து ஒ[illegible]கில்
மனிதராய் வாழ்வோம்.
வாழ்வைக் கவிதை செய்வோம்.*

---

* கவிஞர் சு. வில்வரத்தினத்தின் உணர்வுபூர்வமான வார்த்தைகள்.

6.

நேற்று
இறந்த நண்பனுக்கு
இன்னும்
இருக்கும் நண்பனது
அஞ்சலிகள்.

நண்பா,
உப்பிலும் மலிவாய்
எமதுடலம்.
எப்பவும் சிதறும்.
ஆனாலும்
ஒரு கணம்
அதிர வைத்தது
உனது சிதறல்.

ஒரு துளி கண்ணீர்.

உனக்குத்தான் தெரியுமே
எங்கள் வாயடைத்து
வெகுநாட்கள் ஆயிற்றென்று.

ஓராயிரம் வார்த்தைகள் கலந்து
ஒருதுளி கண்ணீர்.

○

அமைதி

7.

இயந்திர எருமையில்
இளைஞரைக் கவர்ந்தனர்.

புழுதியை வாரி
விரைந்தது வாகனம்.

கண்களை இழந்தோம்.

குரல்கள் கிழிந்தன.
கூந்தல்கள் கலைந்தன.

அகால மரணத்து
அலறலை ஊரே கொட்டிற்று...

போருக்கு எழுந்தவர்
பொம்மைகளாக;
மூச்சுவிடும் சடலங்களாயினர் மக்கள்.

○

பயணம்

8.

நடந்து வர;
திமிர்ந்து வந்தன பனைகள்.
திகைக்க வைத்து
நிமிர்த்து நின்றன அவைகள்.

கடந்துவர;
சிறுதுரும்பாய்த் தெரிய அவை
எம்முன் வந்தன புதுப்பனைகள்.

இன்னும் வழி நடக்க
இவையும் துரும்பாய்ப்போம்
நிமிர்ந்துவரும் புதுப்பனைகள்.

போவோம் முன்னோக்கி
போவோம் முன்னோக்கி.

○ ○ ○

● மரணத்தின் முன்பாக

○ ஆனந்த் பிரசாத்

பத்தோடு பதினொன்றாக
சாவதில் எனக்குச் சம்மதமில்லை!
சாவின் சம்மதத்தோடு
சாவதிலும் சந்தோஷமில்லை.
சின்னஞ்சிறு கதைகளிலிலும் கூட
எதிர்பாராத திருப்பங்களை
எதிர்பார்ப்பவன்...........எப்படி?
அந்தக் குறுகுறுத்த விழிகளின்
கள்ளமில்லாத பார்வையை
என்றோ ஒரு நாள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்து விட்டால் போதும்
உடனே செத்து விடலாம்
உறுப்புகளின்
ஒவ்வொரு அசைவையும்
'கரன்சியில்' கணக்குப்போட
முடியாத முட்டாளை
சந்தித்தபின்பு சாவு வரட்டும்
பொய்ச் சாயத்தைப் பூசாது விட்டதில்
உலர்ந்துபோய் விட்ட
உதடுகளை ஒரு தடவை
முத்தமிட்ட பிறகு
உறிஞ்சி, உறிஞ்சி
அழுத்தி, அழுத்தி
நாவுகளால் உண்மையை
ஸ்பரிசித்த பிறகு
ஸ்மரணையற்றுப் போகட்டும்.
அது வரையில் உயிரை
அசைய விட மாட்டேன்
நோய்கள் கூட என்னை
ஆரோக்யமாகப் பராமரித்து வரும்.

○

எச். எஸ். சிவப்பிரகாஷ் கவிதைகள்

தமிழில் : பாவண்ணன்

கன்னட மொழியின் நவீன கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர் எச்.எஸ். சிவப்பிரகாஷ். இவர் சிறந்த நாடக ஆசிரியரும்கூட. செறிவான சொல் தேர்வும், வரிகளுக்கிடையே அவர் விட்டுச் செல்கிற மௌனமான இடைவெளியும் இவர் கவிதைகளின் பலம். அவரின் மூன்று கவிதைகள் இங்கு இடம் பெறுகின்றன.

இத்தருணங்கள் அழியாமல் இருக்க வேண்டும்...

அழியாமல் இருக்க வேண்டும்
இத்தருணங்கள்

குன்றின் உச்சியில்
மைல் நீளஇறக்கைபோல் மேகமிருந்தாலும்
சிலைபோல இருக்கும் பாறைகள்

நீலம் பச்சை நடுவில்
ஜோடி வானவில்கள்

ஜோடிக் குருவிகளே
வானைத் துளைத்துப் பாடிப்பறங்கள்
பறவை மொழியைக் கற்ற சாலமன்
இப்போது சக்ரவர்த்தி

அழியாமல் இருக்கட்டும் இத்தருணங்கள்
தாளமற்ற ஆட்டம்
மேளமற்ற பாட்டு
துடிக்கும் இதயம் சொல்கிறது
குன்றுக்கு காத்துள்ளது மி[illegible]க்கும் வெடிகள்
மேகத்துக்கு மின்னல் கத்தி
ஜோடி வானவில்களுக்கு மழையின் தாக்குதல்

வாட்டமறியாத வளத்தவரே
ஜோடிக்குருவிக் கூட்டங்களே
வானம் நோக்கித் தாவுங்கள்
தரையில் எங்கும் பரவுங்கள்
காற்றைப் போல
காலம் நிறம் கண்கள் இறகு
பொதிந்த காற்றைப் போல

அழியாமல் இருக்கவேண்டும்
தாளமற்ற ஆட்டம்
மேளமற்ற பாட்டு
ஒவ்வொரு நொடியும்

○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. நீ இல்லையென்றால்

எனக்குத் தெரியும்
இத்தோட்டத்துப் பூக்கள் மலர்வது
நீ இல்லையென்று நிற்பதில்லை

ஒன்றன்பின் ஒன்றாக வண்ணத்துப் பூச்சிகள்
கணநேரம் பூக்களில் அமர்ந்து பறப்பதும்
நிற்பதில்லை
நீ இல்லையென்று

எனக்குத் தெரியும்
சந்தைக்குப் போகும் இத்தோட்டத்துப்பூக்கள்
நீ உள்ளாய் என மறுப்பதும் இல்லை
அல்லது
சாவென்னும் பூனை
வண்ணத்துப் பூச்சிகளை
தின்னவருவதும் தடைபடுவதில்லை
நீ உள்ளாய் என.

இதற்கு பின்னும்
காற்றுக்கு நறுமணம் கொடுக்கும் பூக்கள்
என் உயிராவதில்லை
வெளிச்சத்தில் சிதறிய பூவின் வர்ணம்
என் விழியைக் கவர்வதுமில்லை
சந்தைக்கே கிட்டாத ஒரு பூ
இவ்வுலகத்தில் எஞ்சுவதுமில்லை

இவை எல்லாவற்றிற்கும்
நீ இல்லையென்றால் அர்த்தமே இல்லை.

○

3. நினைவு

முதலிரவுக்கு முன்பு ஐந்து ரோஜாக்களைப்
பறித்துச் சூடியது நினைவிலுள்ளதா

முதல் தழுவலில் உருகிய இன்பம்
கூந்தல் கருமைபோல் கரைந்தது
இப்பொழுது தலையை நிறைக்கும் நரை

கணவன் இறந்த தினம்
அழிந்தது குங்குமச் சந்திரன்
அதற்கப்புறம் பற்பல முறைகள்
வானத்தில் சந்திரன் வந்ததும் போனதும்
உலர்ந்த நெற்றிக்கோ குங்குமத்தின்
நினைவில்லை.

இறங்கிச் சரிந்த நரைமுடி போல
சிற்சில சமயங்களில் அதிகாலைப் பனி

அதிகாலைப் பனிபோல தெளிவற்ற நினைவு
மறதியோ காலக் கொம்பு.

○

○ ○ ○

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

SSS
DRIVER TRAINING

Tel : (416) 275-1821 (Bus)
(416) 897-3567 (Res)
Pager (Numeric) : 375-5035

Siva S. Sothy

Govt Licenced Instructor will teach you the best to ensure you to pass the road test

உங்கள் வாகன ஓட்டும் அனுமதிப்பத்திரத்தை *(Driver's Licence)*
எவ்விதத் தடையும் இன்றிப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்

- Competetive rates
- Course fee tax duductible
- Certificate for insurance discount
- Fully insured dual controlled automatic cars
- Advanced and quality instructions
- Driving lessons available 7 days a week
- Road test appointment arranged and Provide cars for Road test
- $ 20 Per Lesson

- குறைந்த கட்டணம்
- வரிக்கழிவு
- காப்புறுதிக் கட்டணம்
- முற்றிலும் காப்புறுதி செய்யப்பட்ட Dual Brake பொருத்தப்பட்ட Automatic கார்கள்
- திறமையான விளக்கக் குறிப்புகள்
- காலை, மாலை, வார நாட்கள் இறுதி வகுப்புகள்
- Road test இற்கான திகதி நிர்ணயம், மற்றும் கார் வசதிகள்
- பாடமொன்றிற்கு $ 20

To save time and money
Serving cities : Mississauga, Toronto and Scarborough

Free pick up

489 Lana Terrace, Mississauga. Ontario

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

★ சுடு சுடு அப்பம், தோசை எங்களது காலை SPECIAL

★ வட அமெரிக்காவில் மிகப் பெரிய இலங்கை உணவு விற்பனை நிலையம்

★ சகலவிதமான உணவுவகைகளிற்கும்

★ உங்கள் திருமண வைபவங்களிற்கு தேவையான மணவறை, தலைப்பாகை, குத்துவிளக்கு போன்றவற்றை எங்களிடம் வாடகைக்குப் பெற்றுக்கொள்ள முடியும்.

★ விமானச் சீட்டுகளிற்கு சுந்தரியைத் தொடர்பு கொள்ளுங்கள்.

சிவாஸ் ரேடிங் கம்பனி

SIVA'S TRADING CO. LTD.

3852 FINCH AVE. E. KENNEDY/FINCH, SCARBOROUGH

TEL : **321-2739**

ARUNA VIDEO CENTRE

PROFESSIONAL TRANSFER OF VIDEOS THROUGH DIGITAL SYSTEMS AT TELEVISION STANDARD LEVEL

VIDEO RECORDING & SOUND SYSTEM ● WEDDING & PARTYS

A. BALAN

Tel : (416) 467-0806 or 467-9916

31st De[illegible]s Drive, 914 Donmills, Ontario M3C 1G7

அருணா வீடியோ

திருமண பிறந்ததின விழாக்கள் மற்றும் பொது வைபவங்களையும் சிறந்த முறையில் வீடியோ படம் பிடிக்க நாடுங்கள்

அ. பாலன்

(416) 467-0806; (416)467-9916

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TORONTOவில் வாசகசாலையுடன் கூடிய நூலகம்

"தேடகம்"

வெளிவந்து விட்டது

வ. ஐ. ச. ஜெயபாலனின்

'ஒரு அகதியின் பாடல்'

வெளியீட்டாளர் : தேடல் பதிப்பகம்

□ □ □

சேரனின் "எலும்புக் கூடுகளின் ஊர்வலம்"

கவிதைத் தொகுப்பு பெற்றுக் கொள்ள,

தொடர்புகொள்ள வேண்டிய முகவரி :

தேடல் பதிப்பகம்

566 Parliament St

TORONTO—ONTARIO M4X 1P8

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தோ சிலோன் சினக் அன்ட் ஸ்பைஸ்

இலங்கை இந்திய மக்களின் நன்மை கருதி சகல வைபவங்களுக்கு மான உணவுப் பொருட்கள் எங்களினால் தயாரித்து குறித்த நேரத்தில் வழங்கப்படும். இடியாப்பம், பிறியாணி, கொத்து ரொட்டி, தோசை, அப்பம், இறைச்சி, மீன், நண்டு, இறால், கறி வகைகள், வடை, றோல்ஸ், பற்றிஸ், கட்லட், சமுசா, கேக் வகைகள், லட்டு மற்றும் இனிப்பு வகைகள்,

மேலதிக விபரங்களுக்கு :

292-2272-298-7255
4800 SHEPPARD AVE. EAST., UNIT 201,
SCARBOROUGH, ONT. MIS-4N2

ஈழம் ஸ்டோர்ஸ்

- உங்களுக்கு தேவையான சகல இலங்கை இந்திய உணவுப் பொருட்கள், இறைச்சி, இறால், மீன் கணவாய் உடன் மரக்கறி வகை, பால் பழ வகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
- மேலும் பிறந்த நாள், திருமண நாள் மற்றும் பண்டிகை நாட்களுக்கு தேவையான பரிசுப் பொருட்கள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.
- உங்களது திருமண வைபவங்களுக்கு தேவையான மணவறை, தலைப்பாகை, குத்து விளக்கு போன்றவற்றை எங்களிடம் வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

T. P. (416)-298-7255

V. P. ENTERTAINMENT

- தமிழ், மலையாள, சிங்கள வீடியோக்கத் வாடகைக்கும் விற்பனைக்கும் எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- ECHO (Original) ஒலிப்பதிவு நாடாக்கள் C.D. இசை லேசர் இசைத்தட்டுக்கள், சகல விதமான தமிழ் சஞ்சிகைகள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்.
- குறைந்த செலவில் FAX சேவை
- TAMIL VIDEO MOVIE RENT FOR DAY99
- திருமண வைபவங்களை மனதைக் கவரும் வண்ணம் வீடியோவில் படம் பிடித்துள் தரப்படும்.

T. P. 609-1744 FAX :-609-3395

4565 SHEPPARD AVE. E.
SCARBOROUGH. ONT. MIS-IV3

இந்தோ சிலோன் ஃபுட்ஸ்

இலங்கை இந்திய தானிய வகைகள், கடல் உணவு, ஆட்டிறைச்சி வகைகள்

மங்கள வைபவங்களுக்கான பரிசு வகைகள்

தமிழ் ஓடியோ வீடியோ C. D. லேசர் இசைத் தட்டுக்கள் போன்றவைக்கு மிசுசாகாவில் நாட வேண்டிய இடம்.

இந்தோ சிலோன் ஃபுட்ஸ்

25 AGNES, ST–MISSISSAUGA. T. P. 896–0865

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

For Private Ciruculation only

Kaalam Tamil Quarterly

ஸ்ரீ சிவா ஜுவலரி

SRI SIVA JEWELLERY

721 Bloor St. W. Suite 2C, Toronto, Ontario

(416) 531 – 4867

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org